www.tamilarangam.net

# உரிமைப் போராட்டம்

இதழ் 1 | நன்கொடை ரூ. 5-00 | மார்ச் 2000



காந்தியக் கோட்டைத் தகர்க்க வந்த கருமருந்தே!
கனென்றெழுந்தோம்! - உன் - கனவுகளை நினைவாக்க
எரிமலையாய் மூண்டெழுந்தோம்!!

## தமிழக மனித உரிமைக் கழகத்தின் அரசியல் ஏடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளே...


* தலையங்கம்

* ஓணானியம்
  இந்துத்துவம் ஏற்றி வைத்த கற்பிதங்களும் அதற்கெதிரான சிந்தனை முறையின் அவசியமும்,

* நிலமீட்பு போராட்டம் வீரக்குடி நிலப்பிரச்சனை

* தமிழக விவசாயிகள் சங்கங்களும் விவசாயப் பிரச்சனைகளும் குறித்த ஓர் ஆய்வு

* லேபில் அரசியல் – ஓர் உரையாடல்

* ஏழைகளின் விலா எலும்பை முறிக்கும் பாரதிய சனதா அரசின் பட்ஜெட்

* கவிதைகள்

* களச் செய்திகள்


## உரிமைப் போராட்டம்

வாசகர்களின் படைப்புகள்
விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன,

நூல் விமர்சன பகுதிக்கு ஒரு
பிரதி அனுப்ப வேண்டும்.

## சந்தா விபரம்

தனி இதழ் ரூ–5.00
ஆண்டு சந்தா ரூ. 20.00
ஐந்தாண்டு சந்தா ரூ. 100.00

இவ்விதழ் வெளிவர
நன்கொடை அளித்த
நண்பர்களுக்கும்
சனநாயக சக்திகளுக்கும் நெஞ்சார்ந்த
நன்றியினை தெரிவித்துக்
கொள்கிறோம்!


படியுங்கள்

# புதிய தடம்

சமூக விஞ்ஞான பயிலகத்தின்
கலை இலக்கிய இதழ்

தொடர்புக்கு



**மேகவண்ணன்**
28,பி. லெட்சுமண தீர்த்தம் தெரு,
இராமேஸ்வரம்–623526.
இராமநாதபுர மாவட்டம்.


## கானல் கூடுகள்

இந்த இடத்தில்தான்
மாணிக்கத் தேவர் மகன்
மாரியாயியை
கையைப் பிடித்து இழுத்தான்

இதுதான்
கள்ளுக்கடை நாடாரின்
வப்பாட்டி வீடு.

இந்தக் குளத்தில்
தூண்டி போடப்போய்தான்
சிங்காரவேல் படையாச்சி
என்னை
செருப்பாலடித்தான்.

இந்த தோப்பை
ஏலம் கேட்டதற்குத்தான்
முருகேசண்ணனை
கழுத்தறுத்துக் கொன்றார்கள்
இந்தக் கோயிலில்
வேசம் கட்டுவதை வேடிக்கை பார்க்க
சுவரேறி குதித்ததற்குத்தான்
கார்மேகக் கோனார்
எங்களை கட்டி வைத்து அடித்தான்
இந்த சொரன கெட்ட
சேரி மண்ணைத்தான்
நாங்கள்
செருப்புக்காலால் மிதிக்கிறோம்.

–தய். கந்தசாமி.

www.tamilarangam.net

உரிமைப் போராட்டம்
தமிழக மனித உரிமைக் கழகத்தின்
அரசியல் ஏடு

இதழ் 1

சனவரி–மார்ச் 2000

தனிச்சுற்று காலாண்டு இதழ்



ஆசிரியர்
**குமரன்தாசு**

ஆசிரியர் குழு
**சி. மோட்ச குலசேகரன்**
**மருத. செல்வராசு**
கோட்டை **கா.இராசமாணிக்கம்**

சிறப்பாசிரியர்
**அரங்க. குணசேகரன்** எம்.ஏ.,
பொதுச்செயலாளர்

தொடர்பு முகவரி

குமரன்தாசு,
எண்.144 காளீஸ்வரி காம்பவுண்டு,
இராமகிருஷ்ணா தெரு
புதுச்சந்தை (வடக்கு)
காரைக்குடி – 630 001.
சிவகங்கை மாவட்டம்.

*தலையங்கம்*

# நம்முன்னுள்ள சவால்கள்

2000 ஆண்டுகளின் நெடிய வரலாற்றுடன் நம்மிடமிருந்து விடைபெற்றுக் கொண்ட காலம் இருபத்தோறாம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இனக்குழு சமூகங்களிலிருந்து வளர்ந்த தன்னாட்சி சிற்றரசுகள் தோற்றமெடுத்து, சிற்றரசுகளிடையே எழுந்த ஆதிக்கப் போட்டியில் பேரரசுகள் உருவாகின. தொலைதூர சிற்றரசுகளை தன்கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியாமல் போன பேரரசுகள் நிலைகுலைந்த போது வேறு சில சிற்றரசுகள் பேரரசுகளாய் வளர்ந்தன. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகமான முடியாட்சி, சமூகங்களில் புதிதாய் எழுந்த பட்டறை தொழில் முதலாளிகள், வியாபாரிகள் பிற பலதரப்பட்ட வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு குடியாட்சி சனநாயகம் என்ற கோட்பாட்டில் முடியரசுகள் வீழ்த்தப்பட்டு மக்களாட்சித் தத்துவத்தின் கீழ் மனித குலம் புதிய தடங்களில் கால் பதித்து வந்தது.

இப்படியான மனித குல வரலாற்றில் வணிகமும், தொழிலும், விஞ்ஞானமும், நவீன தொழில் நுட்பமுமாக கடந்த 2000 ஆண்டுகள் மிகப்பெரிய மாறுதல்களைச் சந்தித்திருந்தாலும் சனநாயகம் என்ற கோட்பாட்டில் வளர்ந்த முதலாளிய பூதம் கோடானுகோடி உழைக்கும் மக்களின் தொழிலாளர்களின் வறுமைக்கும் அவர்கள் கொடூரமாக சுரண்டப்பட்ட அவலங்களுக்கும் காரணமானதுடன் அதன் மக்களாட்சி சனநாயகம் எந்த தீர்வையும் தரவில்லை. மாறாக அதற்கு எதிராகப் போராடியவர்களை கொடுங்கரங் கொண்டு அடக்கி ஒடுக்கி இரத்தம் குடிக்கவே செய்தது.

காரல் மார்க்ஸ் என்ற ஒரு கதிரவனை காலம் தனக்குள் கொண்டுவந்து நிறுத்தியது. வர்க்கப் போராட்டம், சோசலிசம், கம்யூனிசம் என்ற கருத்தியல் வளர்ச்சிக்குப் பிறகு தான் உலகத்தின் இன்னொரு முகாம் இருப்பதை கண்டு எல்லா நாடுகளிலும் இருக்கும் உழைப்பாளிகள் நம்பிக்கையுடன் தங்கள் கூன் முதுகை நிமிர்த்திக் கொண்டனர்.

பார்ப்பனர்களுக்கு உதவவே பிரம்மதேயங்களை உருவாக்கிய இராசராசசோழனையும், ஆரிய ஜெர்மானியர்களே ஆளப் பிறந்தவர்கள் என்று கொக்கரித்த ஹிட்லரையும் கண்ட கடந்த 2000 ஆண்டுகளில்தான் மனித குலம் காரல் மார்க்ஸையும், எங்கெல்ஸையும், லெனினையும், ஸ்டாலினையும், மாவோவையும், பெரியாரையும், அம்பேத்கரையும் வரலாற்றில் சந்தித்தது.

உலக மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ள இந்தியாவின் வரலாற்றில் பெருமைப் படத்தக்க அம்சங்கள் என்று சொல்லிக் கொள்ளத்தக்க எதுவும் நாகரிக உலகத்திற்கு முடியவில்லை. இந்திய துணைக் கண்டத்தில்தான் மனிதனை மனிதன் தொடுவதும், பார்ப்பதும், மண உறவு கொள்வதும், வீதியில் நடப்பதும் கூட அருவருப்பானது என்ற தீண்டாமைக் கொடுமைகள், சாதிய ஒடுக்குமுறைகள் நிலவுகின்றன. எமக்குத் தெரிந்து உலக வரலாற்றில் ஒரு மனிதன் தன் எச்சிலை துப்பிக்கொள்ள தன் கழுத்திலேயே கலயத்தைக் கட்டித் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டும் என்று விதிக்கப்பட்ட சாதிக் கொடூரம் வேறெங்கும் இருந்ததாகத் தெரியவில்லை.

இங்கு பிறப்புதான் அனைத்தையும் தீர்மானித்தது. அறிவும், உழைப்பும், நேர்மையும், துணிவும், தியாகமும், ஒழுக்கமும் மனிதனுக்கான தகுதிப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு குடிப்பிறப்பே ஒருவனின் தகுதியை திறமையை தீர்மானித்தது. பார்ப்பனர்களாக வெள்ளாளர்களாக, நாட்டுக்கோட்டைச் செட்டியார்களாக, நாயுடுவாக, ரெட்டியாக இருக்கிற சாதிகளிலே பிறந்துவிட்டாலே அவனுக்கு முழு மனிதனுக்குள்ள எல்லா தகுதிகளும் குவிந்துவிடும். அவன் அறிவாளியாக, படித்தவனாக, நேர்மையாளனாக, துணிவு உள்ளவனாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் மேற்சொன்ன எல்லா ஆற்றல்களும் பொருந்தியவனாயினும் அவன் சேரியில் பிறந்து விட்டால் கீழ்மகன், இழிகுலத்தான் என்பதுதான் இந்தியாவின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறிப்பாக கடந்த 1500 ஆண்டுகால இந்தியாவின் எழுதப்படாத சட்டம்.

முடியாட்சிகளாயினும், பிரிட்டன் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்தியாவிலும், பிரிட்டிசார் இங்குள்ள தங்களது விசுவாசிகளிடம் இந்தியாவை ஒப்படைத்து விட்டுச் சென்ற கடந்த 50 ஆண்டுகால நிலையிலும் நிரந்தரமான உண்மை இதுதான். இந்தியன் தன்னை வர்க்க வகைப்பாட்டிற்குள் பொருத்திப் பார்ப்பதை விட, தன்னை ஒரு தேசிய இன அடையாளத்திற்குள் பொருத்திப் பார்ப்பதைவிட, தன்னை ஒரு கட்சி அதன் கொள்கை வழிபட்ட தொண்டன் என்று பார்ப்பதை விட தன்னை நவீன உலக நாகரிக மிக்க மனித குலத்தின் ஒரு உறுப்பினனாக பார்ப்பதைவிட ஒரு இந்துவாக கருதிக் கொள்ளவும், தன்னுடைய வாழ்க்கைத் தளங்களை சாதிய உறவுகளோடு பொருத்திக் கொள்வதற்குத் தான் முன்னுரிமை கொடுக்கின்றான். இத்தகைய சூழலில் சோசலிச கருத்தாக்கங்களும் கம்யூனிஸக் கோட்பாடுகளும் கூட அய்ரோப்பிய மாதிரியிலே பொருத்தப் பட்டது எனவே தான் உலகத்தைத் தலை குப்புற புரட்டும் மார்க்சியம் வேர்விட்ட அதே காலத்தில் பெரியாரியமும் அம்பேத்கரியமும் இந்துத்துவத்தை அசைத்து சில தகர்வுகளையும் முன்னேற்றங்களையும் கூட எட்டி பிடித்தது. ஆனாலும் சாதி இழிவுக்கும், சாதி அதிகாரத்திற்கும் தீண்டாமைக் கொடுமைக்கும் அது முடிவுகட்டி விடவில்லை. மனித உணர்வுகள், மனித உரிமைகள், மனித உறவுகள் என்னும் மாண்புகள் வெற்றிபெறவில்லை. இவைவெறும் பகுத்த றிவு பிரச்சாரத்தால் நிறைவடைகிற விசயமும் இல்லை. இட ஒதுக்கீட்டின் தேவையை நாம் முழுமையாக ஒப்புக்கொண்டு உள்ள போதிலும் இன்றைக்கு இருக்கின்ற இட ஒதுக்கீடு உரிமைகளால் தீர்க்கப்படுகிற விசயமும் இல்லை.

ஒவ்வொரு சமூகமும் பொருளாதார உற்பத்தி முறைகளையும் உற்பத்தி உறவுகளையும் கொண்டதாக நிலவுகிற போது சமூகங்களிடையே பல வர்க்கங்களும் அவ்வர்க்கங்களிடையே முரண்பாடும் தோன்றுகிறது. இந்திய சமூகமும் இதற்கு விதி விலக்கில்லை. இங்கிருக்கின்ற வர்க்க முரண்பாடுகள் சாதிய முரண்பாடுகளுக்குள்ளும் வர்க்க வேறுபாடுகளும், வர்க்கக் கூட்டுகளும் நிலவுகிறது.

இவையனைத்தையும் தனித்தும், மோதவிட்டும், சலுகையளித்தும், பிரித்தும் சமுதாயத்தை ஆட்டுவிக்கிற நிலப்பிரபுத்துவ ஆட்சிகளும் இன்றைய முதலாளிய வடிவிலான சாதிய சனாதன கலாச்சாரக் காவலர்களான பி.ஜே.பி– காங்கிரசு ஆட்சிகளும் தங்களது வர்க்க–சாதி ஆளுமையை நிறுவி வருகின்றனர்.

நந்தனார், ஜோதிராவ்.[illegible]த்திதாசப் பண்டிதர், இரட்டை மலை சீனிவாசனார், நாராயணகுரு, சொக்கமேளா, பெரியார் ஈ.வெ.ரா. அண்ணல் அம்பேத்கர், ஒண்டிவீரன், தியாகி இமானுவேல்சேகரன் என்று ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் போராட்ட வரலாற்றின் புதிய குரலாக புதிய வாரிசாக வந்துள்ள நம்முன் மிகப்பெரும் சவால்கள் காத்து நிற்கின்றன.

காங்கிரசும், திமுகவும், அதிமுகவும் மாறிமாறி தமிழகத்தில் ஆட்சி செய்து வந்துள்ளன. இந்தியாவில் காங்கரசும், ஜனதாவும் பாரதிய ஜனதாவும் ஆட்சி செய்துள்ளன. செய்கின்றன. நேருவின் கலப்பு பொருளாதாரமும், இந்திராவின் சோசலிச பாணியும் பாரதிய சனதாவின் சுதேசப் பொருளாதாரமும் சாதிய ஏற்றத் தாழ்வுகளை ஒழித்துவிடவில்லை, சுரண்டலை ஒழித்துவிடவில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தை விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவோ, முடிவு கட்டவோ இல்லை. தேசிய இனங்களின் உரிமைக் குரலை, சாதி அடுக்கில் ஒடுக்கப்பட்டவர்களின் மீதான அடக்கு முறைகளுக்கு எதிரான குரல்களை நசுக்கியே வந்துள்ளது / வருகின்றது.

குடியிருப்பு மனைக்கும் குடிசை வீட்டிற்கும் உண்ணும் உணவுக்கும் மானம் காக்கும் ஆடைக்கும் பலகோடி பேர் போராடிக்கொண்டிருக்க அடிப்படைக் கல்வி, சுகாதாரம், மருத்துவ வசதிகள் எட்டாத பல கோடி பேர் நடைபாதை வாசிகளாக வாழ்கின்றனர். முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு கொலைகளும், கடத்தலும், திருட்டு, லஞ்சம், காவல் நிலையச் சாவுகளும், கற்பழிப்புகளும், மலிவான கலாச்சார சீர்கேடுகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது.

இந்துபாசிசத்துக்கு எதிராக இஸ்லாமிய அடிப்படை வாதமும், இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கும் கிறித்துவ ஏகாதிபத்தியத்திற்குமான உலகு தழுவிய மதவெறி கலகமும், இந்திய பி.ஜே.பி. இந்துத்துவ ஆட்சி இஸ்லாமியத்திற்கு எதிராக உலக கிறித்துவ ஏகாதிபத்தியத்துடன் சார்ந்து பதற்ற நிலையை தோற்றுவிக்கின்றது.

ஆலை தொழிலின் உற்பத்தி சுரண்டலில் இருந்து நவீன தொழில் நுட்ப கம்பியூட்டர், தொலைத் தொடர்பு, இண்டர்னெட் உலகில், உலகமயமாதலானது தலித்துகளை பல்வேறு சனநாயக, மனித உரிமைகளுக்காக போராட வேண்டிய நிபந்தனை களிலிருந்து உயிர் வாழும் உரிமைக்கு முன்னுரிமை கொடுத்துப் போராட நிர்ப்பந்தித்துள்ளது. பல்லாயிரக் கணக்கான தலித்துகளுக்கு உணவுக்கு பயிர் செய்ய நிலவுரிமை இல்லாத போது பணப்பயிர் சாகுபடியும் இயந்திர உற்பத்தி முறையும், மேலை நாட்டு உயிரி தொழில் நுட்ப விதைகளின் வரவும், மத்திய கால பட்டினிச் சாவிற்கு நம்மை திரும்பவும் போகச் செய்கிறது. பாஸ்ட் புட் ஓட்டல்களில் சாப்பிடும் வசதி மிக்கவர்களுக்கே வாழ்வுரிமை உத்தரவாதம் செய்யப்படுகிறது.

இட ஒதுக்கீடுகள் சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்ற கதையாகிப் போய்விட்டது சி.பி.எஸ்.இ., நவோதயா, மெட்ரிகுலேசன், சுயநிதிக் கல்லூரிகளில் லட்சங்களை அள்ளிவிடுபவர்களுக்கே கல்வி என்றாகிவிட்டது. தனியார் மயமாக்கலால் வேலை வாய்ப்புகள் மேட்டுக் குடிகளுக்கே; இன்னும் மேலை நாட்டினரின் மேலாண்மைக்கே சொந்தமாகிவிட்டது.

இத்தகைய சூழலில் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான தலித்துகளின் போராட்டங்கள் பிரச்சனைகளை ஒட்டியும், சலுகைகளை ஒட்டியும் என்று குறுகிவிடாமல் சாதியம் உயிர்த்திருப்பதற்கான அடித்தளங்களை நோக்கி நம்பார்வை ஆழப்படவும் விரிவடையவும் அந்த அடித்தளத்திற்கு எதிரான போராட்டத்தில் தொடர்ந்து முன்னேறவும் முன்கையெடுப்போம்.

வரலாற்று சக்கரத்தினை எவரும் பின்னோக்கி இழுக்க முடியாது. அடிக்க அடிக்க உயரும் பந்தாக அடக்கப்பட்ட ஒடுக்கப் பட்ட உழைப்பாளி மக்களாகிய நம்மீது விழும் ஒவ்வொரு அடியையும் வெற்றிப் படிக்கட்டுகளாக மாற்றியமைக்க 2000 ஆண்டு துவக்கத்தில் உறுதியேற்போம்.

ஆசிரியர் குழு.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓணானியம்

## இந்துத்துவம் ஏற்றிவைத்த கற்பிதங்களும் அதற்கு எதிரான சிந்தனை முறையின் அவசியமும்

குமரன்தாஸ்



தோழர் ஒருவருடன் விவாதித்துக் கொண்டிருந்த போது எங்கள் சுற்றுப் புறத்தில் வசிக்கும் குறவர் (காட்டுநாயக்கர்)களின் பன்றி வளர்ப்புப் பற்றியும் அதனால் ஏற்படும் சுகாதாரக் கேடுபற்றியும் சொன்ன அவர், எப்படித்தான் வாழ்கின்றார்களோ? என்று கேள்வி எழுப்பினார் அக்கேள்வியின் பின்னர் அறுவருப்பும் முகசுழிப்புமியிருந்தது.

பன்றிகள் தொடர்பாக தோழர்க்கு ஏற்பட்ட முகசுழிப்பும் அறுவருப்பும் சிந்திக்க தூண்டியது. கூடவே சமீபத்தில் வாசித்த செ. கணேசலிங்கனின் **நகரமும் சொர்க்கமும்** நாவலில் மனித மலம், மாட்டு சாணம் இன்றைய சமூகத்தில் பெறும் மதிப்பு வேறுபாடு பற்றி சொல்லப்பட்டு இருந்த குறிப்புகளும் நினைவிற்கு வந்தது.

அது போலவே தோழர்மா.சே.துங். கலையும் இலக்கியமும், என்ற தனது கட்டுரையில் சுத்தம் பற்றிக் கூறியுள்ள கருத்துகளும் எதிர் சிந்தனை முறையை அடிப்படையாக கொண்டு இருப்பதை அவுதானிக்க முடிந்தது.

மா.ஓ. சொல்கிறார் புரட்சியின் போது நான் விவசாயிகள் தொழிலாளிகள் சிப்பாய்கள் இடையே தங்கி வாழ்ந்தேன், சிறிது சிறிதாக அவர்களை அறிய நான் முயன்றேன், அவர்களும் என்னை அறிய முயன்றார்கள். அப்பொழுது தான் பூர்ஷ்வாப் பள்ளிகளில் எனக்கு ஊட்டப்பட்ட முதலாளி, குட்டி முதலாளிய மனோ பாவங்களின் அடிப்படை எண்ணங்கள் ஆட்டங்கொடுக்க ஆரம்பித்தன. அன்றிலிருந்து திருந்தாத படிப்பாளிகளோடு தொழிலாளிகள், விவசாயிகள், சிப்பாய்களை, நான் ஒப்பிட்டுப் பார்க்கும் போதெல்லாம் அத்தகைய படிப்பாளிகளின் மனம் மட்டுமல்ல அவர்கள் உடலும் அசுத்தமானது, என்று நான் உணர ஆரம்பித்தேன். உலகத்திலேயே பரிசுத்தமான மக்கள் தொழிலாளிகளும், விவசாயிகளும் தான் அவர்கள் கைகளில் புழுதி படிந்திருந்தாலும் அவர்கள் கால்களில் சாணம் ஒட்டிக் கொண்டிருந்தாலும் அவர்கள்தான் முதலாளி-குட்டி முதலாளிகளைவிடச் சுத்தமானவர்கள் என்கிறார்.

மா.வோ. வின் இந்த மேற்கோள் நிலவும் வர்க்க சமூகத்தின் சுத்தம் பற்றிய வரையறுப்பை மறுத்து எதிரான புதிய வரையறுப்பை உழைக்கும் வர்க்க நோக்கிலிருந்து படைத்தளிக்கிறது.

இந்தியச் சூழலில் நிலவுகின்ற அனைத்து கருத்துக்களையும் கூட நாம் இதுபோலவே மறுத்து எதிரான புதிய கருத்துருவாக்கத்தினை செய்ய முடியும்.

ஆனால் நிலவுகின்ற கற்பிதங்கள் (கருத்துகள்) சீனாவில் போல ஓர் வர்க்க நலனுக்கானது என்பதுடன் இந்துத்துவ சாதிய நலனுக்கானதுமாக இங்கு இருக்கிறது. ஆகையால் நாம் உருவாக்க நினைக்கும் புதிய கற்பிதங்கள் ஒடுக்கப்பட்டோர் நல நோக்கில் அமைய வேண்டியது அவசியமாகிறது.

இந்திய சூழலில் நிலவுகின்ற கற்பிதங்களானது நீண்டகாலமாக தொடர்ந்து நிலவியதன் காரணமாக மிகஆழமாக வேரூன்றியும், மக்கள்பல்வேறு தட்டுகளாக படிநிலையில் அமைந்துள்ளதால் ஆளுவோரின் நலனுக்கான கற்பிதங்கள் சமூகமயமாகி தங்களது நலனுக்கு எதிரான கருத்துகளையும் தாங்களே ஏற்றுச் செயல் படுத்துபவர்களாக மக்கள் பிரிவினர் உள்ளனர்.

இதனைச் சில உதாரணங்கள் மூலமாக நாம் விளங்கிக்கொள்வோம். என் பள்ளிப் பருவத்தில் பள்ளி விடுமுறைக் காலத்தில் எங்களது பிரதான பொழுதுபோக்கு **காக்கா பெல்ட்**-ஐ எடுத்துக் கொண்டு வேட்டைக்குச் செல்வதுதான். அப்போதெல்லாம் சிட்டுக் குருவி, பூனைக்குருவி, காட்டுக்கோழி, கரிச்சான், செம்புகம், குயில் போன்றவற்றை அடித்து சூட்டான் போட்டு வீட்டுக்குத் தெரியாமல் திண்பது வழக்கம்.

ஆனால் திண்ண முடியாத பொருளாயினும் கூட சும்மாவே நாங்கள் அடித்து தூக்கிப் போடுகின்ற ஒன்று ஓணான்தான். அநியாயமாக ஆயிரக் கணக்கான ஓணான்கள் தினசரி எங்களைப் போன்றோரால் அடித்துக் கொள்ளப்பட்டன. ஆனால் அணிலை மட்டும் நாங்கள் அடிப்பதே இல்லை. எக்குத்தப்பாக எங்கள் குறியில் அணில் மாட்டிக் கொண்டபோது **அணிலை அடித்தால் ஆயிரம் பாவம்** என்று சொல்லி தண்ணீர் தெளித்து மயக்கம் தெளியவைத்து மீண்டும் மரத்தில் விட்டிருக்கிறோம். இவ்வாறு அநியாயமாக ஓணான்கள் கொள்ளப்பட்டமைக்கும் அணில்கள் பாவம் பார்க்கப் பட்டமைக்கும் காரணம் இல்லாமல் இல்லை.

அன்றைக்கு பொதுவாக எங்களூரில் தொலைக் காட்சி பெட்டி வருகைக்கு முன்பு இரவு குழந்தைகளை கதை சொல்லி தூங்கப்பண்ணுவது வழக்கம். அவ்வாறு தாய்மார்களால் குழந்தைகளுக்கு சொல்லப்பட்ட கதைகளில் ஒன்றே என்போன்ற சிறுவர்களின் ஓணான் மீதான வெறுப்பிற்கு காரணமாக அமைந்தது. ஒருகதையில் இராவணன் சீதையை இலங்கைக்குத் தூக்கிச் சென்று விடுவதாகவும் இராமன் சீதையை மீட்க இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் கடல் மீது பாலம் போடுகிறார்கள். அப்போது குரங்குகள் (உழைப்பாளர் பற்றிய குறியீடு) கல் சுமப்பதாகவும் அது கண்டு அணிலும் தன் உடலை நீரில் நனைத்து பின்பு மணலில் புரண்டு தன் மீது ஒட்டிய மணலை பாலத்தில் உதறி இராமன் பாலம் கட்ட உதவுகிறதாம்.

இச்செயலைக் கண்டு மகிழ்ந்த இராமன் அணிலை தூக்கி அதன் முதுகை தடவியதாகவும் அதனால் அணிலின் முதுகில் இராம நாமம் (3 கோடுகள்) பதிந்ததாகவும் கதை சொன்னார்கள்.

மற்றொரு கதையில், ஒரு சமயம் இராமனுக்கு காட்டு வழியில் தாகமேற்பட்டபோது ஓணான் இராமனுக்கு தன் மூத்திரத்தைப் பெய்து கொடுத்ததாகவும் ஆனால் அணிலோ இளநீர் பறித்துக் கொடுத்ததாகவும் சொன்னார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தக் கதைகளின் மூலம் கட்டமைக்கப்பட்ட ஓணான் மீதான வெறுப்பு ஓணானைக் கண்ட போதெல்லாம் அதனைக் கொன்றே தீரவேண்டும் என்ற வெறியை எங்களிடம் ஏற்படுத்தியிருந்தது. மறுபுறம் அணிலை நண்பனாகப் பார்க்கும் உளவியலையும் ஏற்படுத்தியிருந்தது.

பின்பு எங்கள் பகுதிக்கு வந்த முன்னாள் இராணுவ வீரர் ஒருவரால் கற்பிக்கப்பட்ட **கொன்னாப் பாவம் தின்னாப்போச்சு** என்ற கோட்பாட்டின்படி சமாதானம் செய்யப்பட்ட நாங்கள் அணிலை அடித்து தின்று தீர்த்தோம். அணில் கறியின் ருசி அணிலின் இராம விசுவாசத்தை விடவும் எங்களை அதிகமாக, கவர்ந்து விட்டது என்று சொல்லாம். நிலவுடமை விவசாயியின் கண்ணோட்டத்தில் **பாம்பு நண்பன், எலி விரோதி** என்று கற்பிக்கப்படுவது போல் பயன்பாட்டு அடிப்படையில் நாமும் ஓர் கற்பிதத்தை உருவாக்க முடியும். அணில் பழ மரங்கள், தாவரங்களில் செய்யும் சீரழிவுகளையும், ஓணான் தொந்தரவு செய்யாததையும் கருத்தில் கொண்டு அணில் விரோதியாகவும் ஓணான் நண்பனாகவும் கற்பிக்கப்படுவது சரியானதாகும்.

இன்னும் ஒரு பார்வை இருக்கிறது ஒடுக்கப்பட்ட மக்களின் பார்வையால் காண்பது.

மன்னர்கள் பெண்களை ஆடு மாடுகளைப் போல் கருதி அபகரித்து செல்வதும், தன் மனைவி எனும் உடமையை மீட்க போர் புரிவதும் அன்று வழக்கம் என்ற வகையில் இராமனும் சீதையை மீட்க பல ஆயிரம்பேரின் உழைப்பைச் சுரண்டியும், உயிரைப் பறித்தும் கொடுஞ்செயல் புரிந்தவன். அந்த இராமனின் தாகத்திற்கு இளநீர் பறித்துக் கொடுத்த அடிமை மனோபாவம் கொண்ட அணிலின் சேவகமும், ஓணான் மூத்திரம் பெய்து கொடுத்ததில் வெளிப்படும் வர்க்க வெறுப்பும் கொண்டு மதிப்பிடுவது என்றால் அணிலைக் கண்டு அருவறுப்பதும், ஓணானைக் கண்டு உற்சாகமடைவதுமே சரியானதாகும்.

இதுபோல் மற்றொன்று சொல்வதானால் மாணவர்களிடம் கொடுமையாக நடந்து கொள்ளும் ஆசிரியர்கள் டீ வாங்கி வரச் சொல்லும் வாய்ப்பைப் பயன்படுத்தி டீயில் எச்சில் துப்பி, தங்களது வெறுப்பைத் தீர்த்துக் கொண்ட எனது சிறு வயது நண்பர்கள் செயலைக் குறிப்பிடலாம்.

**ஓணானின் மீதான வெறுப்பை இந்துத்துவம் வளர்த்திருந்ததைப் போலவே பன்றிகள் பற்றிய அணுகுமுறையிலும் இந்துத்துவ – சாதியச் சிந்தனை செயல்படுவதைக் காண முடியும். எங்களது சிறுவயது அனுபவம் ஓணானை நாங்கள் சித்திரவதை செய்ததைப் போலவே பன்றிகளையும் கொடுமைப் படுத்தியுள்ளோம்.**

பன்றிகளைக் கொடுமைப் படுத்துவதில் வல்லமை மிகுந்த பையன்கள் எங்கள் வட்டாரத்தில் உண்டு அதிலும் குறிப்பாக பிறந்து இரண்டு, மூன்று நாட்களேயான இளம் குட்டிகளின் மீது கல்லைத் தூக்கிப் போட்டுக் கொல்வதில் மிகுந்த விருப்பம். அவர்களுக்கு தங்களது நாய்களை ஏவிவிட்டு அவை பன்றிகளை கடிக்கும் போது பன்றிகள் அலறுவதை கேட்டு ரசிப்பதில் இன்னும் விருப்பம் அதிகம்.

**இத்தகைய கொடுமைக்காளாவதற்கு பன்றிகள் செய்த தவறென்ன? இன்னும் சொல்லப்போனால் அரை நகரமாக விளங்கிய அன்றைய எங்களூரில் நாங்கள்** கழித்துப் போடும் மலத்தை எல்லாம் தின்று தூய்மைப்படுத்தும் வேலையைச் செய்ததும் இந்தப் பன்றிகளே. இதுபற்றியெல்லாம் யோசிக்கும் நிலையில் அன்று நாங்கள் இல்லை. நாய்களை வளர்ப்பதும், கொஞ்சுவதும் பசுமாட்டை தாய்மை உணர்வோடு பார்ப்பதும் கன்றுக்குட்டிகளை சகோதர பாசத்துடன் தடவிக் கொடுப்பதும் அன்று எம் இரத்தத்தில் ஊறிப் போன ஒன்றாக இருந்தது.

அந்த அளவிற்கு ஓர் உயிரினத்தின் (பன்றியின்) மீது வெறுப்பையும் அதனை துரத்தி துரத்தி அடித்துக் கொல்வது வீரமென்றும் மற்றொரு உயிரினத்தை (பசுமாடு மற்றும் நாய்) நேசத்துடன் பராமரிக்கும் விதமாக எம்மை இந்துத்துவ சாதிய பண்பாடு தகவமைத்திருந்தது.

இத்தகைய சூழலில் வாழ்ந்த என்னை நாய்கள் மீதான கரிசனத்திலிருந்து விடுவித்தது செ. கணேசலிங்கனின் நாவல் ஒன்றில் கூறப்பட்டிருந்த நாயின் அடிமைத்தனம் பற்றிய விளக்கமே. ஆனால் வெகுகாலம் வரை பன்றிகள் பற்றிய சிந்தனை மாறவேயில்லை.

பன்றிகள் பற்றிய எமது சாதிய இந்துத்துவ மனோபாவத்தின் மீது சவுக்கடி கொடுத்தது **தலித்** இதழில் வெளிவந்த மு. மல்லனின் கவிதை ஒன்றே. அதன் பிறகே **பாராளுமன்றம் பன்றிகள் தொழுவம்**-என்ற புரட்சியாளர்கள் கோசம் கூட மாற்றியமைக்கப்பட வேண்டிய தேவை உள்ளதைப் புரிந்து கொள்ள முடிந்தது. இக்கோசத்தின் உள்ளேயும் பன்றிகள் அசிங்கமான பிராணி. எனவே அவை வாழும் (அடைபட்டுள்ள தொழு) இடம் அசிங்கமானது என்ற உயர்சாதிய மனோநிலையில் இருந்து பாராளுமன்றத்திற்கு பன்றித்தொழுவம் உதாரணப் படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஏன் மாட்டுத்தொழுவம் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

இன்றைய பாராளுமன்றம் மோசமானது, அசிங்கமானது என்பதில் எனக்கு கருத்து உடன்பாடுண்டு. அதனுடன் **பன்றித்தொழுவத்தினை ஒப்புமைப்படுத்துவதில்தான் உடன்பாடில்லை.** மாட்டுத்தொழுவத்தை வேண்டுமானால் ஒப்புமைப் படுத்துங்கள் ஏனென்றால் மாட்டுத்தொழுவம் புனிதமானதாக இன்றைய சமூகத்தில் பார்க்கப்படுகிறது. அதுபோலவே பாராளுமன்றமும் புனிதமானதாக பிரச்சாரம் செய்யப்படுகிறது.

இன்றைய புனிதங்கள் எல்லாம் உடைத்து தகர்க்கப்பட வேண்டியவை என்ற வகையில் மாட்டுத் தொழுவத்துடன் ஒப்புமைப்படுத்தலாம் பாராளு மன்றத்தை.

சரி. இந்தவிதமான கற்பிதங்களில் அதாவது ஒன்றைப் புனிதமானதாகவும் மற்றொன்றை இழிவானதாகவும் கற்பித்து வந்துள்ளதற்கு காரணம் என்ன?

மக்கள் வர்க்கங்களாக சாதிகளாக பிளவுபட்டுள்ள சூழலில் ஒரு வர்க்கம்/சாதி சுரண்டும்–ஒடுக்கும் நிலையிலும் மற்றொரு வர்க்கம்/சாதி சுரண்டப்பட்டும்– ஒடுக்கப்பட்டும் கிடக்கும் நிலையில் இந்தச் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் நியாயப்படுத்தும் கருத்தியல் உருவாக்கப்பட்டு பிரச்சாரப்படுத்தப் படுகின்றன. இந்த வேலையை ஒடுக்கும் வர்க்க/சாதியின் சுரண்டலில் இருந்து சலுகை பெறும் அறிவு ஜீவி வர்க்கம் சிறப்பாக செய்கிறது. இந்த அறிவு ஜீவிவர்க்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உழைக்கும் வர்க்கத்தை அவர்களது வளர்ப்பு பிராணிகளை, வாழிடத்தைப் பற்றியெல்லாம் இழிவுபடுத்தி கருத்துக்களை உருவாக்கி பிரச்சாரம் செய்து வந்தது.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக செய்யப்பட்டுவந்த இந்தப் பிரச்சாரத்தின் தாக்கத்தின் காரணமாக **உழைக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் தீயிட்டுக் கொளுத்தப்படும்போதும், வீடுகள் தகர்க்கப்படும் போதும் பிற இடைத்தட்டு வர்க்க/சாதிய மக்களது சிந்தனையானது எவ்வித அதிர்ச்சிக்கும் உள்ளாவதில்லை. மாறாக தகர்க்கப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் படைக்கப்பட்டவர்கள் என்றே உயர்சாதி மனது கருதுகிறது.**

**இதற்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களது எதிரிகளை திருப்பித் தாக்கிவிட்டால் அதனை மாபெரும் குற்றமாகக் கருதி அதிர்ச்சிக்குள்ளாகிறது.** இவ்வாறு பெரும்பான்மை மக்களை சிந்தனை ரீதியாக தனக்கேற்றவாறு தகவமைத்து வைத்திருப்பது ஆளும் வர்க்கத்திற்கு அதன் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் சாதகமாகும்.

இவ்வாறு இந்துத்துவ ஆளும்வர்க்கம் கற்பித்து வந்துள்ள கற்பிதங்களுக்குப் பலியாகிப் போன சிந்தனையின் விளைவுதான் பன்றிகளைக் கொள்வதும் பசுக்களைப் போற்றுவதும் என்றமைகிறது. பன்றிக்குட்டிகளை நாங்கள் கொல்லும்போது கோபப்படவும் பதில் நடவடிக்கையில் ஈடுபடமுடியாமல் கண்ணீர்விடவும் செய்த தாழ்த்தப்பட்ட மக்கள் நோக்கில் இருந்து பன்றிகள் பற்றியும் ஒரு கற்பிதம் உருவாக்கப்படுமேயானால் அது இன்று நிலவும் கற்பிதத்திற்கு எதிரானதாக இருக்கும்.

நம்மைச்சுற்றியுள்ள பிராணிகளின் மீது கற்பனையான விஞ்ஞானத்திற்குப் புறம்பான கருத்துக்களை இந்துத்துவமானது அதிகமாகவே சுமத்தி வந்துள்ளது. எலியை பிள்ளையாரின் வாகனமாக்கியது, யானையை பிள்ளையாராகவே மாற்றியது. புலியை ஐயப்பனின் வாகனமாக்கியது, இந்த வரிசையில் மயில், மாடு, சிங்கம், அன்னம், மலர்களில் தாமரை, ரோஜா என்று பலவும் புனிதமாக்கப்பட்டன. இதன் எதிர்மறையாக பலவற்றை தீட்டாக கற்பித்தது.

கைம்மை, பல்லி, பூனை, பன்றி, ஆமை போன்றவற்றை தீமையின் குறியீடுகளாக கற்பித்தது. இன்றும் கூட பன்றிகளை இடித்துவிடும் வாகனங்களை உடனே நிற்றுவிடும் போக்கை குறிப்பிடலாம்.

ஒருகாலத்தில் இலக்கியங்கள் செய்துவந்த இந்த கற்பித வேலையை இன்று சினிமா தொடர்கிறது. எம்.ஜி.ஆர் காலத்தில் அன்றைய சமூகச்சூழலுக்கு ஏற்ப ரிக்ஷா (ரிக்ஷாக்காரன்), மாடு (மாட்டுக்கார வேலன்), குதிரை (என் அண்ணன்), யானை (நல்ல நேரம்) நிலம் (உரிமைக்குரல்) போன்றவை விஞ்ஞானத்திற்கு புறம்பாகவும் உண்மைக்குப் புறம்பாகவும் அபரித சக்திபடைத்தவையாக காட்டப்பட்டன. (ஆனால் இதுவரை எந்தப்படத்திலும் பன்றி வளர்ப்பவர்களாக நாயக நாயகிகள் காட்டப்படாதது கவனத்திற்குரியது.)

கோமாதா என் குலமாதா, வெள்ளிக்கிழமை விரதம் போன்ற படங்களும் இது போன்றவையே. இன்றைய மாறிய சமூகச் சூழலிலும் ரஜினியின் படங்களில் கற்பிதம் உயிரினங்களில் இருந்து மோட்டார் வாகனங்கள் மீதும் சுமத்தப்படுகின்றன.

படிக்காதவன் படத்தில் ரஜினியின் டாக்ஸி (லெச்சுமி?!) தவறானவர்கள் அமர்ந்தால் ஓட மறுப்பது. பாட்சாவில் ஆட்டோ மீது ஏற்றப்பட்ட இமேஜ்க்குப்பின் ஆட்டோக்களின் பெருக்கம். படையப்பாவில் ரஜினி கையசைவிற்கே கார் கதவு திறப்பதும், மூடுவதும், தானாக கார் ஓடுவதும் என்று காட்சி படுத்துவதன் மூலம் இன்றைய நவீன சமூகத்தின் தேவையான ஆட்டோ, டாக்சி போன்றவற்றை ஓட்டுபவர்களும் திருப்தியடையவும் எம்.ஜி.ஆர்–ஐ போலவே ரஜினியும் உதிரித் தொழிலாளிகளின் தலைவனாக ஆவதற்கும் உதவுகிறது.

இவ்வாறு இன்று நிலவுகின்ற, செய்யப்படுகின்ற கற்பிதங்களுக்குப் பின்னும் ஓர் நலன் ஒளிந்து கிடக்கிறது. இந்த கற்பிதங்கள் எந்த அளவிற்கு வலிமையாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறதோ அந்த அளவிற்கு இந்த கற்பிதங்களின் பின்னால் நின்றுகொண்டு சுரண்டவும் ஒடுக்குமுறையில் ஈடுபடவும் செய்கிறவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளவும் முடியும்.

இந்தியப் போலி பொதுவுடமை (சி.பி.ஐ, சி.பி.எம்) யாளர்களைப் பொருத்தவரை இந்த கற்பிதங்கள் மக்கள்மீது செலுத்தும் செல்வாக்கைப் பற்றியெல்லாம் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் மூளையில் ஐரோப்பிய நாடுகளின் சமூகச் சூழலும் அந்தச் சூழலில் அங்கு நடைபெற்ற புரட்சியை அப்படியே இங்கு இந்தியாவில் நிகழ்த்தினால் இந்தியாவில் அனைத்து கொடுமைகளும் மாறிவிடும் என்று நம்பினார்கள். எதற்கெடுத்தாலும் **சோசலிசம்** வந்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னார்கள். இந்திய சூழலில் பண்ணையார்களின் அதிகாரம் நிலவும்போது அதன் வெளிப்பாடாக சாதி ஆதிக்கமும் பெண்ணடிமைத் தனமும், பிற பிற்போக்குத் தனங்களும் தலைவிரித்தாடும்போது இவர்கள் பொருளாதார வாதத்தை முன்வைத்து இங்கு முதலாளிக்கும்–தொழிலாளிக்குமான முரண்பாடே நிலவுகிறது. இதனைத் தீர்க்கும் சோசலிச புரட்சியே இங்கு வேண்டும் என்கிறார்கள். அந்த சோசலிசப் புரட்சியை நடத்தும் கம்யூனிஸ்ட் கட்சியில் பொருளாதார வாதத்தின் அடிப்படையில் திரட்டப்பட்ட வர்களின் உணர்வுகளில் இந்துத்துவம் ஏற்றிவைத்த பிற்போக்குக் கற்பிதங்கள் அப்படியே இருந்தன. அதாவது கட்சித் தோழர்கள் சாதி இந்துக்களாக இருந்தார்கள், இஸ்லாமியராக இருந்தார்கள், ஆண்களாக இருந்தார்கள் ஆனால் கம்யூனிஸ்ட்களாக இருக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி என்பதை **பொதுமேடை** என்று நினைத்தார்கள். அதாவது பல்வேறு மத,இன,சாதி வர்க்கங்கள் நல்லிணக்கத்துடன் சேர்ந்து இருக்கும் இடம் என்று நினைத்தார்கள். அவரவர் சாதி, மத சமூகக் கடமைகளை ஒழுங்காக நிறை வேற்றிக்கொண்டு அரசிடம் கோரிக்கைப் போராட்டங் களை மட்டுமே மேற்கொண்டால் போதும் என்றார்கள்.

ஊருக்குள் நிலவுவதைப் போலவே கட்சியிலும் சாதிப்படிநிலையடிப்படையில் பதவிகளைக் கொடுத்தார்கள். ஊருக்குள் சாதி ஆதிக்கத்தை எதிர்த்து சண்டை வந்துவிட்டால் ஓடோடி வந்து சமூக நல்லிணக்கம் பேசினார்கள். அமைதிக்கூட்டங்கள் நடத்தினார்கள் கேட்டால் வர்க்க ஒற்றுமை கெட்டுவிடக்கூடாது அல்லவா என்றார்கள்.

அதாவது இவர்களது மூளையிலே–சிந்தனையிலே வர்க்கம் (பொருளாதார அடித்தளம் மட்டும்) என்ற ஒன்றுக்கு மாறாக வேறு எந்த முரண்பாட்டைப் பற்றிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசுவதும் **இழிவானது** மார்க்சிய விரோதமானது என்ற ஓர் கற்பிதம் ஏற்றப்பட்டுள்ளது. சாதி முரண்பாடு, சாதி எதிர்ப்புப் போராட்டம் பற்றி எல்லாம் ஓர் தாழ்வு மனப்பான்மை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சாதி ஆதிக்கமும் ஓர் வர்க்க நலனுக்கானதுதான் அதன் உள்ளும் ஓர் சுரண்டலும் பொருளாதார குவிப்பும் இருக்கிறது என்பதையும் அந்தப் பொருளாதாரத்தை தகர்ப்பதற்கும் சுரண்டலை ஒழிப்பதற்கும் தடையாக இந்துத்துவ கற்பிதங்கள் நிலவுகிறது என்பதை கவனிக்க மறுக்கிறார்கள்.

உலகில் ரஷ்யாவில், சீனாவில் நிகழ்ந்த புரட்சிகளிலும் பாட்டாளி வர்க்கம் அல்லாத பிற நடுத்தர மற்றும் குட்டி முதலாளிய வர்க்கத்தில் பிறந்தவர்கள் தங்களது வர்க்கப்பண்பை அழித்துக் கொண்டு பாட்டாளி வர்க்கமாக மாறியும் தொடர்ந்து பாட்டாளி வர்க்கமாக நிற்க போராடியுமே கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தனர். ஆனால் இங்கு மட்டுமே கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ளவர்கள் தங்களது உயர் சாதி மனோபாவங்களை போக்கிக் கொள்ளாமலும், வாழ்க்கை முறையை மாற்றியமைத்து ஒடுக்கப்பட்ட மக்களுடன் இரண்டறக் கலக்காமலும் உயர் சாதி இந்துக்களாகவே வாழ்கின்றனர்.

இன்றைய காலகட்டம் சனநாயகப் புரட்சி காலகட்டம் எனும் போது சனநாயக மறுப்பாளர்களை எதிர்த்த போரில் சாதி ஒழிப்பும் முக்கியத்துவம் பெற்றுள்ளபோது சனநாயக சக்திகள் என்பவை தலித் தலைமையை அங்கீகரித்து அணி திரட்டப்பட்டுள்ள வர்களும், தங்களது உயர் சாதி வாழ்க்கை முறையை மறுத்து ஒடுக்கப்பட்ட மக்களது பண்பாடுகளை ஏற்றுக்கொண்டு அய்க்கியப்படுபவர்களுமே ஆவர். இந்தியச் சூழலில் கம்யூனிஸ்ட்கள் கடமை இத்தகைய சனநாயக சக்திகளை மேலும் மேலும் பெருக்கப் பாடுபடுவதுதான். ஆனால் இங்கு சி.பி.ஐ, சி.பி.எம்–ல் திரட்டப்பட்டுள்ளவர்கள் அன்றாட தங்களது வாழ்வில் இந்துத்துவ சனாதனத்தை தொடர்ந்து கடைபிடிப் பவர்களாகவும், அரசியல் செயல்பாடு என்பதை தங்கள் வாழ்விற்கு வெளியே உள்ள தனியான ஒன்றாகவும் கருதுகிறார்கள். இவ்வாறு சொந்த வாழ்க்கைவேறு அரசியல்வேறு என்று வாழ்வதால்தான் தலித் மக்கள் தங்கள் மீது திணிக்கப்பட்டுள்ள சாதிக் கடமைகளை (ஒடுக்கு முறைகளை) எதிர்த்து அந்த வேலைகளை (மலம் அள்ளுதல், பறையடித்தல், துடக்கெடுத்தல், சவக்குழி வெட்டுதல்) செய்ய மறுக்கும் போது உயர் சாதியினர் தாக்குவதும் அத்தாக்குதலை எதிர்த்து தலித்துகள் தாக்கும் போது ஏற்படும் மோதல்கள் கண்டு இவர்கள் அதிர்ச்சியுறுகின்றனர்.

சமூகம் சாதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதே வன்முறையானது என்பதை இவர்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள சாதிக் கடமைகள் என்பது அவர்களை இழிவுபடுத்தி சுரண்டுவதும் ஒடுக்குவதும்தான். இந்தக் கடமைகளை செய்ய மறுத்து போர்புரிவதே அவர்களது விடுதலைக்கும், சாதி ஒழிப்புக்கும் வழியாகும். இதனை அங்கீகரிப்பவர்களே சனநாயக சக்திகளாவர்.

ஆனால் இவர்கள் (சாதி இந்துக்கள், சி.பி.ஐ., சி.பி.எம். கட்சியினர்) தங்களுக்கு பெருமையளிக்கும் சாதிக்கடமைகளையும் தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் அவர்களது மேல் சுமத்தப்பட்டுள்ள சாதிக்கடமைகளையும் ஒன்றாக காண்கின்றனர்.

**இதனால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிரீதியாக ஒன்று திரள்வதையும், சாதி இந்துக்கள் ஒன்று திரள்வதை (அமைப்பாவதை)யும் ஒன்றுபோல் பார்க்க முடிகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் நிலவும் சமூக நியதிகளை (இந்து சனாதனத்தை)மீறுவதற்காக ஒன்று திரள்கின்றனர். சாதி இந்துக்கள் நிலவும் சமூகத்தைக் கட்டிக்காப்பதற்காக ஒன்று திரள்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களின் திரட்சி, சமூக வளர்ச்சிக்கு, சனநாயகப் புரட்சிக்கு சாதகமானது. உயர்சாதியினரது திரட்சி சமூக வளர்ச்சிக்கு எதிரானது. நிலப்பிரபுத்துவத்திற்குச் சாதகமானது.**

கம்யூனிஸ்ட் கட்சி என்பது சாதி இந்துக்களது அமைப்புகளுக்கும் அவர்கள் அமைப்பாவதற்கும் எதிராகப் போராட வேண்டும் அதேசமயம் தலித் அமைப்புகளை ஊக்குவித்தும் அவர்களிடமும் வரலாற்று ரீதியாக படிந்திருக்கும் இந்துத்துவ கறைகளைப் போக்கிக் கொள்ளவும் பயிற்றுவிக்க வேண்டும். ஆனால் இங்கு சாதி என்ற வார்த்தையை சொன்னாலே அதிர்ச்சியுறுகின்றனர். சாதிக் கொடுமைகளையும், சாதி ஆதிக்கத்தையும், சாதிய ஒடுக்குமுறையையும் எதிர்த்த பிரச்சாரத்திற்கு சாதி என்ற சொல்லைப் பயன்படுத்தாமலும் ஒடுக்கும் சாதிகளைப் பற்றிப் பேசாமலும் சாத்தியமில்லை. இவ்வாறு பேசுவதே சாதியத்தை வலுப்படுத்தும் சாதியத்தை இறுக்கமாக்கும் என்கின்றனர்.

தாழ்த்தப்பட்ட மக்களை சாதி சொல்லி இழிவு படுத்துவதையும் **நாங்களும் மனிதர்கள்தான்** எங்களை இழிவுபடுத்தாதே என்று ஒடுக்கப்பட்டவர்கள் கிளர்ந்தெழுவதையும் இவர்கள் ஒன்றுபோல் பார்க்கின்றனர். இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்தால் சாதியம் இறுக்கம் பெறுகிறதாம்! எவ்வளவு பெரிய மோசடி. இவர்களது இந்த வாதத்தில் இருவேறு தவறுகள் இருக்கின்றன.

**ஒன்று :-**

ஏற்கனவே மக்கள் சாதிகளாகப் பிளவுபடுத்தப்பட்டு பொருளாதார ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் முரண்பட்டுக் கிடக்கும் உண்மை நிலையைக்காண மறுத்து சாதிய ஒடுக்குமுறை பற்றி பேசுவதால்தான் சாதிய முரண்பாடே தோற்றுவிக்கப்படுவதாகக் காண்கின்றனர். இது இவர்கள் தொன்று தொட்டுச் செய்துவரும் தவறாகும்.

தேசிய இன விடுதலைப் போராட்டமா? ஆ! அது அந்நிய ஏகாதிபத்தியச் சதி. ஆந்திராவில் நக்சலைட்டுப் பிரச்சனையா? அவர்கள் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்! பெண்விடுதலை இயக்கங்களா?ஆ! அவர்கள் அறிவு ஜீவிகள். இப்படி எதை எடுத்தாலும் அப்பிரச்சினை எழுவதற்கான சமூகக்காரணி என்ன? என்று பார்க்காமல் வெளியில் இருந்து செயற்கையாக தோற்றுவிக்கப் பட்டவைகளாகவே மக்களது அனைத்துப் பிரச்சனைகளையும் பார்க்கின்றனர்.

மக்கள் மத்தியில் எழும் ஒரு முரண்பாட்டை தவறாக கையாண்டு தீர்ப்பதை காலதாமதம் செய்யலாமே ஒழிய இல்லாத ஒன்றை தோற்றுவிக்க முடியாது. இன்று இந்திய அரசு சிறுபான்மை மத இளைஞர்கள் தீவிரப் போராட்டங்களில் ஈடுபடுவதை அந்நியச் (ஐ.எஸ்.ஐ.) சதி என்று சொல்லி தனது இந்துத்துவா மதச்சர்வாதிகாரத்தை மறைக்க முற்படுகிறதே அதற்கும் இவர்களது புறநிலைவாதப் புலம்பலுக்கும் என்ன வேறுபாடு.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இரண்டு :-**

சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடவே கூடாது என்கிறார்கள். இதுபற்றி இவர்களுக்குப் புரிந்தமொழியில் கூறுவதானால் முதலாளித்துவம் உடமைகள் அனைத்தையும் தன் கைகளில் வைத்துக்கொண்டு தொழிலாளி வர்க்கத்தை ஒட்டச் சுரண்டிக் கொண்டிருந்தபோது **லெனின்** போன்ற தலைவர்கள் பாட்டாளி வர்க்கத்தை திரட்டி முதலாளியத்தை அதன் சுரண்டலை ஒழித்து சமத்துவத்தைப் படைத்தனர். தொழிலாளி வர்க்கத்தை விழிப்புணர்வு கொள்ளச் செய்ய, தட்டி எழுப்ப முதலாளியச் சுரண்டல் பற்றியும் அதன் அதிகாரம் பற்றியும் பேசவே செய்தனர். முதலாளி–தொழிலாளி வர்க்க ஒற்றுமை பற்றி பேசவில்லை. வர்க்கப் பகைமை பற்றியே பேசினார்கள். மேலும் வர்க்கங்கள் ஒழிந்து பொதுவுடமை மலர பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்ற இடைக்கட்டம் (சோசலிசம்) அவசியமானது என்றும் சொன்னார்கள். ஆனால் நாம் சந்திக்கும் இந்த மார்க்சியர்களோ சாதி ஒடுக்குமுறை பற்றியும், சாதிய சுரண்டல் பற்றியும், ஆணாதிக்கம் பற்றியும், தேசிய இன ஒடுக்குமுறை பற்றியும் பேசவேகூடாது என்கிறார்கள்.

சமூக நல்லிணக்கம், வர்க்க ஒற்றுமை என்று கதையளக்கிறார்கள். இவர்கள் சொல்லும் ஒற்றுமை என்பதும் நல்லிணக்கம் என்பதும் ஆதிக்க சாதிகளின், வர்க்கங்களின் ஒடுக்கு முறையே அன்றி வேறென்ன? இவர்களது இந்த துரோகத் தனத்திற்கு வன்முறை எதிர்ப்பு என்ற முகமூடியையும் அணிந்து கொள்கிறார்கள். இரண்டு சாதிகள், வர்க்கங்கள் ஆயுதம் ஏந்தி மோதிக் கொள்வது மட்டும்தான் வன்முறையா?

ஒரு சாதி / வர்க்கம் அனைத்து உடமைகளையும் தன்கையில் வைத்துக்கொண்டும் அனைத்துச் சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்டும் இருக்கையில் மற்றொரு சாதிவர்க்கம் எந்த உடமையும் இன்றி பசியால் வாடவும், மனித அந்தஸ்த்தே இன்றி மலம் அள்ளவும், செருப்புத் தைக்கவும், ஏவும் வேலையைச் செய்யவும் என்று வைத்திருப்பது வன்முறையில்லையா? இன்றைய குடும்ப அமைப்பு வன்முறையானதில்லையா?

இவ்வாறு வன்முறையை அனைத்து அம்சங்களிலும் கொண்டுள்ள ஓர் சமூக அமைப்பில் அடக்கப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் குரல் எழுப்புவதை, போராடுவதை வன்முறையாகப் பார்க்கும் இவர்களை யாரென்று சொல்வது? இவர்கள் உச்சரிக்கும் சொற்கள் மார்க்சியமானாலும் இவர்களது சிந்தனை இந்திய–இந்துத்துவ கற்பிதங்களால் கட்டமைக்கப்பட்ட காந்தியச் சிந்தனையாகவே இருக்கிறது.

இன்றைய நமது தேவை இந்தியச் சிந்தனை மரபிற்கு எதிரானதும் இந்துத்துவத்திலிருந்து துண்டித்துக் கொண்டதுமான புதிய எதிர்ச்சிந்தனை முறையேயாகும். அத்தகைய சிந்தனை முறைதான் மக்களுடைய போராட்டங்களுடன் ஒன்றுபடவும் வளர்த்துச் செல்லவும் உதவும். ●

## களச்செய்திகள்

அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 43 வது நினைவு நாளான டிசம்பர் 06ல் தமிழக மனித உரிமைக் கழகத்தின் சார்பில் பட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அம்பேத்கர் அவர்களின் திருஉருவச்சிலைக்கு பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் மாலை அணிவித்தார். பிறகு டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிந்தனைகள் மற்றும் தலித்துகளின் நிலைக்குறித்து,மாநில பிரச்சார செயலாளர் சி. மோட்சகுலசேகரன், மாநில செயற்குழு உறுப்பினர் கோட்டை கா. இராசமாணிக்கம், மாநில துணை பொதுச் செயலாளர் கு. பன்னீர்செல்வம் ஆகியோர் பேசினார்கள். நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாவட்ட ஒன்றிய கிளைக்கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டச் செயலாளர் தங்க. குமரவேலு நன்று கூறினார். இயக்கத்தின் சார்பில் பட்டுக்கோட்டை, பேராவூரணி, ஒரத்தநாடு, ஆலங்குடி தாலுக்காக்களில் சுவரொட்டி இயக்கம் நடத்தப்பட்டது. மாநகராட்சி, நகராட்சி,பேரூராட்சிகளில் துப்புரவுப் பணியில் தலைமுறை தலைமுறையாக உள்ள தலித்துகளின் குழந்தைகள் வருங்காலத்திலும் அத்தொழிலில் ஈடுபடாமல் இருக்கும் வகையில், மேற்கண்ட உள்ளாட்சி நிர்வாகங்களின் பொறுப்பில் உள்ள வணிக வளாகங்களின் மூலம் வரும் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு வருமானத்தை துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ளோரின் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கே செலவிடும் வகையில் துப்புரவுப் பணியாளர் குழந்தைகள் கல்வி மேம்பாட்டு வாரியம் ஒன்றை தமிழக அரசு ஏற்படுத்துமாறு போராடுவது என நினைவு நாள் நிகழ்ச்சியின் போது உறுதி மொழி எடுக்கப்பட்டது.

## சாதிமறுப்புத் திருமணம்

புதுக்கோட்டை மாவட்டம். ஆவுடையார் கோவில் வருவாய் வட்டத்தைச் சேர்ந்த கரூர் அருகேயுள்ள வலையன்வயல்கிராமத்தின் முத்திரையர் சமூக இளைஞர் **முனியன் [26]** அவர்களுக்கும், கோயிலான்வயல் கிராமத்தைச் சேர்ந்த ஆவுடையப்பன் செட்டியார் மகள் **கவிதாவுக்கும்[23]**. தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் தலைமையில் 19.11.99–ல் சாதிமறுப்புத் திருமணம் நடைபெற்றது. பின்னர் திருமணத்தை மணமக்கள் பெருமகளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டனர். செட்டியார் சாதியினர் தங்கள் சாதி மானம்போய் விட்டதாகச் சொல்லி பொதுச் செயலாளரிடம் பேரங்கள் மூலமும் அச்சுறுத்தல் மூலமும் பெண்ணை ஒப்படைக்குமாறு பலமுறை கோரியும் திரு. குணசேகரன் அவர்கள் மறுக்கவே, எதிரிகள், மேற்படி வலையின்வயல் முத்தரையர்கள் சிலரையும், முனியனின் தம்பியையும், உறவினர்களான மதன்பட்டலூரைச் சேர்ந்த காளி, செல்லையா, உடையப்பனையும் சட்டத்துக்குப்புறம்பாக காவல் நிலையத்தில் அடைத்து வைத்தனர். 50 பவுன் நகைகளையும், 50,000 ரூபாய் பணத்தையும் திருடியதாக பொய்யான புகார் செய்திருந்தனர். தமிழக மனித உரிமைக் கழகத்தின் சார்பில் சட்டத்துக்குப் புறம்பான காவல் அடைப்பை கண்டித்து போராடியதை தொடர்ந்து காவல்துறை பணிந்து அப்பாவி ஏழை அம்பலக்காரர்களை (முத்தரையர்) விடுவித்தது. மணமக்கள் முனியனும், கவிதாவும் இனிதே இல்லற வாழ்க்கை நடத்துகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடியிருப்புமனைப் பட்டா கொடுத்த அரசும்! பறித்துக்கொண்ட ஆதிக்க சாதி பண்ணையாரும்! பரிதவிக்கும் தலித்துகளும்!

*–மோட்சகுலசேகரன்*

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வட்டம் வீரக்குடி மணக்காடு கிராமத்தில் தலித் சமூகத்தைச் சேர்ந்த 28 குடும்பங்களுக்கு கடந்த 1983–84–ம் ஆண்டில் ஆதி–திராவிடர் நலத்துறையால் குடியிருப்பு மனை பட்டா 1 ஏக்கர் 68 செண்ட் வழங்கப்பட்டது. இந்த நிலம் ராமசாமி கண்டியர் என்கிற பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரிடமிருந்து அரசு கிரயம் கொடுத்து வாங்கியது. பட்டாவைப் பெற்ற 28 பேரில் 27பேர் தங்களுடைய பட்டாவை பட்டுக்கோட்டை கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் அடமானம் வைத்து கடன் பெற்று வீடுகட்டும் முதல் கட்டமாக அடித்தளமும், சுவர் எழுப்பும் வேலையையும் செய்தார்கள். இந்த நேரத்தில் வீரக்குடி–மணக்காட்டை சேர்ந்த பண்ணையாரும் முன்னாள் மணியக்காரரும் தற்போதைய கிராம நிர்வாக அலுவலரும் கள்ளர் சாதியைச் சேர்ந்தவருமான அருணாசலம் மண்கொண்டார் என்பவர் தலித் சமூகத்தில் உள்ள அவரின் கைக்கூலிகளை பயன்படுத்தியும், முன்னாள் வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரத்தின் இரத்த உறவினர் என்ற வகையில் மிரட்டியும் தலித்துகளுக்கு அரசால் வழங்கப்பட்ட மேற்படி குடியிருப்பு மனையை பறித்துக்கொண்டார். அவர் இப்படி செய்வதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருந்தன.

1. அரசால் வழங்கப்பட்ட நிலத்தை அடுத்து அவருடைய நிலமும் அதையடுத்து அவருடைய வீடும் உள்ளது. இதனால் அரசு கொடுத்த இடத்தில் தலித்துகள் குடியேறினால் அவருடைய வீட்டுக்கு பக்கத்தில் தலித்துகளின் குடியிருப்பு வந்து விடுகிறது. காலங்காலமாக ஊருக்கு ஒதுக்குப்புறமாக சேரிகளில் வாழ்ந்து வந்தவர்கள் நம்மோடு சமமாக நம் வீட்டிற்கு எதிரில் குடியேருவதா என்கிற சாதி ஆதிக்க மனோபாவமும், நிலப்பிரபுத்துவ பண்ணையார் குணாம்சமும் அவர் வீட்டிற்கு பக்கத்தில் தலித்துகள் குடியேறுவதை தடுத்திருக்கிறது.

2. தலித்துகளுக்கு அரசால் வழங்கப்பட்ட நிலம் நல்ல வளமான மண் கொண்டது. நிலம் வழங்கப்படும்போதே அதில் தென்னை மரங்களும் இருந்தன. எனவே நல்ல மண் வளம் உள்ள நிலம் தலித்துகளுக்கு கிடைத்தால் அவர்கள் சுயசார்புத் தன்மையை அடைந்து விடுவார்கள். தனக்கு பண்ணை அடிமைகள் கிடைக்க மாட்டார்கள் என்கிற பண்ணை ஆதிக்க குணாம்சமாகும்.

இப்படி நிலத்தை பறித்துக்கொண்ட அருணாசலம் மண்கொண்டார் 1 ஏக்கர் 68 செண்ட் நிலத்திற்கு மாற்றாக ஒன்றுக்கும் உதவாத 1 ஏக்கர் 11 செண்ட் நிலத்தை 28 பேருக்கும் தனித்தனியாக கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்தார். ஏனென்றால் அரசால் வழங்கப்பட்ட நிலத்தை 20 ஆண்டுகள் முடிவதற்குள் யாரும் விற்கவோ பட்டா மாறுதல் செய்யவோ கூடாது என்றும் மீறி மாறுதல் செய்யப்பட்டால் அந்த மாறுதல் செல்லாது என்றும் சட்ட விதி இருக்கிறது. எனவேதான் அவர் கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்தார். அதன் பிறகு அவர் வீட்டிற்கு செல்வதற்கு 1 ஏக்கர் 11 செண்ட் நிலத்திற்குள்ளேயே தார் ரோடு போட்டும், அறந்தாங்கி என்ற ஊரில் அதிக விலை மதிப்புள்ள வேறொரு தலித்துக்கு சொந்தமான இடத்தை மிரட்டி பிடுங்கி விற்றுவிட்டு அவருக்கு 5 செண்ட் மனைக்கட்டையும் இந்த நிலத்திற்குள்ளேயே ஒதுக்கி கொடுத்திருக்கிறார். 1.68–ல் 1.11 போக மீதி 57 செண்ட் இடத்தை 15 ஆண்டுகளாகியும் இன்றுவரை கொடுக்கவில்லை.

அவர் கொடுத்த மாற்று இடத்தில் 6பேர் மட்டும் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். அந்த இடத்திற்கான பட்டா உரிமை அவர்கள் பெயரில் இல்லை. அவரது பினாமியான அன்பழகன், சின்னப்பா என்பவர்கள் பெயரில் பட்டா உள்ளது. அப்படி இரண்டு நபர்களே ஊரில் இல்லை. ஆனால் தலித்துகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலம் மட்டும் அருணாசலம் மண்கொண்டார் மகன்களுக்கும், அவரது தம்பி மகன்களுக்கும் சரியாக பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இப்படியாக மோசடியின் மொத்த உருவமாகத் திகழும் அருணாசலம் மண்கொண்டாரின் மோசடிகளை புரிந்துகொண்ட தலித் மக்கள் வீரக்குடி மணக்காட்டில் நடந்த மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் தஞ்சை மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேற்படி மோசடிகளை விளக்கி புகார் ஒன்றை கொடுக்கிறார்கள். நடவடிக்கை இல்லை என்ற பிறகு தமிழக மனித உரிமைக்கழகத்தின் ஆதரவை நாடினார்கள். அதன் அடிப்படையில் தமிழக மனித உரிமைக் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர், அரங்க குணசேகரனும், மாநில பிரச்சார செயலாளர் சி. மோட்ச குலசேகரனும் மேற்படி கிராமம் சென்று தலித் மக்களை கூட்டி நிலப் பிரச்சினை தொடர்பாக மக்களிடம் பேசி அவர்களின் அறியாமையை அகற்றி நிலத்தில் நம் உரிமையை நிலை நாட்டுவதன் அவசியம் குறித்து விளக்கிப் பேசி அன்று இரவு அந்த கிராமத்திலேயே தங்கி இருந்து அவர்களை போராட்டத்திற்கு தயார்படுத்தினார்கள்.

அதன்பிறகு அருணாசலம் மண்கொண்டார்மீது பேராவூரணி காவல் நிலையத்தில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன்படி நிலத்தை பறித்துக்கொண்டதாக கைது செய்ய வேண்டும் என்று ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டு, கைது செய்யக்கோரி தமிழக மனித உரிமைக் கழகத்தின் சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. குடியரசுத் தலைவர்வரை புகார் மனுக்களும் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அருணாசலம் மண்கொண்டார் பாதிக்கப்பட்ட தலித்துகளுக்கு எதிராகவும், தமிழக மனித உரிமைக் கழகத்திற்கு எதிராகவும் தலித் சமூகத்தைச் சேர்ந்த வேறு சில கருங்காலிகளையும், அந்த ஊர் ஊராட்சி மன்ற தலைவரான தலித்தையும் தூண்டிவிட்டு, அவருக்கு ஆதரவாகவும் தமிழக மனித உரிமைக் கழகத்தை சமுதாய துரோகிகள் என்றும் கண்டித்து அவருடைய செலவில் துண்டறிக்கைகளையும் சுவரொட்டிகளையும் வெளியிட செய்து அதன் மூலம் தலித் சமூகத்துக்குள் ஒரு பெரிய பிளவை உருவாக்க பண்ணையாருக்கே உரிய குணாம்சத்தோடு செயல்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவரை கைது செய்யக்கோரி தமிழக மனித உரிமைக் கழகம் 12.10.99-ல் ஒரு நாள் பட்டினிப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தது. இந்த போராட்டத்திற்கு எதிராக தலித் கருங்காலிகளை முன்னிறுத்தி போட்டி பட்டினிப் போராட்டம் நடத்த ஏற்பாடு செய்தார். போராட்டத்தையொட்டி பேராவூரணி வட்டாட்சியர் ஒரு சமாதானக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அந்த கூட்டத்தில் நிலத்தை அபகரித்து வைத்துள்ள அருணாசலம் மண்கொண்டாரை விட்டுவிட்டு பாதிக்கப்பட்டவர்களையும் தமிழக மனித உரிமைக் கழகத்தையும் ஒரு அணியாகவும், தலித் கருங்காலிகளை ஒரு அணியாகவும் வைத்து பேசச் சொன்னார். கூட்டத்திற்கு சென்றிருந்த தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொறுப்பாளர்கள். அரங்க. குணசேகரன், சி.மோட்சகுலசேகரன், கோட்டை. ராஜமாணிக்கம், தங்க. குமரவேல், வீர. மாரிமுத்து ஆகியோர் வட்டாட்சியரின் தலித் விரோதப் போக்கையும், ஆதிக்க சாதி விசுவாசத்தையும், சட்ட மீறலையும் மிகக்கடுமையாக நேருக்கு நேர் விமர்சனம் செய்துவிட்டு கூட்டத்திலிருந்து வெளியேறி விட்டனர்.

அருணாசலம் மண்கொண்டாரால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு பஞ்சாயத்துக்களில் பிற்பட்ட சாதிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு பேசப்பட்டதில், அரசால் வழங்கப்பட்ட நிலம்தான் வேண்டும் என்கிற தன் நிலைப்பாட்டில் தமிழக மனித உரிமைக் கழகம் உறுதியாக இருந்ததால் பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது. அதன்பிறகு அனைத்து சாதியினரையும், அனைத்து அரசியல் கட்சி தலைவர்களையும் கூட்டி ரூ. 25,000 செலவு செய்து கூட்டம் நடத்தி அதில் தமிழக மனித உரிமைக் கழகத்திற்கு எதிராக அனைத்து சாதிகளையும் தூண்டிவிட்டு ஒரு வன்முறையை உருவாக்க முயன்றார். அந்த கூட்டத்திற்கு சென்றிருந்த அரசியல் கட்சி தலைவர்களான முன்னாள் அமைச்சர் எம்.ஆர். கோவேந்தன், முன்னாள் எம்.எல்.ஏ. குழ. செல்லையா, தஞ்சை மாவட்ட கவுன்சில் உறுப்பினர் ஆ. பழனிவேல் ஆகியோர் தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொறுப்பாளர்களை பார்த்து பேசிவிட்டுத்தான் முடிவு செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தால் அவருடைய முயற்சி தோல்வியில் முடிந்தது.

அதன்பிறகு முன்னாள் அமைச்சர் எம்.ஆர். கோவேந்தனை தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொறுப்பாளர்கள் சந்தித்து உண்மை நிலையை விளக்கினார்கள். எல்லோருக்கும் பொதுவான ஒரு தேதியில் பேசி முடிவு எடுப்போம். அதுவரை உங்கள் அரசியல் வேலைகளை நீங்கள் தொடர்ந்து செய்யுங்கள். பேச்சு வார்த்தைக்காக அதை நிறுத்திவிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழக மனித உரிமைக்கழகம் தனது அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சியாக புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளான 6.12.99-ல் அம்பேத்கர் நினைவுநாள் நில மீட்பு விளக்க பொதுக்கூட்டம் ஒன்றை பேராவூரணியில் நடத்த திட்டமிட்டது. இதை அறிந்துகொண்ட எதிரி முன்னாள் அமைச்சர் மூலம் டிசம்பர் 6-ந்தேதி பேச்சு வார்த்தை நடத்துவதாக அவர்களே முடிவு செய்து அறிவித்தார்கள். பேச்சு வார்த்தைக்கு தொடர்பு கொண்ட முன்னாள் அமைச்சரிடம் அன்று அம்பேத்கரின் நினைவு நாள் நிகழ்ச்சி இருப்பதால் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள முடியாது என தமிழக மனித உரிமைக்கழகம் தெரிவித்து விட்டது. 6-ந் தேதி பொதுக்கூட்டத்திற்கான அனுமதி பெறுவதில் சிக்கல் ஏற்பட்டதால் பொதுக்கூட்டம் வேறு தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டுள்ளது. 6-ந் தேதி தமிழக மனித உரிமைக்கழகம் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்கிறது என்ற தகவலை முன்னாள் அமைச்சர் பல தலைவர்களிடம் கூறி அதன் அடிப்படையில் பேச்சு வார்த்தைக்காக கூட்டம் கூடி மாலை 5 மணிக்கு கலைந்து சென்றது.

7.12.99 அன்று தொலை பேசியில் தொடர்பு கொண்டு மீண்டும் பேச்சு வார்த்தைக்கு அழைத்த முன்னாள் அமைச்சரிடம் எவ்வாறு பேசப் போகிறார்கள் என்று தமிழக மனித உரிமைக்கழகம் கேட்டபோது, நாங்கள் 5பேர் கொண்ட குழு இருப்போம் அதில் வந்து உங்கள் பிரச்சினையை சொல்லுங்கள் நாங்கள் பேசி ஒரு தீர்ப்பை சொல்லுவோம் அதைக் கேட்டுக் கொள்ளுங்கள் என்று கூறினார். இந்த வார்த்தையைக்கேட்ட பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் முதலில் போனை கீழே வையுங்கள் என்று சொல்லி தொலைபேசி இணைப்பை துண்டித்து விட்டார்.

சாதாரண நிலையில் தலித்துகளுக்கு பட்டா வழங்கிய அரசு அதே நிலத்துக்கு ஒரு பண்ணையார் ஆசைப்படும்போது சட்டத்தை வளைத்து பண்ணையாருக்கே பட்டா போட்டுக் கொடுக்கிறது.

வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4-ன் விதி தலித் நிலத்தை பறித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்கிறது. ஆனால் இதில் எதிரி ஒரு பண்ணையார் என்பதால் சிவில் மேட்டர் என்று சொல்லி காவல் துறை ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறது.

மோதலுக்கு திட்டமிட்ட பண்ணையாரின் சூழ்ச்சியை தமிழக மனித உரிமைக்கழகம் தனது அறிவுக் கூர்மையால் முறியடித்துள்ளது.

பஞ்சாயத்தார் என்று சொல்லிக்கொண்டு வருகிற சாதி இந்துக்கள்-சாதி ரீதியாக தலித்துகளுக்கு எதிராக இருப்பதுடன் தலித்துகளின் அரசியல் செல்வாக்கை முறியடிக்க முயல்வதும் இதில் அம்பலமாகியுள்ளது.

தமிழக மனித உரிமைக் கழகத்திற்கு எதிரான மண்கொண்டாரின் செயல்களை கடந்த 4 மாத காலமாக தமிழக அரசு தீர்க்க முன் வராமல் சாதி வெறியாட்டத்திற்கு அவகாசம் அளிக்கிறது.

உள்ளாட்சிகளில் தலித்துகளுக்கான இட ஒதுக்கீடு கூட தலித் மக்களுக்கு எதிராக காட்டிக் கொடுக்கும் தலித்துகள் பதவிக்கு வரவே பெரிதும் பயன்படுகிறது என்பது இந்த பிரச்சனையில் தலித் மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்படும் தலித் சமூகத்தை சேர்ந்த வீரக்குடி ஊராட்சி மன்ற தலைவர் போன்றவர்களால் நிரூபணமாகிறது.

நிலம், தொழில், வணிகம், காண்ட்ராக்ட் தவிர்த்த ஏனைய பொட்டுக்கடலை, பொறி உருண்டை போன்ற சலுகைகளையே தலித்துகள் அனுபவிக்கலாம் என்பதும் இதனால் புலனாகிறது. நில மீட்பு போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழக விவசாயிகள் சங்கங்களும், விவசாயப்பிரச்சினைகளும் குறித்த ஓர் ஆய்வு!

-அரங்க குணசேகரன்.

தமிழகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சிகளின் தலைமையிலான விவசாய சங்கங்களும், மறைந்த நாராயணசாமி நாயுடுவின் தலைமையிலான ஒரு பிரிவுக்கு தலைமை தாங்கும் எம்.ஆர்.சிவசாமி தலைமையிலான விவசாய சங்கமுமே குறிப்பிடத்தக்க அளவில் விளங்குகின்றன. ஏனைய விவசாய சங்கங்கள் பகுதியளவில் உள்ளனவே. இச்சங்கங்கள் தவிர இதர அரசியல் கட்சிகளின் சார்பில் பெயரளவுக்கு சங்கங்கள் உண்டு. பயிர் முறை விவசாய சங்கங்களும், நதி நீர்ப்பாசன விவசாய சங்கங்களும் உண்டு. குறிப்பாக, கரும்பு விவசாயிகள் சங்கத்தையும், காவிரி பாசன விவசாயிகள் சங்கத்தையும், கீழ பவானி பாசன விவசாயிகளின் சங்கத்தையும் குறிப்பிட்டு சொல்லலாம்.

இச்சங்கங்கள் யாவும் விவசாயிகளின் நலன்களை முன்னிறுத்தி எழுப்பும் கோரிக்கைகள் கடந்த இருபது ஆண்டுகளில் ஒரே தன்மையுடையதாகவே இருந்து வருவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் அவை முறையே

1. இடுபொருட்களின் விலையை குறை!
2. உற்பத்திப்பொருட்களுக்கு கட்டுபடியான விலை கொடு!
3. கடனை தள்ளுபடி செய்! அல்லது ஜப்தி நடவடிக்கையை கைவிடு!
4. இலவச மின்சாரத்தை இரத்து செய்யாதே!

**இடுபொருட்களின் விலை குறைப்பு:**

பசுமைப் புரட்சிக் கொள்கையின் விளைவாக நாடெங்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கிய குறுகிய கால, மத்திய காலக் கடன்களில் பாதித்தொகையை உரமாகவும், மீதித் தொகையை ரொக்கமாகவும் வழங்கி விவசாயிகளின் வேதி உர தேவையையும், உழவுசால் செலவையும் ஈடு செய்ய என்று உணவு உற்பத்தியை பெருக்க அரசால் செலவிடப்பட்டது.

இவ்வாறு தொடங்கிய பசுமைப் புரட்சியின் அடுத்தகட்ட செயல்பாடாக நமது பாரம்பரிய நெல் விதைகளை அப்புறப்படுத்தி விட்டு, குட்டைரக ஐஆர்-8, ஐ-ஆர்-20 போன்ற பிலிப்பைன்ஸில் உள்ள போர்டு அரிசி ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரைத்த விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு கொடுத்தனர்.

தொடக்கக் காலத்தில் நமது வயல்கள் மிக பழங்காலந்தொட்டே தழை உரம், சாண எரு, உரம், கண்மாய், ஆற்றோர பொறுக்கு போன்ற சத்துக்களால் வளமேறியிருந்தன. காட்டுவளம் குன்றாத அந்தக் காலத்தில் பருவமழை, கோடையில் பயிரிட்ட வேர்முண்டுத் தாவரங்களால் நைட்ரஜன் சத்து நிறைந்திருந்து மண்புழு போன்ற இயற்கை உயிர்கள் உழவர்களின் நண்பனாயிருந்து மண்ணின் வளத்துக்கு வலுக்கூட்டின.

அந்நிலங்களின் மேல் வீரிய ஐ.ஆர்-8, ஐ.ஆர்-20 வகையின நெல் பயிருக்கு இடப்பட்ட வேதி உரங்களின் பின் முதல் மூன்று ஆண்டுகள் வரை சிற்சில நேரங்களில் ஐந்து ஆண்டுகள் வரை நல்ல மகசூல் கிடைத்தது. அறியாமை மிகுந்த நம் விவசாயிகள் மகசூல் பெருக்கத்துக்கு வேதி உரங்களும், புதியரக விதைகளுமே காரணம் என்று நம்பினார்கள். இப்படித்தான் நமது விவசாயம் வேதி உப்புக்களின் நச்சு வளையத்துக்குள் சிக்க வைக்கப்பட்டது.

நாளாக, நாளாக சாண, தழை எருவால் வளமூட்டப்பட்டிருந்த நம் வயல்கள் வேதி உரத்துக்கு அடிமைப்படுத்தபட்டவுடன் மகசூல் உயர்வுக்காக மேலும், மேலும் கூடுதலாக இருமுறை, மும்முறையாக ஆண்டுதோறும் போடப்போட ஆண்டுதோறும் மகசூல் குறைவதை உணரத் தலைப்பட்டனர். அரசோ, வேதி உப்புக்களால் குறைந்த மகசூலால் விவசாயிகளை நோக்கி, இதோ புதிய ஐ.ஆர் இரகங்கள் ஐ.ஆர்-38 என்று புதுப்புது வீரிய ரக விதைகளைக் கொடுத்து, அவற்றுக்கு மேலும் மேலும் வேதி உரங்களையும், பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பரிந்துரைத்தது. இவ்விதைகள் பயன்படுத்தப்பட்ட முதலாண்டு மகசூலுக்கும், மூன்றாமாண்டு மகசூலுக்கும் இடையே மகசூல் வீழ்ச்சி படிப்படியாக அதிகரித்து கொண்டே வந்தது.

இப்போக்குக்கு அடிப்படைக் காரணம் ஆண்டுதோறும் இடப்பெற்ற வேதி உரங்களின் விஷத்தன்மையால் வளமிழந்த மண், விதையின் ஆற்றலின்மை, கடுமையான பூச்சித் தாக்கலும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் விஷத்தன்மை மண்ணில் ஏறியதுமே ஆகும்.

இதனால் ஏற்பட்ட மகசூல் இழப்பை தவிர்க்க விவசாய சங்கங்கள் கண்டுபிடித்த கோரிக்கைகள் தான் அரசே, இடுப்பொருட்களின் விலையைக் குறை! என்ற முழக்கமாகும். வேதி உரங்களின் கேடுகளுக்கு எதிராகப் போராடாமல், பாரம்பரிய விதைகளின் உற்பத்தி திறனை அதிகரித்துக் காத்திடப் போராடாமல், போர்டு நிறுவனம் பரிந்துரைத்த விதைகளுக்கு ஆதரவளித்துக் கொண்டே, இடுப்பொருட்களான உரம், பூச்சிக் கொல்லிகளின் விலைகளைக் குறைக்கக் கோரினார்கள்.

வேளாண்மைப் பரப்பு விரிவடைய விரிவடைய அதற்கேற்றாற்போல் வேதி உரத்தின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, ஆண்டுதோறும் பல லட்சம் ஏக்கர் நிலங்கள் உற்பத்தி ஆற்றலை இழந்து பெரும் நஷ்டத்தைச் சந்தித்து விவசாயிகள், தாங்கள் பயிரிடுவதற்காக வாங்கிய கூட்டுறவுக் கடனைக் காலத்தில் திருப்பிச் செலுத்த முடியாமல் வட்டியும், அசலும், கூடுதல் வட்டியும் சேர்ந்து இன்று அசலைப் போல இருமடங்காக கடன்சுமை அழுத்த கலங்கி நிற்கின்றனர்.

இந்தக் கடனுக்குப் பொறுப்பாளி யார்? விவசாயிகளா? விவசாயிகளுக்கு வேதி உரத்தையும், ஐ.ஆர் வகையின் ஆற்றலற்ற விதை நெல்லையும் பரிந்துரைத்த மத்திய மாநில அரசுகளா? இத்தகைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உற்பத்தி வளையத்தை இந்தியாவின் மீது திணித்த ஏகபோக நாடுகளின் ஆராய்ச்சிக் கூடங்களாக? இந்திய தமிழக விவசாயிகள் மீது திணிக்கப்பட்ட நவீன விவசாய உற்பத்தி முறை குறித்து ஆய்வு செய்யாமல், அதில் உள்ள கேடுகளைக் களையாமல், எல்லா விவசாய சங்கங்களுமே சொல்லி வைத்தது போல இடுப்பொருட்களின் விலையை குறை என்று வேதி உரத்தின் கூடுதல் பயன்பாட்டுக்கு வழிவகுக்கும் கோரிக்கையையே முன் வைப்பதில் என்ன பொருள் இருக்க முடியும்?

**2. உற்பத்தி செலவுக்கேற்ற கட்டுப்படியான விலை**

இரண்டாவது கோரிக்கையான உற்பத்திச் செலவுக்கு ஏற்ற கட்டுபடியான விலையைக் கொடு. இக்கோரிக்கை ஓரளவு நியாயமாக ஏற்றுக் கொள்ளக் கூடியதே! ஆனாலும் வேதி உரப் பயன்பாட்டுக்கு மாறாக இயற்கை எரு அதிகளவு பயன்படுத்தப்பட்டு, நமது பாரம்பரிய விதைகளுக்கு புத்துயிரூட்டி திறன் அதிகரிக்கப்பட்டால் உற்பத்தி செலவில் வரும் நஷ்டத்தையும் ஈடுகட்டி நில வளமும், உற்பத்தி வளமும் பாதுகாக்கப்படும் போது நோயிலிருந்து பாதுகாப்புப் பெறும் நமது உடல்வளம் பராமரிக்கப்படுவதால், தேவையற்ற மருத்துவச் செலவினைக் குறைவானது– உற்பத்தி பொருட்களுக்கான ஆதாரவிலை கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் பெரும் பாதிப்பு ஒன்றும் நேர்ந்து விடப் போவதில்லை. கட்டுப் படியான விலைக் கோரிக்கை சிறு, குறு மற்றும் விவசாயப் பொருளாதாரத்தை மட்டுமே நம்பியிருக்கும் மத்தியதர விவசாயிகளுக்கு பேரளவு பயனை அளிக்கப் போவதில்லை.

விவசாயமல்லாத வேறு வகையினங்களில் வருமானம் ஈட்டும் மத்திய தர விவசாயிகள், பணக்கார விவசாயிகள், நிலபிரபுக்கள் (பண்ணையார்கள்) ஆகியோருக்கே கட்டுப்படியான விலை கோரும் கோரிக்கை பெரிய பயனைத் தரவல்லதாகும். இத்தகைய விவசாயிகள் மல்லிகை மலர், வாழை, எள், கரும்பு, பருத்தி, மஞ்சள், தென்னை, சூரியகாந்தி போன்ற பணப்பயிர் உற்பத்தியிலும், நெல் உற்பத்தியிலும் பங்கேற்பதுடன் இதர நகர்புற சந்தைப் பொருளாதார வர்த்தகங்கள், வார, மாத, கந்தவட்டி, ஏலச்சீட்டு போன்ற நிதிநிறுவனத் தொழில்களிலும், சினிமா, தொலைகாட்சி, கம்ப்யூட்டர், இன்டர்நெட் போன்ற தகவல் தொடர்பு சாதனத் தொழில்களிலும், கார், ஆட்டோ, லாரி, மினிலாரி போன்ற வாகனங்களின் முதலீட்டிலும் கான்ட்ராக்ட்டுகளிலும் ஈடுபடுவதால் இவர்கள் விவசாயத்தில் பெரும் நஷ்டத்தைச் சந்தித்தவர்கள் என்று வகைப்படுத்த முடியாது. எனவே இவர்களை கஞ்சிக்கு செத்து கடனில் மூழ்கும் விவசாயிகளாக கருதி உற்பத்திப் பொருளுக்கு விலை உயர்வு அளிப்பது, ரேஷன் கடை அரிசி உணவை நம்பியிருக்கும் கோடானகோடி நிலமற்ற கிராமப்புற ஏழை விவசாயக் கூலிகளையும், சிறு குறு விவசாயிகளின் பற்றாக்குறை கால உணவுபொருள் செலவையும், அரசின் உணவு மானியச் செலவின் அதிகரிப்பையும் என எல்லாத் தரப்பையும் பாதிக்கும்.

**3. கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்! கூட்டுறவுக் கடன்களுக்காக ஜப்தியைக் கைவிடு!**

வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் கடன் கொடுப்பதில் திட்டவட்டமான கொள்கைகள் வரையறுக்கப்படாததால், பல்துறை வருவாய் வகையினத்தில் உள்ள விவசாயிகளான பணக்கார விவசாயிகளும், நிலப்பிரபுக்களும் (பண்ணையார்) தங்கள் விவசாய மில்லாத தொழில் வளர்ச்சிக்கேகூட, வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் வாங்கும் கடன் தொகையை முதலீடும் செய்யும் போக்கும் நிலவுகிறது.

இன்னும் சில கூட்டுறவு வங்கிகளில் சில சிறு விவசாயிகள் பெயரில் கடன் வாங்கியதாக கணக்குகள் பதிவாகி இருக்கும். கடன் தொகையை அனுபவித்தோர் வேறு சிலராக இருப்பர். கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடியாகும் காலத்தில் கடன் பெற்றதாக பதிவுகள் உள்ளவர்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக அரசு அறிவிக்கும்.

இந்த அற்புதங்களுக்கு அப்பால், பெரும் பணக்கார விவசாயிகளும், நிலபிரபுக்களும் (பண்ணையார்கள்) அங்கம் வகிக்கும் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கடனை தள்ளுபடி செய் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக– அவர்கள் சிறு, குறு, மத்திய தர விவசாயிகளையும், சில நேரங்களில் விவசாயக் கூலிகளையும் கூட தங்கள் போராட்டத்தோடு அணி சேர்த்துக் கொள்கின்றனர். சிறு குறு விவசாயிகளுக்கு பயிர்க்கடன் என்பது பேரளவு கொடுக்கப்படுவதில்லை. இவர்களுக்கு கொடுக்கப்படும் கடன் தொகையின் மொத்த அளவு மிகச் சில கோடிகளே. ஒரு முறை பயிர்க்கடன் பெற்றாலும் மறுமுறை கடன் வாங்கும் அளவுக்கு அவர்கள் திருப்பிச் செலுத்தும் திராணியைப் பெறுவதில்லை. இன்றைய உற்பத்தி முறையின் பாதிப்பில் பணக்கார விவசாயிகள் சிலரே பதறித்துடிக்கும்போது ஏழை விவசாயிகளின் நிலை சொல்லியா தெரியவேண்டும்! ஆகவே ஏழை விவசாயிகளின் கடனை இரத்து செய்ய வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

விவசாயமில்லாத பல்துறை வணிக, தொழில்கட்கும் கூட்டுறவுக் கடனைப் பயன்படுத்திக் கொண்ட பணக்கார விவசாயிகளும், நிலபிரபுக்களுமாகிய மேட்டுக்குடியினர் முடிந்தவரை கடனை தள்ளுபடி செய்ய அரசை நிர்பந்திக்கும் போராட்டங்களுக்கு ஏழை விவசாயிகளையும் தங்களோடு சேர்த்துக் கொள்கின்றனர் , எப்படியாவது கூட்டுறவுக் கடனை வசூலிக்க எண்ணும் அரசு பத்து ஏக்கருக்கு மேல்பட்ட பணக்கார விவசாயிகளையும் நிலபிரபுக்களையும் கடன் கட்ட நிர்பந்தித்து ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, விவசாய சமூகத்தின் மானம் போச்சு மரியாதை போச்சு என்று கூக்குரல் இடுகின்றனர்.

தன்னிடம் கடன் பெற்ற ஏழைகள் கடனைக் கட்ட தவறுகிற போது, நாணயமில்லாதவன், மோசடிக்காரன் என்று பட்டம் சூட்டும் பணக்கார, நிலபரபு விவசாயிகள் தான்; தாங்கள் அரசிடம் பெற்ற கடனைக் கட்டத் தவறும் போது ஜப்தி நடவடிக்கை எடுக்கும் அரசைப் பார்த்து விவசாயிகளை கேவலப்படுத்துவதாகச் சொல்லி மேட்டுக்குடியினரின் மோசடியை மறைக்க விவசாய வேடம் போடுகின்றனர். கடந்த 1997இல் கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாய சங்கத்தினர் 1997இல் நவம்பர் டிசம்பரில் பெருமழை, வெள்ளம் வந்தபோது, பயிரெல்லாம் வெள்ளத்தில் மூழ்கி விட்டது. எனவே வெள்ள இழப்பீடு வேண்டும் என்றும், தண்ணீர் தீர்வை, நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கோரினர். ஆனால் அறுவடை நேரத்தில் எல்லா நெல்லையும் அரசு கொள்முதல் செய்ய முடியாமல் திணறிய போது,அனைத்து நெல்லையும் அரசே கொள்முதல் செய்! என்றும் போராடினர். **நவம்பர் டிசம்பரில் வெள்ளத்தில் எல்லா பயிர்களும் மூழ்கியிருந்தால் ஜனவரியில் எப்படி கொள்முதல் நிலையம் திணறும் வகையில் நெல் அறுவடைக்கு வந்திருக்கும்? ஏனிந்த முரண்பாடு?** வெள்ளத்தை வடிக்க வடிகால்களை செப்பனிடுவதை அரசு செய்யாதது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடிகால்களையும், குளம், குட்டைகளையும் பணக்கார விவசாயிகள் ஆக்கிரமித்துக் கொண்டதால் அல்லவா வெள்ளம் சூழ்ந்தது.

அடுத்தக் கட்டமாக, ஜப்தி நடவடிக்கைக்கு எதிராக மானம் போச்சு, மரியாதைபோச்சு என்று வானத்துக்கும் பூமிக்குமாய் எகிறும் அரசியல் கட்சிகளும், விவசாய சங்கங்களும், பணக்கார நிலபிரபு விவசாயிகளும் காலங்காலமாக தன் கீழ் ஊருக்குக் கிழக்கே, ஒதுக்கி வைக்கப்பட்ட ஏழை, எளிய, நலிவடைந்த சேரிவாழ் மனிதனை,சேரிவாழ் விவசாயியை அடக்கி, ஒடுக்கி, அவமானப்படுத்தி, அவர்தம் மானம், மரியாதை பற்றி எள்ளளவும், எள்ளின் முனையளவும் கவலை கொள்ளாமல் இம்சித்து வருவதை நாடறியும். மான, மரியாதை என்ன மேட்டுக்குடியினரின் மொத்த குத்தகையா? இவர்களின் மானங்காக்க, அந்த ஏழை, கூலி சிறு குறு விவசாயிகளும் விவசாய வர்க்கம் என்ற பெயரில் எந்த நிபந்தனையும் இல்லாமல் எப்படி சேர்ந்து போராட முடியும்.

பணக்கார, நிலப்பிரபு மேட்டுக்குடி விவசாய வர்க்கம் ஏழை, சிறு குறு விவசாயிகளுக்காகவும் தான் நாங்கள் போராடுகிறோம் என்று சொல்லி, தாங்கள் வாங்கிய கடனைக் கட்ட மறுப்பதற்கு சிறு விவசாயிகளை கேடயமாக நிறுத்துவது தங்களின் அப்பட்டமான சுயநலனுக்கே என்பதை, விவசாய சங்கங்களின் நான்காவது கோரிக்கையை பரிசீலிக்கும் போது அப்பட்டமாகத் தெளிவாகும்.

## 4. இலவச மின்சாரம்

தமிழகஅரசால் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் மின்சாரத்துக்கான மானியத்தொகை ஆண்டொன்றுக்கு ரூ.1800 கோடி ஆகிறது. இம் மின்சாரமானது, ஆறு கோடி தமிழ் மக்களின் பொதுச் சொத்து. இதை சில ஆயிரம் பணக்கார விவசாய வகுப்பினர் இலவசமாக பெறுவதில் நமக்கென்றும் பொறாமையோ எரிச்சலோ இல்லை இவர்களை விட பலமடங்கு தேசிய சொத்தை நாட்டின் தரகு பெருமுதலாளிகளும், பன்னாட்டு முதலாளிகளும் சுளையாக அபகரிப்பதை நாம் அறியாமலும் இல்லை.

ஆனால் இலவச மின்சாரம் பெறும் பணக்கார நிலப்பிரபு, மேட்டுக்குடி விவசாய வகுப்பினரின் மக்கள் விரோதப் போக்கை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? மொத்த மக்களின் பங்குரிமைக்கான மின்சாரத்தை இலவசமாக நுகரும் இவர்கள், ஏழை சிறு, குறு விவசாயிகளுக்கு பல இடங்களில் பாசனத்துக்கு தண்ணீரே கொடுப்பதில்லை. கொடுக்கும் சிலரும் மணிக்கு 30 ரூபாய் கட்டணம் வசூலிக்கின்றனர். இது ஏன்? பூமிக்கு கீழேயிருக்கும் தண்ணீர் பணக்கார, நிலப்பிரபு மேட்டிக்குடி விவசாயிகளின் அப்பன் விட்டுச் சொத்தா? பூமிக்கு கீழே 3அடி ஆழத்திலிருந்து கிடைக்கும் பெட்ரோல், மண்ணெண்ணை, நிலக்கரி, தங்கம் போன்ற எல்லா கனி வளங்களும் அரசுக்கு சொந்தமென்றும், அரசு வழி மொத்த மக்களுக்குச் சொந்தமென்றும் சட்டம் சொன்னதால் தானே, திருத்துறைப்பூண்டி அருகே, அண்மையில் தீவாம்பால் பட்டினத்தில் கிடைத்த சாமி சிலைகளை எடுப்பதில் அரசுக்கும் மக்களுக்கும் போட்டிவந்து மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டில் பலியானார்கள். ஆனால் பூமிக்கு கீழே 300 அடிக்கும் கீழே இருக்கும் தண்ணீர் மட்டும் எப்படி ஆழ்குழாய் கிணற்றுக்கு முதலீடும் போடும் செல்வத்தகுதி படைத்தோருக்கு மட்டுமே சொந்தமாகும்? தண்ணீரும் பொதுவானது; மின்சாரமும் பொதுவானது இவற்றை தன் சொந்த நலனுக்கு தனியுரிமை கொண்டாடவே ஆழ்குழாய் மோட்டார் போன்றவற்றில் முதலீடு செய்கின்றனர். சில ஆயிரம் ரூபாய் முதலீடு செய்துவிட்டு பொதுவான தண்ணீரையும், பொதுவான மின்சாரத்தையும் இலவசமாக அபகரிக்கும் பணக்கார, மேட்டிக்குடி விவசாயிகள் சிறு, குறு விவசாயிகளிடம் மணிக்கு முப்பது ரூபாய் வசூலிப்பது ஏன் என்று யாரேனும் விளக்குவார்களா? இதனை அனுமதித்துக் கொண்டிருக்கும் அரசாவது விடை சொல்லுமா? இந்தப் பணக்கார மேட்டுக்குடி விவசாயிகள்தான், கடன் தள்ளுபடிக்கும், ஜப்திக்கெதிராகவும் விவசாய வர்க்கம் என்று சிறு குறு, விவசாயிகளை துணைக்கு அழைக்கின்றனர் எவ்வளவு அற்புதமான முரண்பாடு!?

உணவு உற்பத்திக்காக என்று நெல், கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற தானியங்களுக்கு சிலவரம்புகளுக்குட்பட்டு, அனைத்து தரப்பு விவசாயிகளும் பயன்படும் வகையில் இலவச மின்சாரம் வழங்குவதை மனப்பூர்வமாக அங்கீகரிப்பது தவறில்லை. ஆனால் கரும்புக்கும், வாழைக்கும், மஞ்சளுக்கும், பருத்திக்கும், தென்னைக்கும், மலர் சாகுபடிக்கும் இலவசமின்சாரம் கேட்பதும், வழங்குவதும் எவ்வளவு பெரிய அபத்தம்?

பணப்பயிர் சாகுபாடி செய்யும் பணக்கார, நிலப்பிரபு மேட்டுக்குடி விவசாயிகளும், இப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்களும், இப்பொருள்களை நுகரும் மேலைநாட்டு மக்களும் பயனடைய கோடானகோடி ஏழைக்குச் சொந்தமான தண்ணீரும், மின்சாரமும் இலவசமாக தாரை வார்க்கப்பட வேண்டுமா?

கூட்டுறவுக் கடன் சங்கம் வழியாக வேதி உரத்தையும், பூச்சிக் கொல்லியையும் போர்டு அரிசி ஆராய்ச்சி நிறுவனம் தந்த குட்டை ரக ஐ.ஆர். வகையின விதைகளையும் கொண்டு நம் வேளாண்மையை கடன் வலைக்குள் தள்ளி, நிலத்தை பாழடித்த பசுமைப் புரட்சியால் பலன் அடைந்தவர்கள் பூச்சி தின்னக்கூடிய விதையை விற்று பூச்சிக் கொல்லி (மருந்தை) விற்ற பன்னாட்டு முதலாளிகள், இன்று அம்பலப்பட்டுப் போய், அடுத்தாக பூச்சியே தாக்காத விதையை தருகிறோம் என்று விதையின் மூலம் நம் கதையை முடிக்க கால் பதித்துள்ளார்கள்.

## மான் சாண்டோ கம்பெனியின் மலட்டு விதை, டெர்மினேட்டர்- வெர்மினேட்டர்

### 1. முடிவிப்பு விதை:

(டெர்மினேட்டர் விதை) முடிவிப்பு தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட விதைகளுக்கு இரண்டு குணங்கள் உண்டு.

(அ) உச்சகட்ட விளைச்சல் தரும்

(ஆ) தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் இப்பண்புகாரணமாக மறு முளைப்புத் திறன் இருக்காது. இதனால் விவசாயிகள் ஒவ்வொரு முறையும் இக்கம்பெனியிடமிருந்து விதை வாங்க வேண்டியிருக்கும்.

### 2. மடிவிப்பு விதை:

(வெர்மினேட்டர் விதை) இந்த தொழில் நுட்பம் முடிவிப்பு நுட்பத்திற்கு சற்று மாறுபட்டது. இந்த மடிவிப்பு தொழில் நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட விதைகள்.

அ. ஒரு குறிப்பிட்ட களைக் கொல்லியை ஏற்றுக் கொள்ளும் வகையில் தெளித்தால் தான் பயிர் வளரும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆ. ஆனால் அந்தக் களைக் கொல்லியானது அவ்விதையின் மறுமுளைப்புத் திறனை அழித்து விடும். இவ்வாறு புறக்காரணி ஒன்றினால் அழிக்கப்படுமாறு செய்யப்பட்டுள்ள நுட்பம் மடிவிப்பு தொழில் நுட்பமாகும். இதன் காரணமாக விவசாயிகள் இக்கம்பெனியிடம் இருந்தே விதையையும் களைக் கொல்லியையும் வாங்க வேண்டியிருக்கும்.

பூச்சிக்கொல்லி விற்பனையில் கொள்ளை லாபம் அடித்து நிலத்தைப்பாழடித்த மாண்சாண்டோ கம்பெனி தற்பொழுது இந்திய விதைச் சந்தையில் புகுந்து, மரபின மாற்ற தொழில்நுட்ப அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மலட்டு விதைகளை பருத்தி தர்பூசணி, காய்கறிகள், இவற்றின் சாகுபடிக்கு வழங்கிவருகிறது.

இவ்விதைகள் அதிகமான நச்சுத் தன்மையும் மறு உற்பத்தி திறன் இன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் கர்நாடகாவில் கார்கில் விதைக்கம்பெனியை எதிர்த்து உடைத்த பேராசிரியர் நஞ்சுண்டசாமி அவர்கள் தலைமையிலான (கர்நாடக ராஷ்டியா ராஷ்தா சங்கம்) கர்நாடக விவசாயிகள் சங்கம் தற்போது மாண்சாண்டோ கம்பெனியை எதிர்த்து போராடியுள்ளது. ஆந்திராவிலும், மகாராட்டிரத்திலும் விவசாய சங்கம் விழிப்படைந்து இக்கம்பெனிக்கு எதிராக போராட்டம் வலுத்து வருகிறது. ஆனால் தமிழ்நாட்டில் எந்தச் சலனமும் இல்லை, சில இயற்கை விவசாய அமைப்புக்கள் தொண்டு நிறுவனங்கள் தவிர இவ்வெதிர்ப்பின் பக்கம் யாரும் முன் வரவில்லை. அரசின் அனுமதியில்லாமலேயே தருமபுரி, சேலம் போன்ற மாவட்டங்களில் பருத்தி சாகுபடிக்கும், தர்பூசணி சாகுபடிக்கும் மாண்சாண்டோ கம்பெனி முகவர்கள் (ஏசெண்டுகள்) கள்ளத்தனமாக இவ் விதைகளைக் கொடுத்துள்ளனர். முதலாண்டு பெரும் லாபம் ஈட்டிய விவசாயிகள் அவ்விதையை மறு ஆண்டுக்கு பயன்படுத்தியபோது அதல பாதாள நஷ்டத்தில் மூழ்கி ஆறாத் துயரத்தில் வீழ்ந்துள்ளனர்.

காடு, மலை, கடும் வறட்சி, பெருவெள்ளம், முரண்பாடான தட்பவெப்பநிலை, கால இடைவெளி, நில இடைவெளி போன்ற பல்வேறு நெருக்கடிகளிலும், காலங்காலமாக நம்மால் பாதுகாக்கப் பெற்றுவந்த நமது பாரம்பரிய விதைகள், நம்மிடமிருந்து அப்புறப் படுத்தப்பட்டு, பசுமைப்புரட்சி என்று சொல்லி நாம் அரசின் விவசாய விரிவாக்க அலுவலகங்கள் முன்னாள் போர்டு அரிசி ஆராய்ச்சி கழக ஐ.ஆர் வகையினத்துக்காக கையேந்தி நின்று கொண்டிருக்கிறோம். மாண்சாண்டோ மற்றும் மரபணு தொழில் நுட்ப முடிவிப்பு விதை, மடிவிப்பு விதையை நாம் அனுமதித்தால் நாளை நாம் அமெரிக்காவிடம் திருவோடு தான் ஏந்த வேண்டிய நிலை ஏற்படும். இக்கொடுமையான நச்சுசூழலிலிருந்து விடுபடுவதற்காக தமிழக அரசோ, தமிழக அரசியல் கட்சிகளோ, விவசாய சங்கங்களோ, விவசாய சமூகத்தை தட்டி எழுப்பாமல் இடு பொருள்கள் விலையைக் குறை, கட்டுப்படியான விலை கொடு, கடனைத் தள்ளுபடி செய், ஜப்தியைக் கைவிடு, இலவச மின்சாரத்தை ரத்து செய்யாதே போன்ற கோரிக்கைகளை மட்டும் எழுப்புவது மேற்கண்ட விவசாய சங்கங்களும், அவற்றின் தலைவர்களும் உண்மையான கோடானகோடி ஏழை விவசாயிகளைப் பற்றியும் மொத்த மக்களின் நலனையும் நோக்கமாகக் கொள்ளாமல் மேல் தட்டுவர்க்க மேட்டுக்குடி லாப நோக்கமே மேலோங்கியிருப்பவர்களாக இருப்பதையே காட்டுகிறது.

**மக்களை காக்க-மக்களுக்கு உணவூட்டும் மண்ணை காக்க சனநாயகப் பூர்வமான விவசாயக் கொள்கைக்காக போராடுவோம்!**

1. நிலத்தின் மீதான முற்றாளுமையை எதிர்ப்போம்!

2. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்கிடப் போராடுவோம்!

3. சிறு, குறு நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரும் விவசாயத் திட்டங்களை கோருவோம்!

4. ஆற்றுநீர், ஏரிநீர், குளத்து நீர், நிலத்தடி நீரில் பணக்கார, நிலப்பிரபு விவசாயிகளின் ஏகபோக உரிமையின்மீது — நிலமற்ற விவசாயக் கூலிகள் சிறு, குறு விவசாயிகள் பெண்கள், அனைவரின் பங்குரிமை விதத்தை உற்பத்தி லாபத்தில் கோருவோம்!

5. விவசாயக் கூலிகளின் உயிர் வாழ்வுரிமைக்கான உத்திரவாதமுள்ளதும், கால்நடைகள் மற்றும் அத்தியாவசியத் தேவையின் அடிப்படையில் மட்டுமான எந்திர பங்கேற்பு கொண்ட விவசாயத் திட்டத்திற்காகப் போராடுவோம்!

6. மண்ணின் பாரம்பரிய விதைகளையே விதைநேர்த்தி செய்து, செறிவூட்டி, இயற்கை உரத்தின் மூலம் உற்பத்தியை பெருக்குவோம்!

7. உற்பத்தி பெருகியிருப்பது புதிய ரக விதை உரங்களால் மட்டுமல்ல; பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் புதியதாக பயிர் நிலங்களாக விரிவாக்கப் பட்டிருப்பதும், ஒரு பருவ முறை விவசாயம் இருபருவ முறை விவசாயமாகவும், இருபருவ முறை விவசாயம் மூன்று பருவமுறை விவசாயமாகவும் பல புஞ்சைத் தானிய நிலங்கள் நஞ்சையாக மாற்றப்பட்டதும் ஆகிய பல்வேறு காரணங்களுமே நம் விவசாயிகள் உணவு உற்பத்தியை பெருக்கியதற்கு அடிப்படை என்பதை பலமுறை விவசாயிகளிடமும், இதர பகுதி மக்களிடமும் வலுவாக எடுத்து சொல்லுவோம்.

8. பன்னாட்டு உரக்கழகங்களின், விதைக் கழகங்களின் ஏஜெண்டுகளாக, தரகுமண்டிகளாக மாறிவிட்ட கிராம வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை, நமது மக்களின் தேவை, அளிப்பு, கிராம மக்கள் அனைவரின் பங்கேற்பு சுய நிர்வாகம் என்ற கோட்பாட்டில் வளர்த்தெடுப்போம்!

9. நிலச்சீர்திருத்தம் என்பதை அதன் உண்மையான அர்த்தத்தில் உழுபவர்க்கே நிலம் உணவு உற்பத்தியில் பங்கேற்பவருக்கே நிலம் என்ற கோட்பாட்டில் ஆண்கள் பெண்கள் இருவருக்குமான நில உரிமை வழங்கிடப் போராடுவோம்.!

10. கோவில், மடங்கள், அறக்கட்டளைகள், நிலப்பிரபுக்களின் நிலங்கள், நிலமற்றோருக்கு கிடைக்கப் போராடுவோம். கண்மாய் புறம்போக்கு, உள்ளாட்சிப் புறம்போக்கு, நெடுஞ்சாலைப் புறம்போக்கு, தரிசுப் புறம்போக்கு, வனசரக புறம்போக்கு நிலங்களை விவசாய உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்ட நிலமற்ற மக்களுக்கு வழங்கிடப் போராடுவோம்.!

11. மலையடிவாரப் புறம் போக்குகளில் மலைவாழ் பழங்குடி மக்களின் இயற்கை வாழ்வாதார, இயற்கை உற்பத்தி, மற்றும் வேளாண்மை உற்பத்தி உரிமைகளில் அவர்களுக்குள்ள முன்னுரிமையை, முற்றுரிமை யாக்குவோம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



12, இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை வேளாண்மை உற்பத்தி குடும்பங்களின் வணிக தொழில்துறை, காண்ட்ராக்ட், பண்ணை உற்பத்தி, நிதிநிறுவனம், அரசுப்பணி, தனியார்துறைகளிலும் கூட பேரளவு வருமானம் தரக்கூடிய பணி வாய்ப்புக்கள் இவற்றை கருத்தில் கொண்டு மறுமதிப்பீடு செய்து அக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நில உரிமையில் குறைப்பு / விலக்கு அல்லது நிலமற்றோருக்கும் குறு சிறு விவசாயிகளுக்கும் நில உடைமையை மாற்றும் திட்டங்களை நடைமுறைப் படுத்த போராடுவோம்.

13. வணிகம், இதர தொழில் துறைகளில் சந்தைப் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நகர்ப் புறங்களிலிருந்து கிராமப்புறம் நோக்கிவரும் ஏழைகளுக்கும் மறுமதிப்பீட்டுத் திட்டத்தில் வேளாண்மை நிலங்கள் வழங்கப் போராடுவோம்!

14. குறிப்பிட்ட பத்தாண்டுகளை இலக்காக கொண்டு நில உடைமை இல்லாத தலித்துகளே நாட்டில் இல்லை என்றும் திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்து நில விநியோகத்திட்டத்தையும், உற்பத்தியையும் பெருக்குவோம்!

15. நமது மக்களின் உள்நாட்டுத் தேவைக்கு, உள உடல்நல தேவைக்கும், ஏற்ற நெல், கோதுமை, கேழ்வரகு, கம்பு, சோளம், காய்கறிகள், பருப்புவகைகள் இவற்றுக்கு முன்னுரிமை கொடுத்தும், தட்பவெப்ப, பருவநிலை, நிலத்தின் தன்மைக்கேற்ப ஏற்றுமதி சார்ந்த பணப் பயிர்களையும் உற்பத்தி செய்வோம்!

16. எந்த நிலையிலும் கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கிய கதையாக உணவுப் பயிரிடத்தில் வணிகப்பயிரை முதன்மைப்படுத்தாமல் மக்களின் உயிராதார உணவுரிமைக்கான முன்னுரிமையைப் பராமரிப்போம்!

17. வேளாண்மை உற்பத்திக்கான சிறுவித சிறு தொழில்களை வளர்க்கத்துணை புரிவதோடு, வேளாண்மைப் பொருள்களின் உபரி மற்றும், துணைப் பொருள்களைக் கொண்ட கிராமப்புற குடிசைத் தொழில்கள், சிறு தொழில்களுக்கு உற்ற பாதுகாவலாக தொழில் வளர்ச்சியின் தாய்வீடாக விவசாயத்தை மாற்றுவோம்.!

18. கிராமப் பொதுச்சொத்து, வருமானம், வளர்ச்சியின் தேவை இவற்றினடிப்படையில் பங்கீடும்– வரிவிதிப்பும் இருக்குமாறு **வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் ஊராட்சி மன்ற நிர்வாகமும் கிராம சபாவும்** இணைந்து விரிந்த சனநாயகப் பூர்வமான கலந்துரையாடல் மூலம் கிராம நிர்வாகத்தை நடத்திட முன் கையெடுப்போம்!

19. மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை அரசே செய்து தருவதுபோல் விவசாயத்திற்கான நிலத்தடி நீரையும் அரசே விவசாயிகளுக்கு வழங்க கோருவோம்.

**20. நிலத்தை தனி உரிமையாக்கி கொண்ட மேட்டுக்குடியினரே இன்று தண்ணீரையும் வெப்ப ஆற்றலான மின்சாரத்தையும், தனி உரிமையாக்கி கொண்டுள்ளனர். சிறு, குறு விவசாயிகளே நிலமற்ற விவசாய கூலி ஏழைகளே சமூக ரீதியாக ஒதுக்கப்பட்ட தலித் மக்களே, பெண்களே நிலத்தின் மீதான பொது உரிமைக்கான நமது போராட்டத்தின் வெற்றியில் தான் தண்ணீர் மின்சாரம், காற்று, விண் இவற்றின்மீதான நமது பொது உரிமையை நிலைநாட்ட முடியும் என்பதை உணருவோம்.**

## கரூர் மாவட்டம்
## அரவாக்குறிச்சியில் ஆதிதிராவிடர்களுக்கு அநீதி!

1958இல் காமராசர் ஆட்சி காலத்தில் அரவாக்குறிச்சியில் அருந்ததியர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது. ஒரு ஏக்கர் 30 செண்ட் பரப்பில் 41 ஆண்டுகளாக குடியிருந்து வரும் தலித்துகளுக்கு இன்றுவரை குடியிருப்பு மனைப்பட்டா வழங்கப்படவில்லை.

பட்டா வழங்கி எ.பதிவேட்டில் கிராமக் கணக்கில் ஏற்றினால் தான் தலித்துகளுக்கு நிலத்தின் மீதான சட்டப்பூர்வ உரிமை கிடைக்கும். கடன், பிற அரசு சலுகைகளைப் பெற முடியும். ஆனால் அங்குள்ள கிராம நிர்வாகமும், உள்ளூர் சாதி இந்துகளில் உள்ள அரசியல் பிறமுகர்களும் அவர்களுக்கு இதுவரை பட்டா வழங்காமல் தடுத்து வந்துள்ளனர். அரசு அதிகாரிகளும் 40 ஆண்டுகளாக தொடர்ந்து குடியிருப்பவர்களிடம் பஞ்சாயத்து வீட்டு வரி வாங்கினாலும், பட்டா கொடுக்கவில்லை.

மேற்கண்ட நிலங்களின் 1958க்கு முந்தைய பதிவுகளில் (ஆவணங்களில்) மாட்டுமந்தை என்றும், லோக்கல் பண்ட் பேட்டை என்றும், ரோடு என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. உண்மையில் அங்கு தலித் மக்கள் தான் வசித்து வருகின்றனர். தற்போது அரவாக்குறிச்சி பேரூராட்சி தலை நகரமாக மாறிவிட்டதால் தலித்துகள் குடியிருக்கும் நிலப் பகுதி நகரின் மையப் பகுதியாகாவும், விலை மதிப்புள்ளதாகவும் ஆகிவிட்டதால், அவர்களை மாட்டுமந்தைப் புறம்போக்கு என்று காரணம் சொல்லி உள்ளூர் அதிகாரிகளும் ஆளும் கட்சி ஆதிக்க சாதியினரும் அவர்களை வெளியேற்றி விட்டு நிலத்தை அபகரிக்கத் திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றனர். நகரின் மையப் பகுதியில் தலித்துகள் வாழ்வது தேசத் துரோகமா? வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை அரவாக்குறிச்சியில் நிறைவேற்ற வேண்டிய காவல் துறையும், 40 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருக்கும் தலித்துகளுக்கு பட்டா கொடுக்க வேண்டிய வருவாய் துறையும் மயிர்பிடுங்கும் வேலைக்குச் சென்று விட்டதா? தமிழக மனித உரிமைக் கழகம் சட்டரீதியாக நீதிமன்றத்தை அணுகுவதற்கு முன் அதிகாரிகள் தலித்துகளுக்கு பட்டா வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

### திமுக அரசே !

1955–60களில் தமிழகத்தில் ஆதிதிராவிட மக்களுக்காக அன்றைய காமராசர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்கங்களின் இன்றைய நிலை குறித்து வெள்ளை அறிக்கை கொடு!

### தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக, உரிமைகளுக்காக போராடும் தலித் அமைப்புத் தோழர்களே,

தமிழகத்தில் உள்ள ஒதுக்கப்பட்ட 42 சட்ட மன்ற தொகுதிகளில் 14 தொகுதிகள் அருந்ததியர் சமூக வேட்பாளர்களையே நிறுத்தக் கோரி போராட முன் வாருங்கள். கூட்டுறவு சங்கங்களிலும் மற்றும் உள்ளாட்சி நிர்வாகங்களிலும் கூட இதே அளவில் சமூக நீதிக்கு குரல் கொடுத்துப் போராடுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறியீடுகளின் (லேபில்) அரசியல் —ஓர் உரையாடல்

—சரத் டேனியல்.

**அவர்** ஒரு முன்னாள் முழுநேர ஊழியர் (எம்.எல். பார்ட்டியில்). **நான்** உறுப்பினராக உள்ள தமிழக மனித உரிமைக்கழகம் பற்றிய ஓர் உரையாடலை அவருடன் நிகழ்த்தும் வாய்ப்புக் கிடைத்தது. அதனை இங்கு என் நினைவிலிருந்து அப்படியே தருகிறேன்.

**அவர்:** கார்கில் பிரச்சனை பற்றி த.ம.உ.க. சார்பில் ஓர் நோட்டீஸ் போடலாமே?

**நான்:** அவசியம் போடவேண்டும். ஆனால் தேசவிரோத முத்திரைக்குத்தி தலைக்குமேல் தொங்கிக் கொண்டுள்ளது.

**அவர்:** ஆமாம்! அதுவும் உண்மைதான். மேலும் அவ்வாறு நோட்டீஸ் போடும்போது ஒரு விசயத்தை திருத்திக் கொண்டால் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

**நான்:** என்ன அது?

**அவர்:** வழக்கமாக த.ம.உ.க. நோட்டீஸ்களின் இடது மூலைகளில் அம்பேத்கர் படமும், சாதி ஒழிப்போம் சனநாயகம் படைப்போம் என்கிற வாசகமும் இருக்கும் அதில் அம்பேத்கர் படத்தை நீக்கிவிட்டு வெறும் வாசகத்தை மட்டும் போட்டால் நமது நோட்டீஸை எல்லோரும் (பி.சி—பிற்பட்ட சாதியினர்) படிப்பார்கள். அம்பேத்கர் படத்தைப் பார்த்துவிட்டு இது எஸ்.ஸி—களுக்கான நோட்டீஸ் என்று பலர் (பி.சி) ஒதுக்கி விடுகிறார்கள்.

கார்கில் பிரச்சனை பற்றி நாம் சரியாக ஓர் கருத்தை முன் வைக்கும்போது அது எல்லோரையும் சென்றடைய வேண்டும். அம்பேத்கர் படம் அவ்வாறு சென்றடைவதை தடுக்கிறது. மேலும் த.ம.உ.க.வை ஒரு சாதிக் கட்சியாக காட்டுகிறது.

**நான்:** 1. தோழரே முதலில் நாம், சாதிக்கட்சி என்பவை எவை என்பதைப்பற்றி தெளிவடைவது நல்லதென்று நினைக்கின்றேன். ஏனென்றால் சாதியக்கட்சி, இயக்கம் என்று அடையாளப்படுத்தியே நம் அமைப்புகளது கூட்டங்கள், போராட்டங்கள், பேரணிகளை அரசு தடை செய்கிறது. அரசின் இந்த பிரச்சாரத்திற்கு நாமும் பலியாகி விடக்கூடாது.

ஒரு மதவாதி என்று யாரைச் செல்வோம்? அது போல் நாத்திகன் என்று யாரைச் சொல்வோம்?

யாரொருவன் கடவுள் நம்பிக்கை உள்ளவனோ, ஒரு மதத்தின் நீடிப்பிற்கும் வளர்சசிக்கும் பாடுபடுகிறானோ அவனை மதவாதி என்போம். கடவுள், மத நம்பிக்கையற்ற, மத எதிர்ப்பாளனை நாம் மதவாதி என்பதில்லை. மாறாக நாத்திகன் என்போம். ஆனால் சாதி விசயத்தில் மட்டும் சாதிப்பாகுபாடு நிலைக்க வேண்டும் என்பவனையும், சாதி ஏற்றத்தாழ்வு நீடிக்கப் பாடுபடுபவனையும், சாதி ஒழியப் பாடுபடும் தலித் அமைப்பினரையும் ஒன்றுபடுத்தி இருவரையும் சாதியவாதிகளாக சமப்படுத்துவது எவ்வளவு பெரிய மோசடி. இந்த மோசடியான அரசியல் பிரச்சாரத்தை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**2, அம்பேத்கர் படம் போடுவதால் த.ம.உ.க. ஒரு சாதிக்கான அமைப்பு என்ற பார்வை நிலவுவதுபற்றி.** இது எத்தகைய பார்வை? இதுதானே சாதியப் பார்வை. இவர்களுக்கு அம்பேத்கர் மனிதனாகத் தெரியவில்லை. ஓர் சட்ட மேதையாகத் தெரியவில்லை. அரசியல் சட்டம் இயற்றிய அறிவாளியாகத் தெரியவில்லை. அவரது சாதியைக் கொண்டு ஒரு தாழ்த்தப்பட்டவன் என்பது மட்டுமே தெரிகிறது. இதுதானே இந்துத்துவ சனாதனப் பார்வை. மனிதனை மனிதனாகப் பார்க்காத—சாதி ஏற்றத்தாழ்வு பார்த்து ஒதுக்கும் தீண்டாமைப் பார்வை.

இங்கு மாற்றப்பட வேண்டியது இத்தகைய சாதியப் பார்வையா? இல்லை அம்பேத்கர் படமா? இத்தகைய சாதியப்பார்வை நிலவுவதைக் காரணமாகக் கொண்டு, எங்கள் சாதியை மறைத்துக் கொண்டு உயர்சாதியினர் மத்தியில் அங்கீகாரம் பெற முயற்சிப்பதா? எது சரி?

**அவர்:** இல்லை. இன்று ஒவ்வொரு சாதியிலும் வர்க்கங்கள் தோன்றி உள்ளது அல்லவா? பி.சி.—யினர் மத்தியிலும் உழைக்கும் வர்க்கம், கஷ்டப்படும் மக்கள் பிரிவினர் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமல்லவா? தமிழக மனித உரிமைக் கழகம் என்பது தமிழக மக்கள் அனைவருக்குமானதுதானே! இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ளும் உயர்வர்க்கப்பிரிவினர் தோன்றி இருக்கிறார்கள். அவர்கள் தானே கண்டதேவி கோயில் தேர்த்திருவிழா போன்றவற்றில் ரகளை செய்பவர்கள்.

**நான்:** தமிழக மனித உரிமைக் கழகம் தமிழக ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்குமானதுதான். அதுபோலவே தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கும் நாம் விரோதியில்லை. ஆனால் தமிழக மக்களின் மனித உரிமை என்பதை நாம் மையமாக வைத்து இயக்கம் நடத்தும்போது மனிதர்களை மனிதர்களாக மதிப்பதை அடிப்படையாகக் கொண்டே நாம் அணி திரட்டுவோம்.

மனிதர்களை மனிதர்களாக மதிக்கும் சனநாயகப் பண்பே இங்கு ஒன்றுபடுத்தும் புள்ளியாக இருக்கிறது. இந்த துவக்கப்புள்ளியில் இருந்து ஒன்றுபட்டுத்தான் தொழிலாளி வர்க்க ஒற்றுமை பற்றி நாம் சிந்திக்க முடியும்.

ஆனால் யதார்த்தம் என்னவாக இருக்கிறது? தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கு தடை உணர்வு எங்கிருக்கிறது? ஒரு தாழ்த்தப்பட்ட (எஸ்.ஸி) தொழிலாளி பிற பிற்படுத்தப்பட்ட (பி.சி.) தொழிலாளியுடன் ஒன்றுபட—இரண்டற கலக்க மறுக்கிறானா? இல்லை. ஆனால் ஒரு பி.சி. தொழிலாளியே அவ்வாறு மறுப்பவனாக இருக்கிறான். அவனிடம் உள்ள உயர்சாதி மனோபாவம் வர்க்க ஒற்றுமைக்குத் தடையாக இருந்து வருகிறது.

இந்த இடத்தில் (CECRI) சிக்ரியைச் சேர்ந்த தோழர் ஒருவரின் கூற்றை உதாரணத்திற்கு சுட்டிக்காட்டுவது பொருந்தும் என்று நினைக்கிறேன். சமீபத்தில் சிக்ரியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடைபெறும் பி.சி./எஸ்.ஸி. தொழிலாளர்களுக் கிடையிலான முரண்பாட்டிற்கு காரணத்தை அறியும் பொருட்டு அங்கு வேலை செய்யும் தோழர் ஒருவரிடம் (பி.சி பிரிவு) கேட்டபோது தொழிலாளர்களுக்கிடையில் சாதிப்பாகுபாடு எல்லாம் இல்லை. சும்மா இவர்கள் (எஸ்.ஸி) சாதிப் பிரச்சனையாக மாற்றப் பார்க்கிறார்கள்.நாங்கள் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம். என்ன ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட மாட்டோம். அவர்களுடன் உணவை பகிர்ந்து கொள்வதுமில்லை. தனியாகச் சாப்பிடுவார்கள். மற்றபடி எங்களிடையே சாதியப்பார்வை எதுவும் கிடையாது என்றார்.

இதுதான் இன்றைய எதார்த்தம். இங்குதான் ***டாக்டர். அம்பேத்கர்*** கேட்ட கேள்வி அர்த்தம் பெறுகிறது. **இழப்பதற்கு ஏதுமற்றவன் பாட்டாளி என்கிறீர்களே! இந்திய உயர்சாதி தொழிலாளியினர் இழப்பதற்கு சாதிப் பெருமை என்ற ஒன்றிருக்கிறதே...! அதுபற்றிஎன்ன சொல்லப் போகிறீர்கள்?** என்று கேட்டார். பி.சி.,எஸ்.ஸி., ஒற்றுமை, தொழிலாளி வர்க்க ஒற்றுமை, மக்கள் ஒற்றுமை என்பது பற்றி அரசு முதல் அறிவாளிகள், அரசியல் கட்சிகள் வரை பேசுகிறார்கள். ஆனால் இவர்கள் கூறும் ஒற்றுமை என்பது என்ன தெரியுமா? **உயர்சாதியினரின் சாதி மேலாண்மை. ஒடுக்குமுறை, சுரண்டல், தீண்டாமைச் செயல்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு இவைகள் எல்லாம் நமது தலைவிதி முற்பிறவிப் பயன், என்று தலித்துகள் அமைதியாகக் கண்ணீர்விடும் நிலையையே சமூக ஒற்றுமை என்று பிரச்சாரம் செய்கிறார்கள்.** அதாவது ஆடும் புலியும் ஒன்றாகத் தண்ணீர் அருந்துவது பற்றி கதையளக்கிறார்கள்.

இதனை ஒற்றுமை என்று சொல்ல முடியாது. இதற்கு தலித்துகள் அகராதியில் வேறு பெயர் இருக்கிறது. இதை **அடிமைத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.**

உண்மையான ஒற்றுமை என்பது வேறு. அதற்கு முதலில் தலித்துகளையும் மனிதர்களாக மதிக்கத் துவங்க வேண்டும். அம்பேத்கர் படம் போட்ட நோட்டீஸை ஒதுக்குவது என்பதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? தாழ்த்தப்பட்டவன் சொல்வதை காது கொடுத்துக்கேட்கமாட்டோம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு கருத்துச் சொல்ல அருகதை இல்லை. தாழ்த்தப்பட்டவன் அரசியல் பேசக்(கருத்துச் சுதந்திரம்) கூடாது என்பதையே இது காட்டுகிறது.

இத்தகைய மோசமான பிற்போக்குச் செயலை நாமும் அங்கீகரித்து அம்பேத்கர் படத்தை நீக்கி விடுவது எதைக் காட்டுகிறது தெரியுமா? இன்றைக்கு நகர்ப்புறத்தில் படித்த தாழ்த்தப்பட்டவர்கள் சிலர் அவமானத்திற்கஞ்சி தங்களது சாதியை மறைத்துக் கொண்டு வாழுகிறார்களே அதுபோல் இருக்கிறது. இத்தகைய செயல் எப்படி சமூக மாற்றத்திற்கு உதவும்? அதுசாதியக் கொடுமையை ஏற்றுக் கொண்டு எதிர்க்காமல் உட்பட்டுப் போவதைத்தானே செய்கிறது.

நான் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன் தான் எல்லோரையும் போல் நானும் மனிதன் தான் என்ற போராட்டமே மாற்றத்தைக் கொண்டுவரும். இந்தப் போராட்டத்தை அங்கீகரிப்பவர்களுக்கிடையிலான ஒற்றுமையே உண்மையான ஒற்றுமை. மாறாக உயர் சாதி மனோபாவம் கொண்டவர்களை அதாவது **சனநாயகப் பண்பற்ற வர்களை தமிழக மனித உரிமைக் கழகத்தில் திரட்டி நாம் என்ன செய்யப் போகிறோம்?**

**அவர்:** நீங்கள் ஏன் அம்பேத்கர் லேபிளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? இந்த நாட்டில் சாதி ஒழிப்பு பற்றிபெரியார் பேசியிருக்கிறார். காந்தி கூட தீண்டாமை ஒழிப்புப் பற்றி பேசியுள்ளர். அவர்கள் படங்களைப் போடலாமே?

**நான்:** (என்ன ஒரு கொடுமை பாருங்கள்) யார் இந்த நாட்டில் மனிதர்களாக மதிக்கப்படாதது மட்டு மல்லாமல் மிருகங்களை விடக் கேவலமாக நடத்தப்பட்டார்களோ அவர்கள் தங்களுக்காக தாங்களே போராடக் கூடாது. அதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும் தலைவர்கள் (உயர்சாதியினர்) மட்டுமே உங்களுக்காக பரிந்து பேசவேண்டும். இது தானே இந்துத்துவ சனாதன மனோபாவம்.

**இப்போதுதான் தலித் தலைமையின் முக்கியத்துவம் நமக்குப் புரிகிறது. கூடவே நிலவும் இந்திய சனநாயகத்தின் உண்மை சொரூபமும் புரிகிறது.** அம்பேத்கர் வாழ்ந்த காலத்தில் காந்தி அம்பேத்கரது அரசியல் செயல்பாட்டை கடுமையாக எதிர்த்தும் தலித்துகளது மத்தியில் அம்பேத்கர் ஓர் தலைவராக உயர்வதை பொறுக்காமல் செயல்பட்டதையும் நாம் நினைவுபடுத்தி பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் இன்று நிலவுகிற பல்வேறு அரசியல் கட்சிகளில் தலைமைப் பொறுப்பிற்கு வரமுடியாத சூழலையும் காண்கிறோம் தலித்துகள் பிற கட்சிகளில் அடிமைகளாக மட்டுமே நடத்தப் படுவதையும் பார்க்கிறோம்.

**இருவரும் இணைந்துள்ள கட்சியில் சனநாயகம் இல்லை. சமூகத்தை போன்றே கட்சியிலும் சாதி ஆதிக்கமும் சாதி மனோபாவமும் தீண்டாமையும் நிலவுகிறது.** போகட்டும்.

தலித்துகள் தங்களுக்கான ஓர் கட்சியை, இயக்கத்தை தங்களது தலைமையில் கட்டிச் செயல்படுவது கூட பொறுக்க முடியாமல் தலித் அமைப்புக்களை வன்முறை அமைப்புகள், கலவர அமைப்புகள் என்று பிரச்சாரம் செய்யப்படுவதையும், தடை செய்யக் கோருவதையும் நாம் காண்கிறோம். அது மட்டுமல்லாமல் தலித்துகள் அடிமைகளாக ஆண்டாண்டு காலமும் தங்களுக்குக் கீழேயே இருக்க வேண்டும் என்ற நோக்கில், தலித் நலனுக்காக தாங்கள் பாடுபடுவதாகப் பிரச்சாரம் செய்து தங்களது கட்சிக்குள்ளேயே எஸ்.சி. பிரிவு துவங்குவதையும் நாம் காண்கிறோம்.

மற்றொரு சம்பவத்தையும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருந்தும். தலித்துக்களது விடுதலைக்காக பிறப்பெடுத்தவர்களாக தங்களை காட்டிக் கொண்ட புதிய தமிழகம் கிருஷ்ணசாமியும். விடுதலைச் சிறுத்தைகள் திருமாவளவனும் த.மா. காங்கிரஸ் மூப்பனாருடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டது நாம் அறிந்ததே. அந்தக் கூட்டு வெறும் தேர்தல் கூட்டே. அது ஒன்றும் சாதி ஒழிப்புக் கூட்டோ. சனநாயகக் கூட்டோ அல்ல. தி.மு.க. காங்கிரஸ் கட்சிகளால் கைவிடப் பட்ட மூப்பனார் (த.மா.க.) தாங்கள் மேலேறிச் செல்லும் ஏணியாக தலித்துக்களைப் பயன்படுத்தும் கூட்டணியே, ஆனால் இதைக் கூட அங்கீகரிக்க முடியாத த.மா.கா.வின் பகுதித் தலைமைகள் **நாங்கள் பள்ளு, பறைகளுடன் சேர்ந்து**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**வேலை செய்வதா? ஒரே காரில் பயணம் செய்வதா?** என்று தேர்தல் வேலைகள் செய்யாமல் ஒதுங்கி நின்றதையும் பார்த்து விட்டோம்.

சற்றுயோசியுங்கள். புதிய தமிழகம் அல்லது விடுதலைச் சிறுத்தைகள் நிறுத்தப் பட்டுள்ள தொகுதிகளில் அல்ல நான் சொல்லும் நிலை. த.மா.கா. பி.சி. வேட்பாளர் நிறுத்தப் பட்டுள்ள தொகுதிகளிலேயே இந்த நிலை. இவை எல்லாம் எதைக் காட்டுகிறது? தலித்துகள் அரசியல் பேசுவதை, அமைப்பாக திரள்வதை, தலைமை தாங்குவதை சகிக்க முடியாத ஆதிக்க உணர்வைத் தானே?

**ஆனால் தலித்துக்களுக்காக உயர் சாதியினர் சேவை செய்ய வருவதை, பரிந்து பேசுவதை இந்த ஆதிக்க மனோநிலை இவ்வளவு கடுமயாகப் பார்ப்பதில்லை.அதனை பெரிய மனம் படைத்த மகாத்மாக்களின் தியாக உள்ளம் என்று பாராட்டுகிறது.** இந்திய மரபு வழிப்பட்ட அரசியலின் உயிர் நாடியே இத்தகைய சேவை மனப்பான்மை தான். இதன் கொடூரமான மறுபக்கம் மக்கள் தலைமைக்கு உயர்வதை, மறுத்து ஆதிக்க சாதி தலைமையை நிறுவுவது.

ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்கள் அரசியல் தேர்ச்சி பெற்று விடாமல் தடுத்து நிறுத்தி அவர்களது சார்பாக நல்லவர்களான தாங்கள் ஆட்சிசெய்வதாக கூறும் தர்மகர்த்தா அரசியல். ***மக்களால் மக்களுக்காக மக்களே-*** என்ற போர்வையில் நடைபெறுகிறது.

**தோழரே, நோட்டீஸ்களில் டாக்டர். அம்பேத்கர் படம் போடப்படுவதை வெறும் லேபிள் விவகாரம் என்று குறிப்பிட்டுவிட்டீர்கள். இல்லை! அது தலித் தலைமை என்ற இன்றைய அவசியமான அரசியலின் ஓர் குறியீடு ஆகும். அந்த லேபிலின் உள்ளே இந்திய அரசியலின் அடித்தளத்தையே கேள்விக்குள்ளாக்கும் எதிர்ப்பு ஒளிந்து கிடக்கிறது.**

அடுத்து கண்டதேவியில் தலித்துகள் ரகளை செய்வதாக, கலவரத்தில் ஈடுபடுவதாகச் சொல்கிறீர்கள். **நடைமுறையில் இருக்கும் வழக்கத்தை அது எவ்வளவு கொடூரமாக இருந்தாலும் அதனை எதிர்க்க முடியாத பலவீனத்தில் மக்கள் இருந்து-அதற்குட்பட்டு வாழ்வதை அரசும் ஆளும் வர்க்கமும் சமூக நல்லிணக்கம் என்கிறது. ஆளுவோரின் கருத்தியலால் கட்டமைக்கப்பட்ட மனோ நிலையானது சமூக வழக்கத்தை மீறும் நடவடிக்கைகளைக் கண்டு அதிர்வுற்று கலவரம் அடைகிறது. ஒப்பீட்டு ரீதியாக இந்தக் [illegible] (பயம்) உணர்வு பொருளாதார ஈட்டல், வாழ்க்கை வசதிகளில் திருப்தியுறும் நடுத்தர-மேல் வர்க்கத் தட்டுக்களுக்கே ஏற்படுகிறது.**

**இன்னொருபுறம் உயர்சாதியினரில் உள்ள அடித்தட்டு பிரிவினரிடம் தங்களது வாழ்வின் நெருக்கடிகளுக்கான காரணமானவர்களாக மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தாழ்த்தப்பட்டவர்கள் காட்டப்பட்டு மோதல் தூண்டப்படுகிறது.**

அடிப்படையில் ஆண்டாண்டு காலமாக வழமையாக இருந்துவரும் முறைகள் சரியானவை என்று ஆளுவோரால் ஊட்டி வளர்க்கப்பட்டு வந்துள்ள கருத்தியலின் ஆளுமையின் கீழிருந்து நீங்களும் தலித்துகள் ரகளை செய்வதாக, கலவரம் செய்வதாக வன்முறையில் ஈடுபடுவதாக சொல்கிறீர்கள். தலித்துகளது இந்த நடவடிக்கைகளுக்கு அவர்கள் அடைந்து வரும் பொருளாதார வளர்ச்சிதான் காரணமென்றும் கூறுகிறீர்கள்.

இல்லை. தலித்துகள் தமது வாழ்நிலையில் அடைந்துள்ள மாறுதல்கள் அனைத்தும் ஆளும் வர்க்கம் தன் நலநோக்கிலிருந்து மேற்கொண்ட புணரமைப்புக்களின் விளைவுகளாகும்.

ஆனால் **தலித்துகளது எழுச்சிக்கு அடிப்படைக் காரணமாக அமைவது சமூகத்தில் நிலவுகின்ற சனநாயகமற்ற ஒடுக்குமுறையே ஆகும். இந்த ஒடுக்குமுறை இல்லாது ஒழிக்க வேண்டும் என்று கூறுவதற்குப் பதிலாக இந்த ஒடுக்குமுறையை தலித்துகளுக்கு உணர்த்தும் காரணிகளான மாறுதல்களை காரணங்காட்டி இதுபோன்ற மாறுதல்கள் அற்ற பழைய கால அப்பட்டமான பண்ணை முறை இருந்தால் தலித்துகள் அடங்கிக் கிடப்பார்கள் என்று கூறுவதும் சனநாயக விரோதப் பண்ணையார் பார்வைதான்.**

இந்திய திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சிகள் முன் வைக்கும் வர்க்க ஒற்றுமை – சோசலிசப் புரட்சி என்ற கருத்துடன் இந்தப் பார்வை ஒத்துப்போய் விடுகிறது. நடைமுறையில் சனநாயகத்திற்கான போராட்டத்தை மறுத்து வர்க்க ஒற்றுமை பேசி ஒருநாள் எல்லாம் மறைந்து சோசலிசம் வந்துவிடும் என்ற கற்பனாவாதத்தில் இருந்தே, அதாவது வர்க்க சமரச சித்தாந்தத்தில் இருந்தே இக்கருத்து கட்டமைக்கப்படுகிறது.

இறுதியாக நமது கருத்துக்களைப் பரிசீலிப்பதாகச் சொல்லி அவர் விடை பெற்றார்.

**பின் குறிப்பு:**

இந்த உரையாடலில் **நான்** – இல் நிறைய புதிய விளக்கங்களையும், உதாரணங்களையும் சேர்த்துள்ளேன். அது போலவே அன்று பேசியவை சில விடுபட்டும் போயுள்ளது. ஆனால் **அவர்** முன்வைத்த வாதம், கேள்விகள் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த உரையாடலை உங்கள் முன் வைத்துள்ளதற்குக் காரணம் இன்றைக்குப் பலரும் தலித் அமைப்புக்கள்பற்றி, செயல்பாடுகள்பற்றி, அதிருப்திப் படுவதில் உள்ளார்ந்து இயங்கும் ஊட்டி வளர்க்கப்பட்டு வந்துள்ள இந்துத்துவ சனாதன [illegible] கற்பிதத்தின் செல்வாக்கை கேள்விக்குள்ளாக்கவே.

## *கருணாநிதியின் சமூக நீதி!*

தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்களே மதுரை லீலாவதி கொலைக்கு காரணமான தி.மு.க. பொறுப்பாளர்கள் மீதும்–தேவக்கோட்டை தி.மு.க. இளைஞரணி ரூசோ கொலைக்கு காரணமான தி.மு.க. பொறுப்பாளர்கள் மீதும் கட்சி விட்டு நீக்கி நடவடிக்கை எடுத்த தாங்கள் வேதாரண்யம் அருகில்லுள்ள தலித் சாந்தியின் கையை துண்டித்த தி.மு.க.வை சார்ந்த தேவர் சாதி வெறியனும் வேதாரண்யம் பேரூராட்சியின் துணைத் தலைவனுமான சுப்பையனை கட்சியை விட்டு நீக்காதது ஏன்? உடையார் சாதி ரூசோவுக்கும், சௌராட்டிரா லீலாவதிக்கும் ஒரு நீதி தலித் சாந்திக்கு ஒரு நீதியா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மக்கள் சிவில் உரிமைக் கழக அறிக்கை

## கோவை மாவட்டம் பல்லடம் வட்டாரம் செகடந்தாலி கிராமத்தில்

# தலித் முருகேசன் படுகொலை

செகடந்தாலி கிராமத்தில் ஆதிக்கச் சாதியினரான கவுண்டர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றனர். அருந்ததியர் பிரிவைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட தலித் குடும்பங்களும் வசித்து வருகின்றனர். இந்த ஊரைச் சுற்றியுள்ள நிலங்கள், இயற்கை வளங்கள் அனைத்தும் கவுண்டர்களுக்கு சொந்தமானவை. தலித்துகள் அனைவரும் நிலமற்ற கூலிகள், பண்ணை அடிமைகள் பொதுவாகவே கோவை ஈரோடு மாவட்டத்தின் கிராமப் பகுதிகளில் நிகழும் எல்லா விதமான தீண்டாமைக் கொடுமைகளும், அடக்குமுறைகளும் இந்த ஊரில் காலங்காலமாக இருந்து வருகிறது. ஆதிக்க சாதியினருக்கு முன்னால் தலித் மக்கள் உட்காரக் கூடாது, புகை பிடிக்கக் கூடாது, சைக்கிள்களில் செல்லக் கூடாது, சத்தம் போட்டு பேசக்கூடாது, கவுண்டர்களை சாமி என்றுதான் அழைக்க வேண்டும் என்ற அடக்குமுறைக் கட்டுப்பாடுகள் இந்த ஊரில் கூடுதலாகவே இருந்து வருகிறது.

தற்போது கொல்லப்பட்ட முருகேசன் என்பவர்தான் இந்த ஊரில் சாதிய அடக்குமுறைகளை முதன்முதலில் தட்டிக் கேட்க முயற்சி செய்தவர். ஆண்டாண்டு காலமாக அடிமைகளாக வாழ்ந்த இந்த ஊரிலிருந்து முதன் முதலில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்த நபர்தான் இந்த முருகேசன். பண்ணையார்களின் விவசாய நிலங்களில் என்னால் கொத்த டிமையாக வேலை செய்ய முடியாது என்று சொல்லிவிட்டு அருகாமையில் உள்ள சோமனூர் என்ற நகரத்திற்குச் சென்று கிளாஸ்' தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு 1998 அக்டோபர் மாதத்தில் ஒரு நாள் வேலைக்குச் சென்றுவிட்டு சோமனூரில் இருந்து திருப்பூர் வரும் பஸ்ஸில் பயணம் செய்து வந்துள்ளார். அதே பஸ்ஸில் அவரது ஊரைச் சேர்ந்த மிராசுதாரர் மாரப்பக்கவுண்டர் என்பவரும் பயணம் செய்துள்ளார். அதில் மாரப்பக்கவுண்டர்



அமரும் சீட்டில் காலியாக இடம் இருந்ததால் அந்த சீட்டில் முருகேசன் அமரச் சென்றபோது சாதியத் தீண்டாமைக் கொடுமையினால் மாரப்பக்கவுண்டர் அமரவிடாமல் தடுத்ததுடன் முருகேசனின் சாதியின் பெயரைச் சொல்லி இழிவுபடுத்தியுள்ளார். ஆண்டாண்டு காலமாக அடிமைகளாக இருக்கும் சாதியிலிருந்து ஒருவன் தனக்கு நிகராக உட்கார வந்ததை பொறுத்துக்கொள்ள முடியாத மாரப்பக்கவுண்டர் ஊரில் சென்று அவரின் உறவினர்களிடம் கூறியுள்ளார். அவருடன் சேர்ந்து எட்டு ஆதிக்கச் சாதியினர் இரவில் ஒதுக்குப்புறமாக உள்ள சேரிக்குள் புகுந்து முருகேசனின் வீட்டுக்கதவை உடைத்து உள்ளே சென்று முருகேசனை வெளியில் தூக்கி வந்து தடிகளாலும், இரும்புக் கம்பிகளாலும் பலமாகத் தாக்கியுள்ளனர். மேலும் **கர்ப்பிணியாக இருந்த அவரது மனைவியின் வயிற்றில் எட்டி உதைத்துத் தாக்கியுள்ளனர்.** இதைத் தொடர்ந்து சாதியக் கட்டுப்பாடுகளை மீறி அந்த ஊரிலேயே முதன் முதலில் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் செய்தார். காவல்துறை ஆதிக்கச் சாதியினர் மீது நடவடிக்கை எடுக்காமல் மெத்தனம் காட்டியது. பலத்த காயங்களுடன் முருகேசன் மற்றும் அவருடைய மனைவி இருவரும் திருப்பூர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்தனர்.

தாக்கிய ஆதிக்கச் சாதியினர் எட்டு பேர்மீது தக்க நடவடிக்கை எடுக்காத காவல்துறையை கண்டித்து சுற்று வட்டாரத்தில் உள்ள அருந்ததியர் சமூக மக்கள் 26.10.98 அன்று 61 பெண்கள் உட்பட 300-க்கும் மேற்பட்டவர்கள் கருமத்தம்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் (என்.எச்.47) சாலை மறியல் செய்தனர். இதன் விளைவாக அரசு சாலைமறியலில் ஈடுபட்ட தலித் மக்கள் அனைவர்மீதும் வழக்குப்பதிவு செய்து கோவை மத்திய சிறைச்சாலையில் அடைத்து வைத்தது. ஒரு வாரம் கழித்து அனைவரும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். தலித் மக்களின் பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு காவல்துறை முருகேசனையும், அவரது மனைவியையும் தாக்கிய ஆதிக்கச் சாதியினர் எட்டுபேர் மீதும் எஸ்சி.எஸ்டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்தது. ஆனால் நிலச்சுவான்தாரர்களின் பணபலத்தினால் காவல்துறை **SC/ST Act** 1989 3(1) (x) வழக்கை இடையில் மாற்றி மாவட்ட சிறப்பு நீதி மன்றத்திலிருந்து உள்ளூர் மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டது. இவ்வழக்கு தற்பொழுது விசாரணையில் உள்ளது.

இவ்வழக்கை வாபஸ் வாங்குமாறு மிராசுதாரர் மாரப்பன் அவருடைய மகன் சௌந்திரராஜன், சின்னசாமி, சிகாமணி போன்றோர் அடிக்கடி முருகேசனை மிரட்டி வந்துள்ளனர். மேற்கண்ட மூவரும் அடிக்கடிவந்து கொலைசெய்துவிடுவோம் என்று மிரட்டுவதாக முருகேசன் கருமத்தம்பட்டி காவல்நிலையத்தில் புகார் செய்தும் காவல்துறை புகாரை ஏற்க மறுத்து விட்டது. வழக்கை வாபஸ் பெற மறுத்ததால் தலித் மக்கள் மீது ஆதிக்கச் சாதியினரால் அளவுக்கு அதிகமாக சாதியக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. காவல்துறையும் அரசும் ஆதிக்கச் சாதியினருக்கே ஆதரவாக இருந்து வந்தது.

இந்நிலையில் 16.11.99 அன்று இரவு 7.30 மணியளவில் முருகேசன் சோமனூரில் வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு அவரது உறவினர் ஒருவருடன் திரும்பியுள்ளார். செகடந்தாலி பஸ் ஸ்டாப்பில் அவர் பஸ்ஸைவிட்டு இறங்கியதும் ஈஸ்வரன், சிகாமணி, மாரப்பன் ஆகிய மூன்று சாதி வெறியர்களும் திட்டமிட்டு வழிமறித்து முருகேசனை தூக்கிச்சென்று கல்லாலும், கம்பாலும் மிகக் கொடூரமாகத் தாக்கியுள்ளனர். ரத்த வெள்ளத்தில் சுருண்டு கிடந்த முருகேசனை அவர் மனைவி மற்றும் அவருடைய உறவினர்கள் சிலர் மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்ல முற்பட்டபோது **சாந்தா சைசிங்** உரிமையாளர் சௌந்திரராசன் மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவருடைய தம்பி சின்னசாமி, கந்தசாமிக் கவுண்டர், உடையந்தோட்டம் சுப்பராவுக்கவுண்டர், பழனிசாமிக் கவுண்டர் ஆகியோரின் தூண்டுதலில் ஆதிக்கச் சாதியினர் அனைத்து வழிகளையும் அடைத்து நின்றுள்ளனர். அவர்களிடமிருந்து தப்பித்து முருகேசனின் உறவினர்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த முருகேசனை இரவு 1.30 மணிக்கு திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பலன் அளிக்காமல் நள்ளிரவில் முருகேசன் பரிதாபமாக இறந்தார்.

கடந்த ஆண்டு 1998, அக்டோபர் மாதத்தில் முருகேசன் மற்றும் அவருடைய மனைவி தாக்கப்பட்டதற்கு முருகேசன் கொடுத்த புகாருக்கும், தற்பொழுது முருகேசன் கொல்லப்பட்ட புகாருக்கும் காவல்துறை தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. சாதியக் கொடுமையினால் தாழ்த்தபட்டவர் கொல்லப்பட்டால் குற்றவாளிகள் மீது SC/ST வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி (1989 - Act) கொலைக்கான பிரிவுகளில் வழக்குப் பதிவுசெய்யாமல் உண்மைக்குப் புறம்பாக, நிலச்சுவான்தாரர்களின் பணபலத்தால் காவல்துறை பிரிவு 3 (1) (x) இல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு SC/ST வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989–ன்படி கொல்லப்பட்டவரின் குடும்பத்திற்கு ரூ. 2 லட்சம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். 75 சதவீதம் சவப் பரிசோதனை முடிந்த பின்பும், 25 சதவீதம் குற்றம் நிரூபிக்கப்பட்டதும் கொடுக்க வேண்டும். ஆனால் அரசு இதுவரை சட்டப்படி கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடு இதுவரை கொல்லப்பட்டவரின் குடும்பத்திற்கு தரப்படவில்லை. மேலும் இக்கொலையைச் செய்யத் தூண்டிய சோமனூர் சாந்தா சைசிங் உரிமையாளர் சின்னச்சாமி, சௌந்தரராஜன், சிகாமணி, பழனிச்சாமி கவுண்டர், சுப்பராவுக் கவுண்டர் ஆகியோர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அரசியல் பலம், பணபலம் படைத்தவர்களுக்கு ஆதரவாக அரசும், காவல்துறையும் செயல்படுகிறது.

மேலும் 1998 அக்டோபர் மாதத்தில் தற்பொழுது கொல்லப்பட்ட முருகேசன் கொடுத்த புகாரின்படி பதிவு செய்யப்பட்ட SC/ST Act-1989 வழக்கை சட்டத்திற்கு புறம்பாக அவிநாசி காவல்துறை D.S.P. ரங்கராஜன் என்பவர் இவ்வழக்கை சிறப்பு நீதிமன்றத்திலிருந்து (உள்ளூர்) மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு மாற்றியுள்ளார். இப்படி மாற்றுவது சட்டப்படி குற்றமாகும். எனவே, சட்டத்தை மதிக்காமல் சுயநலத்திற்காக சட்டத்தை மீறிய D.S.P. ரங்கராஜன் மீது அரசு தக்க நடவடிக்கையெடுக்க வேண்டும். மேலும் அரசியல் ஆதாயங்களுக்காக தமிழக அரசு ஆதிக்கச் சாதியினருக்கு மறைமுகமாக ஆதரவளிப்பதை தவிர்க்க வேண்டும். குடி உரிமைகளை மதிக்க வேண்டும்.

ஆகவே இக்கொலையைச் செய்யத் தூண்டியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு சட்டப்படியான நிவாரணத்தை வழங்குமாறும், இக்கொலைச் சம்பவத்தை R.D.O. விசாரணைக்கு உட்படுத்த ஆணையிடுமாறும், சமூகத்தில் ஒரங்கட்டப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை வன்கொடுமைகளிலிருந்து பாதுகாப்பு அளிக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

**இணைச் செயலாளர்.**

**மக்கள் சிவில் உரிமைக் கழகம்**

## கலைக்கு எது ஜீவாதாரம்?

இலக்கியத்திற்கும், கலைக்கும் மூலப் பொருள்களின் சுரங்கம்போல் உதவுவது மக்களின் வாழ்க்கையாகும். அந்த மூலப் பொருள்கள், இயற்கை ரூபத்தில், பட்டைக்போடாத நிலையில் இருக்கின்றன. ஆனால், அவை ஜீவன் இருக்கிறது. அவை ஜீவாதார மாணிக்கம் போன்றவைகளாகும். பொய்யும் புனை சுருட்டும் நிறைந்த இலக்கியத்தையும், கலையையும் அவை சந்தி சிரிக்க வைத்துவிடும். ஜீவ கலை ததும்பும் இலக்கியத்திற்கும், கலைக்கும் அள்ள அள்ளக் குறையாத விஷயக் குவியலைக் கொண்டுள்ள பொக்கிஷமாக விளங்குவது மக்களின் வாழ்க்கை ஒன்றுதான். அதுதான் பொக்கிஷமேயன்றி, வேறு மூலப்பொருள் உள்ள சுரங்கம் எதுவும் இருக்க முடியாது.

*- மாசேதுங்*

கலையும் இலக்கியமும்

## தமிழக அரசின் 144 துறைகளின் மொத்த பணியாளர்களும் தலித்துகளின் பங்கும்

| பிரிவு | மொத்தம் | தலித் பங்கு 18% | இருப்பவர் | குறைவு–/+ | இருப்பவர் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|
| எ | 5,019 | 903 | 374 | 529(–) | 7.45% |
| பி | 1,10,148 | 19,827 | 13,657 | 6,170(–) | 12.4% |
| சி | 1,20,235 | 21,642 | 17,645 | 3,997(–) | 14.68% |
| டி | 4,36,440 | 78,559 | 87,420 | 8,861(+) | 20% |
| | | | | | சராசரி 13,63% |

நன்றி தலித் தகவல் ஒருங்கிணைப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏழைகளின் விலா எலும்பை முறிக்கும் பாரதிய சனதா அரசின் பட்ஜெட்

## தமிழக மனித உரிமைக்கழகம் கண்டனம்

அரங்க. குணசேகரன் எம்.ஏ.,

சுதேசிப் பொருளாதாரம் பற்றி தாங்கள் எதிர் கட்சியாக இருந்த நேரத்தில் ஆரவாரமாய்ப் பேசிய பாரதிய சனதா கட்சியினர் தாங்கள் ஆட்சிக்கு வந்ததும், காங்கிரசின் திட்டங்களையே நடைமுறைப்படுத்தும் இன்னுமொரு காங்கிரசு ஆட்சியாகவே பொருளாதாரக் கொள்கையில் அதன் செயல்பாடுகள் எவ்வித மாற்றமும் இன்றி நடை போடுவதையே காட்டுகிறது.

உலக மயமாதல் கொள்கையின் உச்சபட்ச ஏஜெண்டாக மாறிவிட்ட பாரதிய சனதா அரசு, நீதித் துறையில் வழக்கறிஞர்கள் தொழிலில் கூட அன்னிய நாட்டு வழக்கறிஞர்கள் நமது கோர்ட்டுகளில் வாதாடும் வகையில் சிவில் சட்டத்தில் திருத்தம் செய்ததன் மூலம், இவர்களின் வெற்றுச் சவடால் அம்பலப்பட்டு விட்டது.

அண்மையில் 29–02–2000ல் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டின் வரிவிதிப்பு முறை, மேல் நடுத்தர வர்க்கத்தினருக்கும், சமுதாயத்தின் மேல் தட்டினருக்கும் பயன்படுமாறு உள்ளது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பவர்களின் கூட்டாளிகள் போட்டுள்ள பட்ஜெட் ஏழைகளுக்கு சிரிப்பை வரவழைக்காது. இரத்தக் கண்ணீரைத் தான் சிந்த வைக்கும்.

ரேசன் அரிசியை ரூ. 3.50லிருந்து 5.89க்கு விலையை உயர்த்தி இருப்பது வெறும் விலையேற்றம் மட்டுமல்ல. எதிர்காலத்தில் ரேசன் அரிசி விலையையும், வெளிச்சந்தை அரிசி விலையையும் சமப்படுத்தி ரேசனில் அரிசி வழங்கும் திட்டத்துக்கே மூடுவிழா செய்யும் உள்நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ள சதியாகும்.

அதைப்போலவே யூரியா விலை உயர்வும், மண்ணெண்ணெய் விலை உயர்வும், ஏழை–நடுத்தர விவசாயிகளை பெரிதும் பாதிக்கும்.

கிராமப்புற மேம்பாட்டிற்கு என ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 5000 கோடியில் ரூ. 2,500 கோடி ரூபாய் கிராமப்புற சாலை வசதிக்கு என்பது, கிராமப்புற ஏழைகளின் நலன் கருதி ஒதுக்கப்பட்ட தொகையல்ல. கிராமப்புறப் பணக்காரர்கள், நடுத்தர வர்க்கத்தினரை உலக சந்தை பொருளாதாரத்தோடு இணைக்கும் உத்திக்கானதே!

மத்திய அரசின் வரி குறைக்கப்பட்ட பொருட்களின் பட்டியலே இதை உணர்த்தும். செல்லுலார் போன்களுக்கான வரி 25 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகவும், செல்லுலார் போன்களுக்கு பயன்படுத்தப்படும் பேட்டரி மீதான வரி 40 சதவீதத்திலிருந்து 5சதவீதமாகவும், கண்ணாடி இழைகளுக்கான வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகவும், கம்ப்யூட்டர் சாதனங்களின் மீதான வரி 50 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், திரைப்பட சாதனங்களின் மீதான வரி 40 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும் குறைத்திருப்பதன் மூலம் இந்த பட்ஜெட் ஏழைகளுக்கு கார்த்திகைக் கிழங்கையும், வசதியானவர்களுக்கு வள்ளிக் கிழங்கையும் வாரிவழங்கி தன் முகமூடியை கழற்றிக் கொண்டுள்ளது.

விளையாட்டுத்துறைக்கு கம்பெனிகள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 100சதவீதம் வரிவிலக்கு அளித்திருப்பதன் மூலம் விளையாட்டுகளுக்காக நன்கொடை என்ற பெயரில் அரசியல் கட்சிகள் மறைமுகமாக கருப்புப் பணத்தை பெருமளவு நன்கொடையாகப் பெறவே இவ்வரி விலக்கு பயன்படும்.

வங்கிகள் மூடப்படமாட்டாது என்ற செய்தி ஆறுதல் அளித்தாலும் தனியார் மயமாகாது என்ற உறுதியை அளிக்கவில்லை, அரசுத் துறை வேலைவாய்ப்புக்கு முற்றாக கதவு மூடப்பட்டுள்ள நிலையில் நூறுகோடி மக்களை கொண்ட நாட்டின் சிறு தொழில் வளர்ச்சிக்கு வெறும் நூறு கோடி ரூபாயை வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது படித்த இளைஞர்களின் எதிர்காலத்தை சூனியமாக்கும் மோசடியாகும்.

பத்து ரூபாய் பிரிமியத்தில் கொண்டு வரப்பட்டுள்ள ஏழைகளின் நலனுக்கான இன்சூரன்ஸ் பாதுகாப்புத் திட்டம் 15 ஆண்டுகளுக்கு, முன்பு–மறைந்த முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டத்தின் நகல்தான். இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதில் உள்ள பயனை விட, ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான ஏழைகளின் மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய் நிதி திரட்டும் பொருளாதாரச் சூழ்ச்சியே பிரதானமாகத் தெரிகிறது. ஏழைகள் மீது அரசுக்கு அக்கறையிருந்தால் 55 வயது முதிர்வடைந்து இறக்கும் ஒவ்வொரு விவசாயத் தொழிலாளியின் குடும்பத்திற்கும் ரூபாய் ஒரு லட்சம் குடும்ப காப்பு நிதியாகவும் 55 வயதுக்குட்பட்ட ஏழைக் கூலிகளுக்கு வேலையில்லாத காலங்களுக்கு குறைந்த பட்ச மாதாந்திர ஊதியமும் வழங்கலாம். மொத்தத்தில் மத்திய அரசு தாக்கல் செய்திருப்பது வரவு செலவு அறிக்கை அல்ல. வரவு மிக்க வசதியானவர்களை குளிர்விக்கும் அறிக்கையாகும்.

மத்திய அரசின் பட்ஜெட்டில் ஒவ்வொரு ஒரு ரூபாயிலும் 28 பைசா அன்னியக்கடன் இந்த 28 பைசாவில் 26 பைசா அன்னியக்கடனுக்கான வட்டியாகும். கிராமப்புறங்களில், நகரின் சேரிப் புறங்களில் மக்கள் நாள் வட்டி, வார வட்டி, மாத வட்டி என்று இன்று வட்டிக்கு கடன் வாங்குகின்றனர். இந்த கொடிய வட்டி கூட ரூபாய்க்கு 5 காசு, 10 காசு வரை தான் என்று இருந்தபோதிலும் ஒவ்வொரு வாரமும், மாதத்தின் முதல் நாளிலும் கடன் காரன் வாசலில் காவல் நிற்பான்.

சிறு விவசாயிகள், சிறு தொழில் புரிவோரின் சொத்துக்கள் எல்லாம் கடன் கொடுத்தவனிடம் எந்த நேரத்திலும் எடுத்துக்கொள்ளும் வகையில் அவனிடம் கடன் பட்டவர்கள் ஸ்டாம்பு ஒட்டிய வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டிருப்பர். 5சதவீம் 10 சதவீதம் வட்டி விகிதத்தில் கடன் வாங்கியவனின் நிலையே இது என்றால் 28பைசா கடன் வாங்கி 26பைசா வட்டி கட்டும் நமது நாடு சுதந்திரம் ஆனதாகவாயிருக்கும்.! நமது பொருளாதார திட்டமிடலை தீர்மானிக்கும் உரிமையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நம் தலைவர்கள் தீர்மானிப்பார்களா? நமக்கு கடன் கொடுத்தவர்கள் தீர்மானிப்பார்களா? கடன் கொடுக்கும் போதே திருப்பிக் கட்டும் திறனுக்கான நிபந்தனைகளை பொறுத்தே உலக வங்கியும், ஐ.எம்.எப்பும் கடன் கொடுக்கிறார்கள். **அன்னிய அரசுகளும், முதலாளிகளும் கடனுக்கான நிபந்தனைகளை மேலும் கூடுதல் ஆக்கும் போது நமது சுதந்திரம் அவர்களின் கருவூலத்தில் அடமானமாக இருப்பதை உணர்ந்து பாருங்கள்.!** இப்படி பல லட்சம் கோடி கடனுக்காக நம் ஆட்சியாளர்களும், பொருளாதார அதி மேதாவிகளும், அரசியல் கட்சித் தலைவர்களும் அன்னிய, பன்னாட்டு முதலாளிகளுக்கு பச்சைக் கம்பளம் விரித்து பிரிட்டனின் பழைய கிழக்கிந்திய கம்பெனிக்கு பதிலாக பல அமேரிக்க, ஐரோப்பிய நாட்டு கம்பெனிகளை நம்மையும் நமது மண்ணையும். சுரண்டி சூறையாட அனுமதித்துள்ளனர்.

***ஆம்! அரிசி விலையையும் மண்ணெண்ணை விலையையும் ஏற்றி செல்லுலார் போனுக்கும் கம்ப்யூட்டருக்கும் விலையைக் குறைக்கும் இந்த முரண் பாட்டிற்கு என்ன காரணம் இதை எப்படி தவிர்ப்பது?***

எல்லோரும் சொல்கிறார்கள் உலக மயமாதல் இன்று காலத்தின் கட்டாயம்! அது உண்மையா? இல்லை! ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்கத்தின் கீழ் உலகம் கட்டுண்டு கிடக்கிறது. இதனை மாற்ற முடியும்! மாற்ற முடியாதது எதுவுமே இல்லை! நாம் செய்ய வேண்டியதெல்லாம் மிகச்சில தியாகங்களே!

மாறி மாறி காங்கிரசு, பிஜேபி, திமுக, அதிமுக, என்று மத்தியிலும், மாநிலத்திலும் யார் ஆட்சிக்கு வந்தாலும் நிலைமை மாறவில்லை. அதேவகையான பட்ஜெட்டுகள்–திட்டங்கள்–ஊழல்கள் தான் தலைவிரித்தாடுகின்றன. மக்களின் பெரும் பாலானவர்கள் மேற்கண்ட கட்சிகளில் இருக்கிறார்கள். இன்னும் பலர் திமுக, அதிமுக–வை ஒத்த மாநில அளவிலான த.மா.க., பா.ம.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகளில் இருக்கின்றனர்.

1. மக்கள் இக்கட்சிகளிலிருந்து வெளியேறும் கொள்கைத் தெளிவையும் மன வலிமையையும் பெற வேண்டும்.

2. இல்லாத சாதிக்கு உயிர் ஊட்டி பிறப்பையும், வாழும் இடத்தையும், செய்யும்/செய்த தொழிலையும் காரணமாக காட்டி கீழ்சாதி–மேல்சாதி சகதியில் மூழ்கி பறையர்கள், பள்ளர்கள், அருந்ததியர்களை ஒதுக்கி, ஒடுக்கி இந்துத்துவ பாசிசத்திற்கு சேவை செய்வதை தலித்துகள் அல்லாத பெரும்பான்மையான மக்கள் கைவிடவேண்டும். இவை இரண்டையும் செய்யும் துணிவு வரப் பெற்றால் ஏகாதிபத்தியங்களின் விருப்பத்திற்கு நாம் பட்ஜெட் போடாமல் நம் விருப்பத்திற்கு, நம் தேவைக்கு நாம் சுதந்திரமாக, ஜனநாயகமாக பட்ஜெட் தாக்கல் செய்ய முடியும்.

ஏனெனில் சாதிய உறவுகள் சாதிக்கொரு தொழிலோடு பிணைக்கப்பட்ட நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளோடு கட்டுப்படுத்தப்பட்டு வருவதால், நமது சமூகத்தில் தொழில் போட்டி வணிகப் போட்டி தடுக்கப்பட்டு வருகிறது. சில சாதிகளே தொழில் வணிகங்களில் பங்கேற்கவும் பொருள் சேர்க்கவும் வினியோகிக்கவும் நுகரவும் முடிகிறது. பல அடிமைப்பட்ட சாதிகள் வருமானம் இல்லாத சமூக மதிப்பில்லாத இழிவான தொழில் செய்ய நிர்பந்திக்கப்பட்டுள்ளதால் அவர்கள் உபரி இலாபம் இன்றி தொடர்ந்து தொழில் வணிகத் துறைகளில் தலையீடு செய்யமுடியாமல் போகின்ற நிலைமையால் சுதந்திரமான சனநாயகமான தொழில் வளர்ச்சி இந்தியாவில் தடுக்கப்பட்டே வந்துள்ளது. இப்படிப்பட்ட சனநாயகம் அற்ற சமுதாய அமைப்பானது இந்துத்துவா சனாதன சமூகம் நின்று நிலவுவதை உறுதி செய்கிறது. இக்கடைமையை நிறைவேற்றும் பரம்பரை உற்பத்தி உறவின் பாதுகாவலனாக விளங்கும் பாரதிய சனதா மற்றும் அது போன்ற அரசியல் கட்சிகளின் ஆட்சிகள் வல்லரசுகளின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு இத்தகைய மக்கள் விரோத, தேச விரோத, மனித நேயம் அற்ற பட்ஜெட்டுகளை தாக்கல் செய்கின்றனர். சாதிய உணர்வுகளையும், உறவுகளையும் உதறித் தள்ளுவதுதான் தலித்துகளையும் இதர சமூக மக்களையும் ஒன்றிணைக்கும் சனநாயக சமூகத்துக்கான திறவுகோலாகும். அந்த வழியில் நடைபோடும்– அடித்தட்டு, ஏழை நடுத்தர மக்களின் சனநாயகத்துக்காக போராடும் தமிழக மனித உரிமைக் கழகத்தில் இணையுங்கள், சாதி ஒழிப்பே தாழ்த்தப்பட்டோர் விடுதலை, தாழ்த்தப்பட்டோர் விடுதலை சனநாயகத்துக்கான போராட்டத்துடன் இணைந்துள்ளது. சனநாயக உரிமைக்கான போராட்டமானது சனநாயக மறுப்பாளர்களை வீழ்த்தும் போராட்டத்துடன் இணைந்துள்ளது.

## கே.எம். வீரமுத்து மறைவு!

பட்டுக்கோட்டை, டிச.3–ஆதிதிராவிடர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளரும், இரட்டைமலை சீனிவாசன் மாணவர் இல்ல நிறுவனராகவும் 40 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய கே.எம்.வீரமுத்து(வயது70) பட்டுக்கோட்டையில் காலமானார். தமிழக மனித உரிமைக் கழக பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன், மாநில செயற்குழு உறுப்பினர் கோட்டை. க. ராசமாணிக்கம் மற்றும் அனைத்து பிரமுகர்களும் வீரமுத்துவின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர். இவர் 40 ஆண்டுகளுக்கு முன்னரே தேநீர் விடுதிகளில் நிலவிய இரட்டை குவளை முறையை எதிர்த்தும் தலித் மக்கள் மத்தியில் நிலவிய இழிவான அடிமை வேலைகளை கை விட வலியுறுத்தியும் போராடியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

## திரு. எஸ்.செல்லையா மறைவு

பட்டுக்கோட்டை அருகேயுள்ள நடுவிக் கோட்டை கிராமத்தின் முதுபெரும் சமூகப் போராளியும், இந்திய தேசிய விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான திரு. எஸ். செல்லையா அவர்கள் 22.11.99 அன்று இயற்கை எய்தினார். தன் இளமைப் பருவம் முதற்கொண்டு தலித் மக்களின் உரிமைகளுக் காகவும், சுயமரியாதைக்காகவும் பாடுபட்டவர். 80 வயதிலும் தளரா உறுதியுடன் செயல்பட்ட அவரது உழைப்பு அளப்பரியது. அவருக்காக வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் தமிழக மனித உரிமைக் கழகத்தின் சார்பில் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 29-02-2000இல் தமிழக மனித உரிமைக் கழகம் தஞ்சையில் மாபெரும் கண்டன பேரணி-ஆர்ப்பாட்டம்.

**பண்ணையார் - கிராம நிர்வாக அலுவலர் - அருணாசல மண்கொண்டாருக்கு எதிராக ஆயிரம் பேர் திரண்டனர்.**

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வட்டம் வீரக்குடியில் தலித்துகளுக்கு அரசு வழங்கிய குடியிருப்பு மனை ஒரு ஏக்கர் 68 செண்ட் நிலத்தை தன் அரசியல் சாதி அதிகார பணபலத்தால் வஞ்சனையாக பிடுங்கிக் கொண்ட அதே ஊரைச் சேர்ந்த அருணாசல மண் கொண்டாரிடமிருந்து இழந்த மண் உரிமையை மீட்க எழுச்சியுடன் போர்க்கோலம் பூண்டது தமிழக மனித உரிமைக் கழகம்

* தலித்துகளுக்கு வழங்கப்பட்ட நிலத்துக்கான பட்டா உரிமையை ரத்து செய்து அருணாசல மண்கொண்டார் பெயருக்கு பட்டா வழங்கிய வருவாய்த்துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரியும்.

* மாவட்டத்தின் பல பகுதிகளில் குறிப்பாக மதுக்கூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி, திருவோணம், சேதுபாவாசத்திரம், ஒரத்தநாடு பகுதிகளைச் சேர்ந்த தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், இசுலாமியர், கிறித்துவர்களுக்கு குடிமனை இல்லாத அனைவருக்கும் குடிமனை வழங்கிடக் கோரியும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* நீண்டகாலமாக பஞ்சாயத்து, பொதுப்பணித் துறை, ஆறு, குளம், மேய்ச்சல், தரிசு போன்ற புறம்போக்கு நிலங்களிலும், கோவில் மடங்களுக்குச் சொந்தமான இடங்களிலும் குடியிருப்போருக்கு பட்டா வழங்கிடக்கோரியும்.

* தலித்துகள் மற்றும் இதர சமூகங்களைச் சேர்ந்த குடியிருப்பு மனையில்லாத மக்களுக்கு வழங்கப்படும் குடியிருப்பு மனையின் அளவை 3 செண்டிலிருந்து 5 செண்டாக உயர்த்திடக் கோரியும்

நடைபெற்ற இப்பேரணி, ஆர்ப்பாட்டத்திற்கு கழகத்தின் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் தலைமை தாங்கினார். சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணியின் உறுப்பியக்கமான தியாகி இமானுவேல் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் பூ. சந்திரபோசு அவர்கள் ஆர்ப்பாட்டத்தை விளக்கி சிறப்புரை ஆற்றினார். கோரிக்கைகளை வலியுறுத்தி தோழர்கள் சி. மோட்ச குலசேகரன், கோட்டை க. இராசமாணிக்கம், மருதசெல்வராசு, கு. பன்னீர்செல்வம், ப. வாசகன், குமரன்தாசு, வீரக்குடி இராசேந்திரன், பழனிச்சாமி, வடசேரி இளங்கோவன் மற்றும் முன்னணி தோழர்கள் பேசினார்கள்.

தஞ்சை மாவட்ட செயலாளர் தங்க. குமரவேலு வரவேற்புரை நிகழ்த்தினார். ஒன்றியச் செயலாளர்கள் வீர. மாரிமுத்துவும் குப்பு. குமரேசனும் நன்றி கூறினார்கள். நிறைவாக பொதுச்செயலாளர் மற்றும் கழக நிர்வாகிகள் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை மாவட்ட வருவாய்த் துறை அலுவலரிடம் கொடுத்தனர். ஆர்ப்பாட்டத்தில் திரளான பெண்களும் கலந்து கொண்டனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பட்டுக்கோட்டையில் தமிழ்தேசிய எழுச்சி கருத்தரங்கு

7-2-2000-இல் பட்டுக்கோட்டையில் தமிழ் தேசிய எழுச்சி கருத்தரங்கு அரங்க. குணசேகரன் தலைமையில் தமிழரங்கில் நடைபெற்றது. தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவருமான திரு. பழ. நெடுமாறன் அவர்களும் ம.தி.மு.க. வின் பிரச்சார செயலாளர் புதுக்கோட்டை பாவாணன் அவர்களும் த.தே.பொ.க. தோழர் வைகரை அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். வழக்கறிஞர் பிரகாசம் அனைவரையும் வரவேற்றார் கருத்தரங்கின் நிறைவில் செம்மணி புதைகுழி கொடுமைகளுக்கு காரணமான இலங்கை அதிபர் சந்திரிகாவின் கொடும்பாவி எரித்த தோழர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப் பட்டது. கூட்ட ஏற்பாடுகளை தமிழ் ஒலிப் பேரவை அமைப்பாளர் டாக்டர் இளங்கோவன் சிறப்பாக செய்திருந்தார்.

## 10.3.99-இல் பொதுக்கூட்டம்

மதுக்கூரில் தமிழக மனித உரிமைக் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் குட்டி. குமரேசன் தலைமைத் தாங்கினார். தோழர்கள் மதுக்கர், சிதம்பரம், பழனிச்சாமி, பி.முருகையன் முன்னிலை வகித்தார்கள். தோழர்கள் கு. பன்னீர்செல்வம், மோட்ச குலசேகரன், தங்க. குமரவேலு, வீர. மாரிமுத்து, பிச்சையம்மாள், கே. முனியன், அ. மறவுக்கா, பிறமையன், பாண்டியன் உட்பட பலர் பேசினார்கள். பொதுச்செயலாளர் அரங்க.குணசேகரன் சிறப்புரையாற்றினார்.

# களச் செய்திகள்

## சொக்கனாவூரில் தலித்துகளுக்கு கோவில் வழிபாட்டு உரிமை

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் சொக்கனாவூரில் 1997 ஆம் ஆண்டு, பறையடிக்க மறுத்தல், பிணம் சுட மறுத்தல், இழவு சொல்ல மறுத்தல் போன்ற சுயமரியாதைக் குரலை உயர்த்தியதால் அவர்களுக்கு கூலிவேலை இல்லை, கடைகளில் பொருள்கள் இல்லை எனத் தலித்துகளுக்கு பல்வேறு ஊர்க்கட்டுப்பாடுகளை விதித்த ஆதிக்கசாதியினரின் போக்கை, தமிழக மனித உரிமைக் கழகம் போராட்டத்தின் வாயிலாக அதிகாரிகள்- சொக்கனாவூர் ஆதிக்கசாதியினர் - தலித்துகள் தமிழக மனித உரிமைக் கழகத்தின் நிர்வாகிகள் ஆகிய முத்தரப்பு பேச்சு வார்த்தையில் சமுதாயப் புறக்கணிப்பு விலக்கப்பட்டும், தலித்துகள் இதுவரை செய்துவந்த இழிவு அடிமை வேலைகள் நிரந்தரமாக நிறுத்தப்பட்டும், சுமுகமானநிலை தோற்றுவிக்கப்பட்டது.

ஆனால், மீண்டும் அதே ஊரில், 1999-இல் வேறுசில சாதி ஆணவம் பிடித்தவர்கள் மீண்டும் அடிமை வேலை செய்யவேண்டும் என்றும், அப்படிச்செய்யாவிட்டால் கோவில் வழிபாட்டு உரிமை இல்லை என்றும் எடுத்த நடவடிக்கைகளை தமிழக மனித உரிமைக்கழகம் முறியடித்து 28.4.99-ல் பட்டுக்கோட்டை வட்டாட்சியர்- மதுக்கூர் போலிசார் சொக்கனாவூர் தமிழக மனித உரிமைக் கழக கிளை செயலாளர் வடிவேலு மற்றும் பலர் முன்னிலையில் நடைபெற்ற அமைப்புக்குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி- அடிமை வேலைகளை செய்யமுடியாது என்ற நிலை தொடர்ந்து உறுதிசெய்யப்பட்டும், கோவில் வழிபாட்டு உரிமை மீட்கப்பட்டும் உடன்பாடு செய்யப்பட்டது.

## பஞ்சமிநில மீட்பு இயக்கம், தமிழ்நாடு

1994ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் நாள் பஞ்சமி நில மீட்பு போரில் தலித் போராளிகள் ஜான் தாமஸ், ஏழுமலை ஆகியோர் போலீசாரின் துப்பாக்கிச் சூட்டில் தங்கள் இன்னுயிரை ஈந்தனர். அதைத் தொடர்ந்து உருவான தலித் போராட்டக் கூட்டுக்குழு, பஞ்சமிநில மீட்பு இயக்கத்தின் பணிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட தொய்வை சீரமைக்கும் வகையில் திரு. பெ. சந்திரசேகரன், சு. நடராசன், ஆர்.கே. சுவாமிநாதன் ஆகியோர் தலைமையில், உயிர்நீத்த மாவீரர்கள் ஜான்தாமஸ், ஏழுமலை நினைவுநாள் 10.10.99 ஞாயிறு அன்று அதே காரணையில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழக மனிதஉரிமைக் கழகத்தின் சார்பில் பொதுச்செயலாளர் அரங்க. குணசேகரன் கலந்துகொண்டு மாவீரர்களின் நினைவைப் போற்றிப் பேசினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புதுக்கோட்டை மாவட்டச் செய்தி

15–2–2000ல் கறம்பக்குடியில் த.ம.உ.க. வின் மாவட்ட செயற்குழு கூட்டம் செயலாளர் வி.கே. ரவி, தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் தங்கையா மாணவரணி செயலாளர் முனியய்யா, முன்னாள் ஒன்றிய செயலாளர் கி. இராசேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நரங்கிப்பட்டு பழனிவேல் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் இயக்கத்தின் வளர்ச்சி, நிதி நிலை குறித்தும் கரம்பக்குடியில் டாக்டர் அம்பேத்கர் சிலை நிறுவுவது பற்றியும் விவாதிக்கப்பட்டது. ஆவுடையார் கோயில் ஒன்றியச் செயலாளர் எஸ். கணேசன் தங்கள் பகுதியில் கழகம் ஆற்றிய பணிகள் குறித்து விரிவாக பேசினார்.

**நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்:**

1. கறம்பக்குடி பேரூராட்சியில் வணிக வளாகத்தில் தலித்துகளுக்கு கடைகள் ஒதுக்குமாறு பேரூராட்சியையும், தமிழக அரசையும் கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. கருக்காகுறிச்சி அருகே தொழிற்பேட்டை அல்லது கலைக் கல்லூரி ஒன்றினை நிறுவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இறுதியில் கறம்பக்குடி ஒன்றிய செயலாளர் கோவிந்தன் நன்றி கூறினார்.

### விடுதலைச் சிறுத்தைகளின் தமிழக-புதுவை மாநில கொள்கை பரப்புச் செயலாளர் தோழர் வடிவேலு உட்பட

## 21 பேருக்கு ஆயுள் தண்டனை!

இராசிவ் கொலை வழக்கை விசாரித்த தனி நீதிபதி நவநீதனும், தலித்துகளுக்கு எதிரான சாதிவெறிக்கும்பலின் மூளையாக விளங்கிய பாண்டுரெங்கன் கொலை வழக்கை விசாரித்த நீதிபதி கணேசனும் முறையே 26 பேருக்கு தூக்குத்தண்டனை என்றும், 21 பேருக்கு ஆயுள் தண்டனை என்றும் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று இந்திய அரசியல் சட்டம் சொல்கிறது. ஆனால் நீதிமன்றங்களோ மத்தியகால மனுநீதி அடிப்படையிலேயே தலித்துகளுக்கு ஒரு நீதி, ஆதிக்கசாதிகளுக்கு வேறொரு நீதி என்று சத்தியம் செய்கிறது.

கொலைக்களமாக தமிழக நீதிமன்றங்கள்!
கொலையாளிகளாக தமிழக நீதிபதிகள்!
பறையனைக் கொன்றால் விடுதலை!
பறையன் கொன்றால் ஆயுள் தண்டனை!
தூக்குதண்டனை!
நடப்பது சனநாயக ஆட்சியா? இல்லை
மனு தர்ம ஆட்சியா?

**நீதித்துறை-**

சனநாயகத்தின் மூன்றாவது தூணா?
சனாதனத்தின் மூன்றாவது தூணா?
சட்டமும் கோர்ட்டும் யாருக்கு? அது வெட்ட வெளிச்சமாகுதே மேட்டுக் குடிகளுக்கே!

## அம்பேத்கர் மய்யம்

தமிழ்நாடு அம்பேத்கர் மய்யத்தின் சார்பில் பட்டுக்கோட்டை மேலத்தெருவில் உள்ள ஆதி திராவிடர் உயர் நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் நான்காம் தொகுதிக்கான தேர்வுக்கு இலவச பயிற்சி முகாம் 2–ம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது. விழாவுக்கு அதன் தலைவர் வீரக்குடி. இராசேந்திரன் தலைமை வகித்தார். முதுபெரும் சமுதாயப் பெரியவர் நடுவிக்கோட்டை நடேச வாத்தியார் – தமிழ்நாடு ஆதி திராவிட முன்னேற்ற சங்க தலைவர் முன்னிலை வகித்தார். திரு. சாமிநாதன் ஆசிரியர், ஜெயபால், கோட்டை கா. இராசமாணிக்கம் த.ம.உ.க., இந்தியன் வங்கி நா. கோவிந்தராசு, தங்க. குமரவேலு, மாவட்ட செயலாளர்த.ம.உ.க., வழக்கறிஞர் பிரகாசம், சி. மோட்சகுலசேகரன் பிரச்சார செயலாளர் த.ம.உ.க, கனகராஜ் ஆகியோர் பயிற்சி மையத்தின் செயல்பாடுகளை பாராட்டியும், வாழ்த்தியும் பேசினார்கள். பிச்சையம்மாள், வீர. முருகேசன், தாமரைச்செல்வன் ஆகியோர் கவிதை படிக்க, வழக்கறிஞர் எம். செல்வராசு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். நிறைவாக தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொதுச்செயலாளர் அரங்க. குணசேகரன் வேலையில்லாத் திண்டாட்டம் குறித்தும், உலகமயமாதலால் ஏற்பட்டுள்ள தனியார்மயமாதலால் இடஒதுக்கீட்டு உரிமைகள் பறிபோவது குறித்தும் வலியுறுத்தி, இத்தகைய மய்யங்கள் வெறும் தேர்வுத் தயாரிப்பு பணியை மட்டுமல்லாது, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பட்டறைகளாகவும் செயல்பட வேண்டும் என்று பேசினார். திராவிடக்கழக மாநில பிரச்சார பாடகர் நாவலரசனும், தலித் இலக்கிய – இசைப்போராளி கவிஞர் பாண்டிச்சேரி சுப்பையன் அவர்களும் எழுச்சியான பாடல்கள் பாடி அரங்கை சிறப்பித்தனர். ஓவிய ஆசிரியர் வெள்ளைச்சாமி நன்றி கூறினார்.

## தஞ்சையில் கண்டன ஆர்ப்பாட்டம்

05.02.99–ல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக தமிழக மனித உரிமைக்கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. 31.01.99–ல் வடசேரி காமாட்சி அம்மன்கோவில் தைப்பூசவிழாவிற்கு வடசேரி தலித்துகள் காவடி எடுத்துச் சென்றதை தடுத்து நிறுத்தி தண்டாயுதபாணி என்ற தலித் இளைஞரைக் கட்டிவைத்து அடித்தும், இராசேந்திரன், சிவநேசன், சின்னத்துரை, கோவிந்தம்மாள் ஆகியோரை உருட்டுக்கட்டைகளால் தாக்கியும் கொடுமைப்படுத்திய சாதிவெறியர்களை கைது செய்யக்கோரியும், பட்டுக்கோட்டை டி.எஸ்.பி. மாரிமுத்துவின் தலித் விரோதப் போக்கை அம்பலப்படுத்தியும், தமிழக மனித உரிமைக் கழகத்தின் தஞ்சாவூர் மாவட்ட செயலாளர் தங்க. குமரவேலு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். பிரச்சாரச் செயலாளர் மோட்ச. குலசேகரனும். ஒன்றிய செயலாளர் வீர. மாரிமுத்துவும், மதுக்கூர் ஒன்றிய செயலாளர் குப்பு. குமரேசனும் கண்டன உரையாற்றினார்கள். பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் நிறைவுரையாற்ற ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர் இளங்கோவன் நன்றி கூறினார். போராட்டத்தின் வெற்றியாக வடசேரி சாதிவெறியர்கள் 8பேர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உயர் சாதிவெறியாட்டம்

தலித்துகள் பஞ்சாயத்து செய்ததைப் பொறுத்துக் கொள்ளாத சாதிவெறியர்கள் தலித் மூர்த்தி உள்ளிட்ட மூன்றுபேரைத் தாக்கினர். பேராவூரணி வட்டம், பொன்னாங்கண்ணிக்காடு கிராமத்தைச் சேர்ந்த தலித் மூர்த்தியும், அவரைச் சேர்ந்தவர்களும், இரண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மத்தியில் எழுந்த மோதலைத் தொடர்ந்து ஒரு தரப்பார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் 3.8.99–ல் இன்னொரு தரப்பாரையும் அழைத்து பஞ்சாயத்துப் பேசினார்கள். வழக்கமாக கட்டைப் பஞ்சாயத்துப் பேசும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அவர்கள், நம் சாதிப் பிரச்சினைக்கு பறையர்கள் பஞ்சாயத்து செய்வதா என்ற ஆத்திரத்தில் மூர்த்தியையும், அவரது நண்பர்களையும் பயங்கர ஆயுதங்களால் தாக்கினார்கள். எதிரிகள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவுசெய்யப்பட்டு கைது செய்யப்பட்டனர். படுகாயமடைந்த மூர்த்தியை 12 மணி நேரத்தில் மருத்துவமனையிலிருந்து குணமாகாத நிலையிலேயே டிஸ்சார்ஜ் செய்தார் டாக்டர் காந்தி. இதனைக் கண்டித்து கும்பகோணம் மாவட்ட மருத்துவ இணை இயக்குநரிடம் பிரச்சார செயலாளர் மோட்ச. குலசேகரன் சென்று முறையிட்டதைத் தொடர்ந்து, மூர்த்திக்கு பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் முறையான மருத்துவ வசதி அளித்தும், டாக்டர். காந்தியின் மீது இலாகபூர்வ விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

## சாமிவரங் கொடுத்தாலும் தடுக்கும் பூசாரிகள்...

ஆதிதிராவிட மக்கள் சிறுதொழில், வணிகம், மோட்டார் வாகனங்கள் போன்ற தொழில்களில் ஈடுபட உருவாக்கப்பட்டுள்ள தாட்கோ நிர்வாகம் பரிந்துரை செய்த பயனாளிகளுக்கு கடன் கொடுக்க மறுக்கும் பூசாரிகளாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் சாதிக் கண்ணோட்டத்தால் நாடெங்கும் பல்லாயிரம் பேர் நாள் தோறும் அலைக்கழிக்கப்பட்டு அல்லுருகின்றனர். ஒட்டங்காடு ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த நல்லமான் புஞ்சையிலிருக்கும் தலித் நா.செல்வராஜ் என்பவர் எல்லாவித ஆவணங்களையும் ஒப்படைத்து, தஞ்சாவூர் தாட்கோ நிர்வாக மேலாளர் முன்வைப்புத் தொகை, மானியத் தொகை ஆகியவற்றை அனுப்பி வைத்தும், பேராவூரணி பாரத ஸ்டேட் வங்கி இரண்டு ஆண்டுகளாக கடன் தர மறுத்து வந்தனர். தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் தலைமையில் வங்கி முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதாக துண்டறிக்கை வெளியிட்டவுடன், பயனாளி நா. செல்வராசு அவர்களுக்கு பயனிகள் ஏற்றிச் செல்லும் வேனுக்கான கடன் தொகையை வங்கி நிர்வாகம் கொடுத்தது.

## கருப்பு அறிக்கை

தலித் மனித உரிமைக்கான தேசிய பிரச்சார இயக்கத்தின் சார்பில் 1.12.99இல் நடைபெற்ற கருப்பு அறிக்கை வெளியிட்டு நிகழ்ச்சியில் தமிழக மனித உரிமைக் கழகத்தின் சார்பில் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் கலந்து கொண்டு பேசினார்.

## பேருந்து நிழற்குடை வடிவில் சாதிவெறி

பட்டுக்கோட்டை – அறந்தாங்கி சாலையில் உதயசூரியபுரத்தில் தலித் நாகமுத்து என்பவரின் சாலையோர பட்டா நிலத்தை அடைக்கும் வகையில் நிழற்குடை. பகுதி சாதிவெறியர்களில் பழனிச்சாமி, சுப்பையன், சுகந்தி, அண்ணாதுரை ஆகியோரின் சூழ்ச்சி வலையில் விழுந்த பேராவூரணி திட்ட ஆணையர், வழக்கமாக பயணிகள் நிற்கும் இடத்தை விட்டுவிட்டு தலித் நாகமுத்து நிலத்திற்கு எதிரே பேருந்து நிழற்குடை கட்டிவந்தனர். தமிழக மனிதஉரிமைக் கழகம் தலையிட்டு, அதிகாரிகளின்–சாதிவெறியர்களின் சதியை அம்பலப்படுத்தி நிழற்குடை கட்டும் வேலை தடுக்கப்பட்டுள்ளது. பாதி கட்டப்பட்ட நிலையில் இருக்கும் நிழற்குடை கட்டிடத்தை அரசு அப்புறப்படுத்தாவிட்டால் இயக்கத்தின் சார்பில் அப்புறப்படுத்துவோம் என அரசை எச்சரிக்கிறோம்!

## தமிழக மனிதஉரிமைக் கழகத்தின் சேதுபாவாசத்திரம் வட்டார மாநாடு

ஒன்றியச் செயலாளர் வீர. மாரிமுத்து தலைமையில் 25.04.99இல் இரண்டாம் புளிக்காட்டில் நடைபெற்றது. மாநாட்டில் 500–க்கும் மேற்பட்ட இளைஞர்களும், பெண்களும் கலந்து கொண்டனர். மாநாட்டில் தியாகி இமானுவேல் பேரவையின் பொதுச்செயலாளர் பூ. சந்திரபோஸ், தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொதுச்செயலாளர் அரங்க. குணசேகரனும் சிறப்புரையாற்ற, இயக்கத்தின் முன்னணித் தோழர்கள் மோட்சகுலசேகரன் பிரச்சார செயலாளர், தங்க. குமரவேலு மாவட்ட செயலாளர், கு. பன்னீர்செல்வம் மாநில துணை பொதுச் செயலாளர், சிவகங்கை மாவட்ட பொறுப்பாளர் குமரன்தாஸ், மதுக்கூர் பழனிச்சாமி, பட்டுக்கோட்டை ஒன்றிய செயலாளர் நாட்டுச்சாலை செல்வம், கே.வி. முனியன், நீலகண்டன் ஆகியோரும் பேசினார்கள். இரண்டாம் புளிக்காடு கருணாநிதி நன்றி கூற மாநாடு நிறைவுற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டாரத்தில்

## சமீபத்தில் நடைபெற்ற தலித்துகள் மீதான அடக்கு முறைகள்

கோட்டை க. இராசமாணிக்கம்

பட்டுக்கோட்டை வட்டம், வாட்டாதிக்கோட்டை காவல் சரகம் குறிச்சி அண்ணா நகரைச் சேர்ந்த அம்மாசி மகன் கேசவன் வயது(20) தனது வீட்டு ஆட்டுக்குட்டியை அதே ஊரைச் சேர்ந்த பொதியப்பன் என்பவரின் வீட்டில் கட்டிக்கிடப்பதாக கேள்விப்பட்டு 27–8–99 அன்று ஓட்டிவரச் சென்ற போது பெரியய்யா என்பவர் கேசவனை சாதியை குறிப்பிட்டு இழிவு படுத்தி பேசி செருப்பால் அடித்து விட்டார். இது குறித்து வாட்டாதிக்கோட்டை காவல் நிலையத்தில் கேசவன் புகார் கொடுத்தார். புகார் அடிப்படையில் அதே ஊரைச் சேர்ந்த தேவர் சாதி தலைவர்களுடன் காவல் நிலையம் சென்று பெரியய்யா போலிசாரின் மற்றும் தமிழக மனித உரிமைக் கழாத்தின் இளைஞரணி செயலாளர் கோட்டை இராசமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் கேசவனிடம் தான் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டதின் பேரில், தமிழக மனித உரிமைக் கழகத்தைச் சேர்ந்த கோட்டை இராசமாணிக்கம் என்பவரும் உடன் இருந்து இனிமேல் நடவடிக்கை தேவையில்லையென ஒரு சமரச முடிவுக்கு வந்தனர். ஆனால் அன்று இரவே சுமார் 8 மணி அளவில் 1. ஆத்மநாதன், 2. ஜெயசங்கர், 3. முருகன், 4. லட்சுமணன், 5. சண்முகம் 6. பிரபு, 7. முருகன், 8. பெரியய்யா, 9. அய்யப்பன், 10. கருணன் மற்றும் 20–க்கும் மேற்பட்ட தேவர் சாதியைச் சேர்ந்தவர்கள் கேசவன் வீட்டிற்குள் புகுந்து அவரது தந்தை அம்மாசி, தாய் வடுவம்பாள் இருவரையும் தடியால் தாக்கிவிட்டு 1 கிமீ தொலைவில் உள்ள தங்கள் தேவர் தெருவுக்கு கேசவனை துக்கிக் கொண்டு சென்று மரத்தில் கட்டி வைத்து – நாங்கள் உன்னை அடித்தால் எங்களிடம் தானே பஞ்சாயத்து சொல்ல வேண்டும். நீ ஏன் காவல் நிலையம் சென்று புகார் செய்து எங்களை அவமானபடுத்தினாய் என்றும், நேற்று ஒருவன் அடித்ததால் காவல் நிலையம் போனாய், நங்கள் இப்போது உன்னை அடித்து கொள்ளுகிறோம் உனக்காக யார் வருவார் பார்ப்போம் என்றும் பேசி மீண்டும் செருப்பால் அடித்துள்ளனர், இது பற்றி தகவல் கிடைத்து கேசவன் அண்ணன் நவீன் என்பவரும், அக்கா இந்திரா என்பவரும் இரவு 10 மணிக்கு பட்டுக்கோட்டையில் இருந்த இயக்க தோழர் கோட்டை இராசமாணிக்கத்திடம் கூறியவுடன். அங்கிருந்து காவல் துறை மாவட்ட அதிகாரிகளிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுத்து கேசவனை மீட்டுத்தர வேண்டும் என்று கூறி விட்டு உடன் கட்சித் தோழர்களுடன் ஒரு காரில் சம்பவ இடத்திற்கு நேரே சென்றார். அதற்குள் காவல் துறையும் சென்று கேசவனை மீட்டு காவல் நிலையம் வந்தனர். இயக்கத் தோழர் கோட்டை இராசமாணிக்கம் குற்றவாளிகளை உடனே கைது செய்யுங்கள் இல்லையேல் போராட்டம் வெடிக்கும் என காவல் துறையிடம் கூறிவுடன் 28–8–99 அன்று 10 பேர் மீது குற்ற எண் 27–9–99 சட்ட பிரிவுகள் 147, 448, 323, ஐ.பி.சி. மற்றும் 3(1)(x)எஸ்ஸி/எஸ்டி–யின்படி பதிவு செய்து ஆறுபேரை கைது செய்யுமாறு இயக்கத்தின் சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அதற்கு பின்னர் 22 நாட்களுக்கு பின் பிணையில் வெளிவந்து 2 மாத காலம் காவல் துணை கண்காணிப்பு அலுவலகத்தில் தினம் கையொப்பம் இட்டு வந்தனர் தொடர்ந்து குறிச்சி தலித் மக்களுக்கும் கேசவனுக்கும் தொடர்ந்து தமிழக மனித உரிமைக் கழகம் சார்பில் பாதுகாப்புக்கு உறுதி அளிக்கப்பட்டது.

## 5.12.99-ல் வாட்டாத்திக்கோட்டை சப் இன்ஸ்பெக்டரின் சாதிவெறி-லஞ்ச ஊழல்

பட்டுக்கோட்டை வட்டம், இடயாத்தியில் தலித் மாணவர் தங்கப்பன் தன் வாழைக் கொல்லையில் மாட்டை மேய்த்து பலனை அழித்த கோனார் சாதியினரை கண்டித்தபோது, கோனார் சாதியைச் சேர்ந்தவர்களால் தாக்கப்பட்டார். பாதிக்கப்பட்ட தலித் தங்கப்பன் கொடுத்த வன்கொடுமைத் தடுப்பு புகார் மனுவை தள்ளுபடி செய்த வாட்டாத்திக்கோட்டை சப் இன்ஸ்பெக்டர் அய்யப்பன், எதிரிகளிடம் பணம் வாங்கிக்கொண்டு வெறும் ஐ.பி.சி. பிரிவின்கீழ் மட்டும் வழக்குப்போட்டு எதிரிகளை காப்பாற்றி விட்டார். பிறகு தமிழக மனிதஉரிமைக் கழகம் தலையிட்டு, சப் இன்ஸ்பெக்டர் மீது மேல் அதிகாரிகளுக்கு புகார் செய்ததைத் தொடர்ந்து, பட்டுக்கோட்டை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எதிரிகளை வன்கொடுமைத் தடுப்புப் பிரிவில் கைது செய்துள்ளார். சப் இன்ஸ்பெக்டர் அய்யப்பன் மீது வன்கொடுமைத் தடுப்பச்சட்டப் பிரிவு 4–ன்படி கடமை தவறிய குற்றத்திற்காக தனிவழக்கு போடப்பட்டுள்ளது. தலித்துகளில் சிலரை லஞ்சம் கொடுத்து பொய் சாட்சியாக கொண்டுவந்த கோனார் சாதி வெறியர்களின் முயற்சியும், பொய் சாட்சியமும் அம்பலப்பட்டுப் போனது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இடையாத்தியில் மீண்டும் தமிழக மனித உரிமைக் கழக கிளை அமைக்கப்பட்டுள்ளது.

## வாடியக்காட்டில்

தனியார் பேருந்தில் செக்கராக பணியாற்றிய தலித் மகேந்திரன் டிக்கெட் எடுக்காத அத்திவெட்டி கள்ளர்சாதி இளைஞர்களை ஏன் டிக்கெட் எடுக்கவில்லை என்று கேட்டதற்காக பேருந்திலே வழி மறித்து தாக்கப்பட்டார். த.ம.உ.க. வழிகாட்டலில் புகார் செய்யப்பட்டு எதிரிகள் கைது செய்யப்பட்டனர். 3 மாதங்களுக்கு பிறகு தான் வேலை செய்த முதலாளியிடம் கூலி வாங்க அத்திவெட்டி கிராமத்திற்கு சென்ற வாடியக்காடியை சேர்ந்த வேறு மூன்று தலித்துகள் மீது மேற்படி எதிரிகள் கொலை வெறியுடன் தாக்கினர். வாடியக்காடு கிளைப் பொறுப்பாளர்கள் இரவி, பிரமையன் ஆகியவர்கள் கொடுத்த தகவலின் பேரில் த.ம.உ.க.வால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு எதிரிகள் கைது செய்யப்பட்டனர்.

## பொதுக்கூட்டம்

மதுக்கூர் அருகேவுள்ள வாடியக்காட்டில் 27–3–99 த.ம.உ.க. வின் கிளை துவக்க விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு பிறமையன் தலைமை தாங்கினார். பிரச்சார செயலாளர் மோட்ச குலசேகரன், தங்க.குமரவேலு, கு. பன்னீர்செல்வம், குப்பு குமரேசன், நாட்டுச்சாலை செல்வம், ஆகியவர்கள் பேசினார்கள். பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் கழக கொடியேற்றி சிறப்புரையாற்றினார். முடிவில் வாடியக்காடு இரவி நன்றி கூறினார்.

## பெண்களும் சம உரிமையையும்!

பெண்களுக்கு வேளான்மை கட்டுமானப்பணி சார்ந்த வேலைகளில் அரைச்சம்பளம் வழங்கும் மத்திய, மாநில அரசுகளே! பேருந்து இரயில்களில் பயணம் செய்ய பெண்களுக்கு அரைக் கட்டணம் வாங்கத் தயாரா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒன்றிய செயற்குழுக் கூட்டம்

தமிழக மனித உரிமைக் கழகத்தின் சேதுபாவாசத்திரம் ஒன்றிய செயற்க்குழுக் கூட்டம், 14.11.99 ஞாயிறு அன்று பேராவூரணி பயனியர் விடுதியில் ஒன்றியச் செயலாளர் வீர. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கே.வி. முனியன், மணி, வேங்கட்ராமன், பூவாமை சூரியமூர்த்தி, ஆண்டிகாடு மாதவன் மரக்காவலசை மூர்த்தி, துறையூர் ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். வீரக்குடியிலிருந்து திரளாக தலித்துகள் கலந்து கொண்டு தங்கள் குடியிருப்பு மனை மாறிப்போனது குறித்து இயக்கத்தில் முறையிட்டனர். மாவட்டச் செயலாளர் தங்க குமரவேலுவுடன், பிரச்சார செயலாளர் மோட்ச. குலசேகரனும், மாநில செயற்குழு உறுப்பினர் கோட்டை கா.இராசமாணிக்கமும். கலந்து கொண்டு இயக்க வளர்ச்சி குறித்து பேசினார்கள். பொதுச் செயலாளர் அரங்க குணசேகரன் சிறப்புறையாற்றினார்.

## தோழர் இரவிந்திரன்படுகொலை

10-1-2000 ல் என்கவுண்ட்டர் என்ற பெயரில் தருமபுரியில் மீண்டும் 1980 களில் கொடூரம் தொடர்கிறது. உழைப்பாளர் மாமன்றத்தின் செயலாளர் பொறியாளர் தோழர் இரவிந்திரன் கருணாநிதியின் போலீசாரால் காட்டுமிராண்டித் தனமாக சுட்டுக் கொல்லப்பட்டதை தமிழக மனித உரிமைக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது. 'உரிமைப்போராட்டம்' தோழருக்கு வீரவணக்கம் செலுத்துகிறது.

## கேட்கிறோம்

தமிழகத்தில் பேருந்து கட்டண உயர்வா, அரிசி விலை உயர்வா, மின் கட்டண உயர்வா, இதோ பாருங்கள் அண்டை மாநிலங்களின் கட்டணங்கள் என நாளேடுகளில் பட்டியல் வெளியிட்டு ஒப்பிட்டு காட்டும் கருநாநிதி அரசே!

இதே அண்டை மாநிலங்களில் உள்ள கலைக் கல்லூரிகள், தொழில் நுட்ப கல்லூரிகள், பாலிடெக்னிக், ஐடி. போன்ற கல்வி நிறுவனங்களில் தலித் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையையும்-அதே படிப்புகளுக்கு தமிழகத்தில் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையையும் ஒப்பிட்டு பட்டியலிடதவாரா.

## மதுக்கூரில்

1999 ஜூலையில் மதுக்கூர் நொச்சிக்குளம் தலித்துகள் ஜிவா, ராஜா உள்ளிட்ட மூன்று பேர்கள் மீது அதே ஊரைச் சார்ந்த குதிரைக்கார குடும்பம் என்று அழைக்கப்படும் வெள்ளாள சாதி வெறியர்களால் இரவில் திருவிழா பார்த்து விட்டு வரும்போது காரணம் ஏதும் இன்றி தாக்கப்பட்டனர். த.ம.உ.க. சார்பில் சுவரொட்டி இயக்கம் நடத்தப்பட்டு எதிரிகள் கைதி செய்யப்பட்டனர். ஆவேசமடைந்த தலித் இளைஞர்கள் எதிரிகளின் வாழை, தென்னை, தேக்கு மரங்களை வெட்டி அழித்தனர்.

## ஆறுமாத கர்பிணியான தலித் சித்ராவை கருக்கலைப்பு செய்ய முயற்ச்சி

பட்டுகோட்டை காவல் சரகம் கோட்டாகுடி இந்து பறையர் இனத்தைச் சேர்ந்த கணேசன் மகள் சித்ரா (23)க்கும் அதே ஊரைச் சேர்ந்த மணிக்கோனார் மகன் பழனிவேலு (31)க்கு 2 ஆண்டுகாலமாக ஒருவரை ஒருவர் காதலித்து தனிமையில் பழகி வந்தனர். இதன் காரணமாக சித்ரா 6 மாத கற்பிணியானாள் இதனால் இருவரும் 28-12-99 அன்று ஊரை விட்டே ஓடிவிட்டனர். உடனே கோனார் இனத்தைச் சேர்ந்த 5 நபர்களும் தலித் இனத்தைச் சேர்ந்த 2 நபர்களும் இருவரையும் 29-12-99 அன்று தேடி பிடித்து வந்து இருவரையும் பிரித்து விட்டனர். கற்பிணி சித்ராவின் நிலைப்பற்றி ஊர் பெரும் நிலக்கிழாரான நாயக்கரிடம் பஞ்சாயத்து நடப்பதாக கூறி தலித்துக்கள் சென்றுள்ளனர். அங்கு எதுவும் பேசாமல் நாயக்கர் வாய்க்கு வந்தவாறு தலித்துகளை பேசி விட்டு ரூபாய் 2500 கொடுத்து சித்ராவை கருக்கலைப்பு செய்து கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பியுள்ளார்.

இதை கேட்டுக்கொண்ட முன்னால் ஊராட்சி தலைவர் வி. மகாலிங்கம் தலைமையில் கடந்த 3.1.2000 அன்று தற்போதைய ஊராட்சி மன்ற தலைவர் கோனாரும் கோனார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் சித்ராவை பட்டுக்கோட்டை மருத்துவமனைக்கு கருக்கலைப்பு செய்ய அழைத்து வந்தபோது அவர்கள் கண்களில் மண்ணை தூவி விட்டு அருகே இருந்த காவல் நிலையத்திற்குள் ஓடிவிட்டாள். சித்ராவுக்கு ஆதரவாக அவ்வூரைச் சேர்ந்த தலித்து இளைஞர்கள் சேகர் தலைமையில் தமிழக மனித உரிமைக் கழகத் தோழர் கோட்டை இராசமணிக்கத்திடம் கூறியவுடன் காவல் நிலையம் சென்று சித்ராவை விசாரித்துவிட்டு ஆய்வாளரிடம் புகார் ஒன்றை கொடுத்து மாப்பிள்ளை பழனிவேலுவை கொண்டு வரும்படி கேட்டுககொண்டார் அதன்படி 5.1.2000 அன்று காவல் நிலையத்தில் கோனார்கள் வழக்கிஞர் மூலம் ஆசர் செய்தனர்.

பழனிவேலும் தான் திருமணம் செய்து கொள்வதாகவும், கோனார் சாதியைச் சேர்ந்தவர்ககள்தான் என்னை தடுத்து கடத்தி வைத்திருந்தார்கள் என்று ஆய்வாளரிடம் கூறி சித்ராவை எனக்கு திருமணம் செய்து வையுங்கள் என்றார் அதன் அடிப்படையில் கோட்டை இராசமாணிக்கம் இருவருக்கும் திருமணம் செய்து வைத்து பாதுகாப்பாக அவரது ஆதரவில் வாழ்கின்றனர். ஆனால் கோட்டாகுடி தலித்துகளுல் சிலர் கோனார்களுக்கும் நாயக்கர் குப்புசாமிக்கும் பயந்து போய் திருமணத்திற்கு ஆதரவாக இருந்த ஒன்பது வீட்டுகாரர்கள் மீது சாதி முட்டு என்று கூறி சமூக புறக்கணிப்பு செய்துள்ளார்கள். மேலும் 17.1.2000 அன்று கன்றுப்பொங்கலான அன்று ஏன் எங்கள் பகுதிக்கு வந்தாய் உன்னைத்தான் தள்ளி வைத்துள்ளோமே என்று கூறி மகாலிங்கம் தலைமையில் சேகர் என்பவரை பலமாக தாக்கியுள்ளனர் அவர் தற்போது தஞ்சை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## போலி முதலாளிய சனநாயகம் த்தூ.....

பொறுக்கிக் குணம்
அரசியலில் மட்டுமல்ல
இலக்கியத் தளத்திலும் கூட.

கெஞ்ச வைப்பது
வஞ்சம் தீர்ப்பது
அஞ்சிச் சாவது
லஞ்சம் பெறுவது
பொறுக்கி அரசியலில்
பிரிக்க முடியாத அவலங்கள்.

காட்டிக் கொடுப்பது
கூட்டி விடுவது
நீட்டி முழக்குவது
ஒட்டு அரசியலில்
மீட்க முடியாத அசிங்கங்கள்.

மடிப்புக் கலையாத துண்டு
மண்ணில் புரளும் வேஷ்டி
விரலை மறைக்கும் மோதிரம்
கழுத்தை நெறிக்கும் சங்கிலி
திராவிடத் தலைவர்களின்
ஒப்பனை விகாரங்கள்.

சொறிந்து கொடுப்பது
வலிந்து திணிப்பது
துணிந்து புளுகுவது
மிகைபடப் புகழ்வது
படைப்பிலக்கியத் தளத்தில்
புதுவகை அலித்தனம்.

மேடைகளில் நாய்கள்
வீதிகளில் பேய்கள்
போலி முதலாளிய சனநாயகம் த்தூ...

**தலித் சுப்பையா**-புதுச்சேரி.

## நெருப்பின் மிச்சமாய் அவன்

கண்ணே என்றான், மணியே என்றான்,
வண்ண நிலவே என்றான்,
வதனத்திற்கு ஈடேது என்றான்,
ஊண் உறக்கம் மறந்தேனென்றான்.
உயிர்நீயே என்றான்.


கண்மூடி நானும்,
கற்சிலையானேன்
கட்டியணைத்தான்,
கன்னத்தில் முத்தமிட்டான்,
கல்யாணமென்றேன்...
சாதியில் பேதமென்றான்,
சமூகம் ஏற்காதென்றான்.

கானகுறத்தியை கல்யாணம் முடித்தபோது,
வானவரும், வையமும்,
வாழ்த்தியதாய் கதை,
ஒட்டுச் செடியும் உயர்ரகமாகும்
கலப்பினக் கன்றைக் கூட
கனிவோடு ஏற்கும் காலம்

மனிதனுள் மனிதனை வேறென்றால்,
விந்தையிலும், விந்தை – அந்த
நந்தனை எரித்த
நெருப்பின் மிச்சமாய் அவன்.

திண்டிவனம் **மா. மணிவேலன்**
*நன்றி மகளிர் சிந்தனை ஜீலை 96*

## கல்லறைகள்



தாஜ்மஹால் அழகானது!
மும்தாஜைப் புதைத்த
தாஜ்மஹால் மட்டுமா?
வாழ்வைப் புதைத்த
ஆலயக் கட்டிடங்கள்
அறிவைப் புதைத்த
பல்கலைக் கட்டிடங்கள்
சனநாயகத்தைப் புதைத்த
சட்டமன்றக் கட்டிடங்கள்
இந்தியாவின்
எந்தக் கல்லறைதான்
அழகாய் இல்லை !

நன்றி–**பாரதி புத்திரன்**
(சூரியச்சுடர்கள் தொகுப்பிலிருந்து)

www.tamilarangam.net



# யாரடா நாயே பரதேசி!...

இடஒதுக்கீடு அது
உரிமையா சலுகையா
அதட்டலாய் கேட்டார் அவர்
திகைத்து போகிறோம் நாங்கள்.

என்ன சொல்வது
கேட்பது நம்மைப் போல
சாதாரண ஆளில்லை
தத்துவங்களில் தேர்ந்த அறிவாளி.

எங்கள் சங்கடங்களை கண்டு
மகிழ்ந்தவர்
திருவாய் மலர்ந்தார்
இன்று நீங்கள்
பெறுவதெல்லாம் சலுகை!
பெறாததெல்லாம் உரிமை!

எங்களுக்கு அவமானமாய்
போய் விட்டது.
அவரது அகராதியில்
சலுகை என்றால் பிச்சை
நம்மை பிச்சைகாரன்
என்றல்லவா சொல்கிறார்.

பிச்சை என்றால் பிறர்தம்
பொருளை தானமாய் பெறுவது.

உழைப்பது நாம்
பலன்களில் நமக்கு பங்கில்லையா
கல்வியும் பதவியும்
யாரது உடமை
கேள்விச் சுமைகளால்
தலை கவிழ்ந்த எம்மை
தட்டி எழுப்புகிறது
ஓர்(கை) குரல்...

ஆம்!
ஆண்டைகள் போட்ட பிச்சை
என்றே வைத்துக்கொள்
ஏ! அறிவாளியே,
ஆண்டைகளிடம்
எங்களுக்கும் முன் கையேந்தியது
நீயும் உன் சாதியுமல்லவா?

எச்சி புத்திதான் எங்களுக்கு
அதனால் என்ன
நீயும் நக்கிப் பார்த்தவன் தானே.

உனக்கு தேன்
எங்களுக்கென்றால் மலமா
உனக்கு பதவி
எங்களுக்கென்றால் பிச்சையா?

நீ சுவைத்ததை
நாங்கள் சுவைக்கக்கூடாது
புரிகிறதடா உன் புதுவகை
தீண்டாமை !

சரி! நாங்கள் தயார்
இதுவரை பெற்றதையெல்லாம்
இழப்பதற்கு.

காலனி வீட்டை
சாப்பறையை
மலக்கூடையை
பிஞ்ச செருப்பை
செத்த மாட்டுக் கறியை
சவுக்கடியை
சாணிப்பாலை
சக்கிலிப் பட்டத்தை
இழக்க நாங்கள் தயார்.

நீ தயாரா !
மச்சு வீட்டை
வயல் வரப்பை
காசு பணத்தை
வெள்ளைச்சட்டை வேட்டியை
அரசு வேலையை
ஆளதிகாரத்தை
எண்ணெய் குளியல்
வாறல் காப்பு
பந்தா பரிவட்டம்
இப்படி இலவசமாய்
பெற்ற எல்லாவற்றையும்
இழக்க நீ தயாரா?
இப்போது சொல்லடா
பிச்சைகார நாய் யாரென்று.

— இமானுவேல்